R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM
SEPTEMBER 2018
மலர் 22
இதழ் 8

LINGA & CO LTD
ADVISORS ON LEGAL MATTERS & COMMUNITY WELFARE
V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist

46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909


THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# அரிதார அரசியல்

தமிழ்த் தேசிய அரசியல் தற்போது வடமாகாண சபையில் மையங்கொண்டுள்ளது போன்றதொரு தோற்றப்பாடு உருவாக்கப்படுகிறதா...?

வடக்கிலும் கிழக்கிலும் சிங்களத்தின் நில ஆக்கிரமிப்பிற்கெதிரான போராட்டங்கள் தொடர்கின்றன.

காணாமல் போகடிக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது வலிமிகுந்த போராட்டங்களை இன்னமும் கைவிடவில்லை.

இந்த முக்கிய செய்திகள் ஓரங்கட்டப்பட்டு, மாகாணசபைத் தேர்தல்களும், திறப்பு விழாக்களும், ‘கார்பொரேட்’ மீட்பர்களின் பேச்சுக்களும் நமது ஊடகங்களை நிரப்புகின்றன.

தமது பெருவணிக இலாபங்களுக்காக திரைமறைவில் அரசோடு பேசிக்கொண்டு, மக்கள் நலன்விரும்பி போல் தமிழ்த்தேசியம் பேசுவது தற்போதைய போக்கு.

இதற்கு முற்போக்கு அரிதாரம் வேறு பூசப்படுகிறது.

அடுத்த மாதமளவில் வடமாகாண சபையின் நிர்வாக காலம் முடிவடைகிறது.

தமது கட்சியின் உறுப்பினர்கள் அதிகளவில் சபையில் இருந்தாலும், முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தம்மைக் கண்டு கொள்ளாமல் தனிக் கோஷ்டி அமைத்து செயல்படுகிறார் என்ற ஆதங்கமும் ஆத்திரமும் தமிழரசுக் கட்சிக்கு உண்டு.

முதலமைச்சருக்கு எதிரான அனல் பறக்கும் பரப்புரையை இப்போதே ஆரம்பித்துவிட்டார் சபை உறுப்பினர் சத்தியநாதன்.

முதலமைச்சரோடு இருந்து செயல்படும் குழு, அடுத்த தேர்தலில் கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு சேருமா? இல்லையேல் தனித்து போட்டியிடுமா? என்ற அரசமரத்தடி விவாதங்கள் மிக விமரிசையாக நடக்கிறது.

இவை எதைக்காட்டுகிறது?.

மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளுக்கும், இந்த அதிகார விரும்பிகளுக்கும் இடையே பெருவெளி உள்ளதா...? ஆம்... உண்டு என்றே இந்த அதிகாரவாசிகளின் செயல்கள் மக்களுக்கு உணர்த்துகின்றன.

இதனை மாற்றியமைக்கும் வல்லமை யாருக்கு இருக்கிறது?.

இதே மக்களிடம்தான் அதை மாற்றும் அதிகாரமும் இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது அரசியல் தீர்வு பற்றியும், மாகாணசபைத் தேர்தல் வரும்போது அபிவிருத்தி பற்றியும் பேசுவதே இவர்களின் பொழுதுபோக்காகி விட்டது.

இந்த கானல்நீர் கனவான்களை நம்புவதே மக்களின் தலைவிதியென்று நினைத்தால், அது தப்பென்று கடந்தகால வரலாறுகள் பலதடவைகள் அவர்களுக்கு பாடம் புகட்டியுள்ளன. ●

வணக்கம்
SOLICITORS
FREE CONSULTATION
CRIMINAL - NOT GUILTY VERDICTS : MULTI MILLION £ FRAUD; CREDIT CARD; KIDNAPPING; SEXUAL OFFENCES; ASSAULTS; ETC.
TRAFFIC OFFENCES
IMMIGRATION - INDEFINITE LEAVE TO REMAIN ; DISCRETIONARY LEAVE TO REMAIN; 7 YR. RULE; NATURALISATION; ETC.
DIVORCE
TELEPHONE: 07985 33 99 48
KENNETH PIRES ( TRIAL LAWYER ) 16 YEARS EXPERIENCE
AROUND 4 MILES FROM TOOTING BROADWAY STATION
COMMITTED TO HELPING CLIENTS SUCCEED



செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத் திட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்!
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS £20 FREE LYCAMOBILE CREDIT
Terms & Conditions apply. Applicable only for selected bookings



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?
ஒருவருட
இணைப்புச் சந்தா
£49
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய IPTV BOX களை
எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE
தமிழ்
KTV
SUN MUSIC
JAYA TV
HD
Athavan
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
SUN NXT
4000 +
திரைப்படங்கள்
புத்தம்புதிய
திரைப்பாடல்கள்
நகைச்சுவை
காட்சிகள்
SUBSCRIBE NOW!
0207 132 2727
www.lycatv.tv



# எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவேன்

## நண்பர்களிடமிருந்து என்னை காப்பீராக!

**சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு ஒருபுறம், தலைமைப் பீடத்திலுள்ள சிங்கள ஆளுனரின் வெறுப்பு மறுபுறம், ஒன்றாகக் கூடிவந்தவர்களின் கழுத்தறுப்பு இன்னொருபுறம், கூட்டிவந்தவர்களின் கால்தட்டு உட்புறம் என அனைத்தையும் துணிச்சலுடன் சந்தித்து யதார்த்த அரசியலை நேர்த்தியாக எடுத்துச்செல்வது என்பது பெரும் சவால்.**

முத்தமிழர் அரசியல் அரங்கில் இன்று அதிகம் பேசப்படுபவராக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியல் எதிரிகளின் கல்லெறியிலும் பார்க்க, தமதின அரசியல் சகோதரர்களால் தாக்கப்படுவது இப்போது அதிகரித்து வருகிறது.

அறிக்கைகள், உரைகள், கண்டனங்கள் என்று பலவகையான சவால்களை முதலமைச்சர் இப்போது சந்தித்து வருகிறார்.

இதற்கான அடிப்படைக்காரணம், அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபைக்கான அடுத்த தேர்தல்.

வடமாகாண சபையின் ஆயுட்காலம் முடிவதற்கு இன்னும் இரண்டு மாதமே உள்ளது. 2004ம் ஆண்டு நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற விக்னேஸ்வரன், 2013ம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் அதிகூடிய வாக்குகள் பெற்று முதலமைச்சரானார்.

இப்போது 79 வயதாகும் ஆன்மிகவாதியான இந்த தாடிக்கார முதியவர், அரசியலுக்கு வந்தபோது பலரது புருவங்களும் உயர்ந்தன.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழரசு ஆகிய நான்கு கட்சிகளின் தலைவர்களும் ஒன்றாகச் சென்று விடுத்த அழைப்பை ஏற்று, இந்த நான்கு அணிகளும் தொடர்ந்து ஒற்றுமையாக இருக்குமென்ற நம்பிக்கையுடன் இவர் அரசியலில் கால்பதித்தார் என்பது இரகசியமன்று.

மாகாணசபைத் தேர்தல் காலத்தில் பி.பி.சி. ஆங்கில சேவைக்கு வழங்கிய செவ்வியொன்றில், “நாங்கள் (தமிழர்) எவரையும் வெறுக்கவில்லை, எங்களுக்கு எவருடனும் பிரச்சனை இல்லை, எங்கள் சொந்த அடையாளத்துடன் நாம் தமிழராக வாழ எங்கள் உரிமையைக் கேட்கிறோம்” என்று இவர் தெரிவித்த கருத்து அவ்வேளை பலராலும் நியாயமாகப் பார்க்கப்பட்டது.

அதேசமயம், வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் இவர் உரையாற்றுகையில், “பிரபாகரன் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய பெருந்தலைவர்” என்று தெரிவித்த துணிச்சலான கருத்து, ஒருபுறத்தே வரவேற்பையும் வேறு சில மட்டங்களில் சலசலப்பையும் ஏற்படுத்தியது.

தமிழரசுக் கட்சியின் சில முக்கிய புள்ளிகள் கூட பிரபாகரனை அவர் புகழ்ந்தது பற்றி விசனமடைந்தனர்.

“சிங்களவர் தங்களின் யுத்தகாலத் தலைவர்களை நாயகர்களாகப் பார்ப்பதுபோல, தமிழர்களும் தங்கள் தலைவரை அவ்வாறு பார்க்கின்றனர்” என்று இவர் பி.பிசிக்கு அளித்த விளக்கம், சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் அப்போதே விக்னேஸ்வரன் மீது இனம்புரியாத அச்சத்தை ஏற்படுத்தியது.

இந்தப் பின்னணியில் முதலமைச்சரின், அண்மைக்கால மற்றும் சமகால உரைகளையும் அறிக்கைகளையும் பார்க்கையில், மற்றைய அரசியல்வாதிகளைப்போல காலத்திற்கேற்றவாறு அவர் தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்பது புலனாகும்.

இதற்கான சில புள்ளிகளை இங்கு குறிப்பிடலாம்:

யுத்தம் முடிந்து ஆண்டுகள் ஒன்பதைக் கடந்த பின்னரும் இராணுவம் தமிழர் நிலப்பரப்பை ஆக்கிரமித்திருக்கிறது.

### முதல்நாள் - மயிலிட்டியில் அபிவிருத்தி! மறுநாள்- தையிட்டியில் பௌத்த விகாரை!

தமிழ் மக்களின் பொருளாதார வளங்களைக் கையகப்படுத்தியிருக்கும் சிங்களப்படை, அவர்களது சொந்த மண்ணில் விவசாயம் செய்து அவர்களுக்கே விற்று வியாபாரம் செய்கிறது.

தமிழ் இளைஞரிடையே போதைவஸ்து, மதுபானப் பாவனை, வன்செயல்கள் ஆகியவற்றை ஊக்கப்படுத்தி அதன் பின்னணியில் படைத்தரப்பே இயங்குகிறது.

சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு தமிழ் மண்ணில் நடத்துவதன் மூலம், தமிழ் மக்களை அவர்களின் சொந்த நிலத்திலேயே சிறுபான்மையினராக்க முயற்சிப்பது.

இவற்றின் தொடராக முதலமைச்சர் கடந்த இரண்டு வாரங்களில் சுட்டிக்காட்டிய இரு விடயங்கள் மிக முக்கியமானவை.

தமிழர்களின் தாயக மண்ணில் சிங்களத்தின் வெற்றிச் சின்னங்கள் இருக்கக்கூடாது என்பது ஒன்று.

வடக்கில் பாரிய பௌத்த விகாரைகளை அமைக்க ஆளுனர் றெஜினோல்ட் குரே உத்தேசித்துள்ளார் என்பது இரண்டாவது.

மயிலிட்டியில் துறைமுக அபிவிருத்திக்கான அடிக்கல்லை ஆகஸ்ட் 21ம் திகதி ஜனாதிபதி சிறிசேன நாட்டினார். இங்கு உரையாற்றிய அவர், மயிலிட்டி மகாவித்தியாலயம் இரண்டு வாரத்தில் மக்களிடம் மீளளிக்கப்படும் என அறிவித்தார்.

இந்த அறிவித்தல் வந்த மறுநாளே அப்பகுதி மக்களுக்கு அதிர்ச்சியளிக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

மின்னாமல் முழங்காமல் மழை பொழிந்தது என்று சொல்வது போன்றது இது.

காங்கேசன்துறையில் உள்ள தையிட்டி என்ற இடத்தில் விகாரையொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் ஆகஸ்ட் 22ம் திகதி நடைபெற்றது. இந்த அடிக்கல்லை நாட்டி வைத்தவர் வடமாகாண ஆளுனர் றெஜினோல்ட் குரே.

“தமிழர்கள் உடலில் தனித்தமிழ் இரத்தம் இப்போது இல்லை. இங்குள்ள மருத்துவமனைகளுக்கு சிங்கள இராணுவமே இரத்தம் வழங்குவதால் தமிழரின் இரத்தத்தில் சிங்கள இரத்தம் கலந்துள்ளது” என்று அடிக்கடி பகிரங்கமாகக் கூறுவதில் ஆனந்தமடையும் குரே, இப்போது விகாரைகள் அமைப்பதில் தன் கவனத்தைச் செலுத்துகிறார்.

வடமாகாண சபையின் ஆயுட்காலம் முடிந்த பின்னர் வரப்போகும் தேர்தலுக்கு முன்னரான இடைக்காலத்தில், விகாரைகளை அமைக்க ஆளுனர் குரே திட்டமிட்டுள்ளதாக முதலமைச்சர் இரண்டு வாரங்களுக்கு முன்னரே கூறியிருந்தார்.

உடனடியாக இதனை மறுதலித்த ஆளுனர், எங்கெங்கே விகாரைகள் அமைக்கப்படவுள்ளது என்பதை முதலமைச்சர் பகிரங்கப்படுத்துவாரா எனச் சவால் விட்டிருந்தார்.

இதற்கு முதலமைச்சரிடமிருந்து பதில் வருவதற்கு முன்னரே, முதலாவது விகாரைக்கு அடிக்கல் நாட்டிவிட்டார் ஆளுனர் குரே.

இந்த விகாரை நிர்மாணம் தொடர்பாக ஆளுனர் தெரிவித்துள்ள தகவல்கள் முன்னுக்குப்பின் முரணானவை.

தையிட்டியில் இந்த விகாரை பலநூற்றாண்டுகளாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ள ஆளுனர், 1946ம் ஆண்டில் இதற்கான உறுதி எழுதப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

1946 என்பது 72 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். அப்படியானால் பல நூற்றாண்டுகளாக இந்த விகாரை இங்கிருந்தது என்று எவ்வாறு கூறமுடியும்?

1954ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி இறுதியாக இந்த விகாரையில் வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டதாகவும், உள்நாட்டு யுத்தத்தினால் இங்கிருந்த விகாரை முற்றாக அழிவடைந்ததாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு யுத்தம் என்று ஆளுனர் குரே கூறும் தமிழருக்கு எதிரான இனவழிப்பு, அவர்களின் தாயக மண்ணில் 1980க்குப் பின்னரே ஆரம்பமானது.

இதனடிப்படையில் பார்க்கின், 1954க்கும் 1983க்கும் இடைப்பட்ட 30 ஆண்டு காலத்தில் இங்கு வெசாக் பண்டிகை கொண்டாடப்படாத காரணம் என்ன?

30ம் பக்கம் பார்க்க...

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



சிறார்களுக்கான பிரத்தியேக கல்விச் சேவை
(PRIVATE TUTION)

ஆங்கிலம் - கணிதம் - விஞ்ஞானபாடங்கள்
ஆரம்பநிலையிலிருந்து
ஜி.ஸி.எஸ். ஸிவரை
5 பவுண் - மணித்தியாலத்திற்கு
மூர்த்திமாஸ்டர் B.Sc. M.I.C.E (London)
Retired Senior Lecturer
தொடர்பு - 07946415549





Feedbacks
Mock Exams
Free first class

Morden Private Tution

Maths, Physics, Chemistry & Biology KS3, GCSE & A-Level

11Plus Coaching

Assessment
- Questions in every class – Previous class topics
- Knowledge test - Every 5 topics
  - 90% -Passed- Less than 90%
  - allow to take one more time
  - Fail to achieve 90% - Parents meeting

Exam Preparation
- Use flow charts and diagrams – Visual aids
- Practice on past papers – Effective way to know an exam
- Explain your answers to others – Excel in the exam
- Organise study groups with friends – Flow of ideas

Mobile: 073 774 156 20
Email: mordenprivatetuition@gmail.com



நீங்கள் NHS பல் சிகிச்சைக்காக காத்திருக்க தேவையில்லை

NEEM

Emergency Dentistry
•Fast & Efficient Pain Relief
•Quick & Easy Appointments
•Affordable High Quality Care

01 Emergency Walk-In
02 Open Late Hours & WK Ends
03 Cosmetic Dentistry
04 General Dentistry
Popular Services





Don't wait!
ACT NOW!
Dental Emergency!
Stop the pain!
BOOK ONLINE

QUALITY SERVICE RELIABILITY

South Harrow வில் ஒரு தமிழ் பல்வைத்தியசாலை உடனே அழையுங்கள்

T: 020 84 23 25 23
291 Northolt Road, South Harrow, HA2 8HX.
www.neemdentalclinic.co.uk



ஸ்ரீ துர்க்கா கணபதி ஜோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற ஜோதிட நிபுணர்

பண்டிதர் கோவிந்த ராஜு
(UNITED KINGDOM)







புகழ்பெற்ற ஜோதிட நிபுணர் கைரேகை, முக இலக்கணம், புகைப்படம், இராசிபலன், எண்கணித சாஸ்திரம், வானியல் பஞ்சாங்கம், 100 வருட ஷதப்தி பஞ்சாங்கம், அதிர்ஷ்ட கற்கள், வாஸ்து சாஸ்திரம் ஆகியவற்றை கொண்டு நடந்தவை நடக்கின்றவை நடக்கப்போகின்றவை பற்றி துல்லியமாக கணித்து கூறுவார்.

100% உத்தரவாதம்

✔ தொழில்
✔ கல்வி
✔ வியாபாரம்
✔ திருமணம்
✔ உடல்நலம்
✔ வசியம் செய்தல்
✔ வாஸ்து சாஸ்திரம்
✔ காதல் விவகாரம்
✔ குழந்தை பாக்கியம்
✔ நாம நட்சத்திரம்
✔ வழக்கு மன்ற விவகாரம்
✔ கண்திருஷ்டி கழித்தல்
✔ லக்ஷ்மி வசீகரம்
✔ தாம்பத்தியக் கோளாறு
✔ கணவன் மனைவி ஒற்றுமையின்மை

போன்ற எல்லா காரியங்களுக்கும் பரிகாரங்கள் நல்லபடியாக செய்து தரப்படும்பில்லி, சூனியம், கெட்ட சக்தி, மந்திர பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்.

+447405666293
+447897427492

329/326 BATH ROAD,
HOUNSLOW WEST,
POST CODE: TW4 7HW,
LONDON
10:00 A.M
8:00 P.M


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Aupicious Days, Special Poojahs & Festivals - 2018

### September - 2018 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Saturday | Karthigai Viratham | கார்த்திகை விரதம் |
| 02 | Sunday | Sri Krishna Jeyanthi | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 06 | Thursday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 07 | Friday | Pirathosha Viratham | பிரதோச விரதம் |
| 08 | Saturday | Mor: Sri Ganesh & Murugan Abishekam | காலை: ஸ்ரீ விநாயகர், முருகன் அபிஷேகம் |
| | | Eve: Shanmugar Archanai & Veethi Ula | மாலை: சண்முகர் அர்ச்சனை, வீதியுலா (நல்லூர்) |
| 09 | Sunday | Amavasai Viratham | அமாவாசை விரதம் |
| 12 | Wednesday | Vinayagar Chathurthi Viratham* | விநாயகர் சதுர்தரி விரதம்* |
| 14 | Friday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| 20 | Thurday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 22 | Saturday | San Pirathosa Viratham, Puradasi Sani 1 | சனிப் பிரதோச விரதம், புரட்டாதிச்சனி 1 |
| 23 | Sunday | Sri Nadesar Abishekam 5 | ஸ்ரீ நடேசர் அபிசேகம் 5 |
| 24 | Monday | Full Moon | பூரணை |
| 25 | Tuesday | Malaya Padsam Starts | மாளய பட்சம் தொடக்கம் |
| 28 | Friday | Sankadara Chathurthi Viratham* | சங்கடகர சதுர்த்தி * |
| | | Maha Parani | மகா பரணி |
| 29 | Saturday | Karthigai viratham* | கார்த்திகை விரதம் * |
| | | Puradasi sani 2 | புரட்டாதிச்சனி 2 |

# விமலின் பக்கம்



கொழும்பில் படித்துக் கொண்டிருந்த நான் தாய் நிலத்திற்கு திரும்பிச் சென்றது பள்ளிக்கூட தவணை விடுமுறைக் காலத்தில் மட்டும்தான். எதையும் தேடி அலையும் தேடல்கள் நிறைந்த அந்த பதின்மப் பராயத்தில் பல விஷயங்களை எமது மூத்த தலைமுறையினர் எங்கள் கண்களிலிருந்தும் காதுகளில் இருந்தும் மறைத்தார்கள்.

மறைக்கப்பட்ட இந்த விஷயங்களை அறிய நான் "தகவல் அறியும் சட்டத்தை"பயன்படுத்தவில்லை விசாரணைக் கமிஷன் எதையும் நியமிக்கவும் இல்லை. "எது இன்று உனக்கு தெரியாமல் மறைக்கப்பட்டதோ, அது நாளை உனக்கு தெளிவாகும்" என்று ஸ்ரீ கிருஷ்ண உபதேசம் எதுவும் நடக்கவும் இல்லை.

எங்கள் கிராமத்து கோவில் வளாகத்திற்கு வெளியே சற்று ஒதுக்குப்புறமாக ஒரு வறிய வியாபாரி சிறிய குடிசை அமைத்து கடலை வறுத்து, வியாபாரம் செய்து வந்தார். மாலை நேரங்களில் என் ஊர் உறவினர்கள், நண்பர்கள் என்னையும் அழைத்துக் கொண்டு அந்த கடலை வியாபாரியின் குடிசை அருகில் கூடுவார்கள். அனைவரும் பல்வேறு விதமான கடலைகளை வாங்கிச் சாப்பிட்டு மகிழ்ந்தோம்.

இப்படி நான் அடிக்கடி கடலைக்காரரின் குடிசை அருகே காணப்படும் தகவல் ஊர்ப்பிரமுகரான என் பாட்டியாரின் காதுகளை எட்டியதும் என் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வட இந்தியாவுக்குப் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் காஷ்மீர் வட்டாரத்துக்கு போகக் கூடாது என்று தடை விதித்து விசாவில் குறிப்பிடப்படுவது போல காரணம் கூறாமலே எனக்கும் தடை விதிக்கப்பட்டது.

என் 'டீன் ஏஜ்' பருவம் என்னிடம் இருந்து விடை பெற்றுச் செல்லும் சமயம் ஏராளமான விஷயங்கள் கேள்விக்குறியாகவே இருந்தன.

"இளமை எல்லாம் கனவு மயம் இதில் மறைந்தது சில காலம் - தெளிவும் அடையாது முடிவும் தெரியாது மயங்குது எதிர்காலம்" என கண்ணதாசன் பாடியது



போல தெளிவு இல்லாமல் - முடிவு தெரியாமல் மயங்கி நின்ற அந்த வாலிபப் பருவத்தில், பனிமூட்டம் விலகி உண்மைகள் பல தெரியவந்த போது திகைப்படைந்தேன்.

என் பாட்டியார் என் மீது தடை உத்தரவு பிறப்பித்தமைக்குக் காரணம் நான் கடலை சாப்பிட்டது அல்ல. ஆனால், கடலை போடும் இளம் பராயத்து பையன்களோடு நானும் அருகில் நின்றதுதான் என்று பின்னர் அறிந்து கொண்டேன்.

"கடலை போடுவதா? யாருக்கு?" கடலை வியாபாரியின் குடிசைக்குள் அவரது இளம் மனைவி இருந்தாராம். நான் அந்தப் பெண்ணை ஒருபோதுமே கண்டதுமில்லை. சினிமா நடிகை ராஜசுலோசனா போன்ற கவர்ச்சித் தோற்றம் கொண்ட அந்த அழகியைப் பற்றி ஏற்கனவே கிசுகிசுக்க ஆரம்பித்திருந்தார்கள். இதனால்தான் சிறு பையன்களான நாங்கள் அந்தக் குடிசை வாசலில் நின்று கடலை வாங்கி சாப்பிடுவது என் பாட்டிக்கு கிலி கொடுத்திருக்கிறது.



பாட்டியின் இந்தக் கிலிக்கு ஆதாரம் இருந்தது என்பது பல வருடங்களுக்குப் பிறகே எனக்குத் தெரிய வந்தது.

எங்கள் ஊரின் பெரிய மனிதர்கள் பலர், ஒரு அப்புக்காத்தர், ஒரு அப்போதிக்கரி, கோயில் திருப்பணிக் குழு உறுப்பினர் இப்படிப் பெரிய புள்ளிகள் பலர் இரவு நேரங்களில் கடலை வியாபாரியின் குடிசைக்கு அவ்வப்போது போய் வந்ததாக அப்போதைய 'விக்கிலீக்ஸ்' மூலம் நான் அறிந்து கொண்டேன்.

அந்த நாளைய சினிமா நட்சத்திரம் ராஜசுலோசனா அவர்களை நானும் சந்தித்திருக்கிறேன். என் 25-வது வயதில் இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் 'கண்டதும் கேட்டதும்' செய்திச் சுருள் நிகழ்ச்சியை தயாரித்து வழங்கி வந்த எனக்கு கொழும்பு வரும் நட்சத்திரங்களையும் பிரமுகர்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியிருந்தது.

என் பாட்டியைப் போலவே, எங்கள் பாட்டனுக்கு முப்பாட்டனான அமெரிக்கா என்ற வல்லரசு, காரணங்கள் கூறாமலே சில விஷயங்களை ஒதுக்கி வைத்தமை என் அரசியல் அரசியல் ஆர்வத்தை தூண்டியது தேடலை அதிகரித்தது.



கோர்பச்செவ்

அது என்ன மூன்றாவது உலக நாடு? *PARIAH STATE* என்று தள்ளி வைப்பது போலவா? ஆசிய, ஆபிரிக்க நாடுகள் மூன்றாவது உலகமாம்.

அப்படியானால், முதலாவது உலக நாடு - இரண்டாவது உலக நாடு என்று மற்ற நாடுகளை விபரிப்பது இல்லையே ஏன்?

இரண்டாவது உலக நாடுகள் முன்னை நாள் *SOVIET* குடியரசு நாடுகளான ரஷ்யா, கிழக்கு ஐரோப்பாவின் போலந்து போன்ற நாடுகள், கசகஸ்தான் போன்ற துருக்கிய நாடுகள் -இவற்றோடு சீனாவும் இரண்டாவது உலக நாடுகளாம்!

ஐயா... தெரியாதய்யா... அப்படியானால் முதலாம் நாடுகள் எவை? அபிவிருத்தி அடைந்த, ஆலைத் தொழில் வளம் நிறைந்த இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவுக்குச் சாமரம் வீசி குடை பிடிக்கும் கனடா, மேற்கு ஐரோப்பிய வல்லரசு நாடுகள் மற்றும் ஜப்பான், அவுஸ்திரேலியா போன்றவையே முதலாம் உலக நாடுகள்!

இரண்டாம் உலக நாடுகள் பற்றிய நல்ல செய்திகள் ஊடகங்களை எட்டி விடாமல் இருட்டடிப்புச் செய்வது அல்லது சதா திரித்துக் கூறுவது முதலாம் உலக நாடுகளின் ஒரு நையாண்டித்தனம்.

உலகப் பொதுமக்கள், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின் வறிய மக்கள் எந்தவிதமான செய்திகளை மட்டுமே கேட்க வேண்டும் என்று உலக செய்தி நிறுவனங்களை, தமது பணத்தாலும் அதிகார பலத்தாலும் முதலாம் உலக நாடுகள், கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன.

முதலாம் உலக செய்தி நிறுவனங்களில் பி.பி.சி மிக வித்தியாசமானது. பிரிட்டனில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் எந்த அரசாங்கமும் பிபிசியைக் கட்டுப்படுத்த முடியாது.பிரிட்டிஷ் பொதுமக்கள் வழங்கும் தொலைக்காட்சி வருடாந்தக் கட்டணத்தில் பிபிசி இயங்குகிறது.

நான் இங்கு குறிப்பிட முனைவது சோவியத் கூட்டமைப்பு நாடுகள் பற்றியும் இன்றைய ரஷ்யா பற்றியும் நடுநிலையான செய்திகள் இங்குள்ள ஊடகங்களில் வெளிவருவது மிக அரிது.

இது எனக்குள் ஒரு தணியாத தாகத்தை ஆர்வத்தை உருவாக்கி விட்டது. பள்ளிப்பருவத்தில் என் பாட்டியார் என்னிடம் விஷயங்கள் பலவற்றை மறைத்தது போல முதலாம் உலக ஊடகங்கள், இரண்டாம் உலக சோவியத் ரஷ்ய செய்திகளை மூன்றாம் உலகினரான எங்களிடம் மறைத்து குறைத்து - திரித்து வழங்கி வந்ததால் என் தேடல் தாகம் அதிகரித்தது.

இலண்டனில் வாழும் தமிழர்கள் விடுமுறை என்றதும் விரைந்து செல்வது தாய்நாட்டுக்குத்தான் - அதில் வியப்பில்லை. அதற்கு அடுத்தபடியாகச் செல்வது தமிழ்நாட்டுக்கு, மூன்றாவது தெரிவு சிங்கப்பூர், மலேஷியா. இப்போதெல்லாம் துபாய்க்குக் கூட விடுமுறைக்குச் சென்று திரும்புகிறார்கள் எம்மவர்கள்.

இலண்டனில் இருந்து பாரிஸ், கனடா, அவுஸ்திரேலியா என்று பயணம் செய்வதை உறவினர்களின் சந்திப்பாகவே நான் கருதுகிறேன். ஊர் பார்க்கும் உல்லாசப் பயணமாக அல்ல.

சோவியத் கூட்டமைப்பின் முன்னைநாள் நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் செல்லும் உல்லாசக் கப்பல் பயண வாய்ப்பு எனக்கு கடந்த மாதம் கிட்டியது. கடலில் மிதக்கும் 5 நட்சத்திர ஓட்டல் போன்ற கப்பலில் ரஷ்யா நோக்கி என் பயணம் ஆரம்பமாகியது.

பிரிட்டனின் தென்புற சவுத்தாம்ரன் துறைமுகத்தில் இருந்து போய்வர 14 நாட்கள் பயணம். இடையில் பெல்ஜியம், டென்மார்க், சுவீடன், எஸ்டோனியா ஆகிய துறைகளில் தங்கி ரஷ்யா போய் இறங்கினேன். ரஷ்ய மண்ணில் கால் பதித்ததும் பள்ளிப் பருவ ஆவல் தீர ஆரம்பித்தது.

பள்ளிப் பருவம் முடிந்து சட்டம் படிக்கும்போதும் இலங்கை வானொலியிலும் இலண்டன் பிபிசியிலும் செய்தித் துறையில் நான் பணியாற்றும்போதும் என் நாவில் பல நூறு தடவைகள் உச்சரிக்கப்பட்ட உலக மார்க்சீசத்தின் உன்னதமான தலைவர்கள் கோர்பச்செவ் , பிரஷ்நேவ் மற்றும் லெனின் போன்றவர்கள் நடந்து திரிந்த அந்த ரஷ்ய மண்ணில் நானும் நிற்கிறேன் என்பதை எண்ணும்போது என் உடலில் வித்தியாசமான உணர்வுகள் பரவின.



மாமேதை லெனின்

வரலாற்று வழிகாட்டிகள் எங்களை அழைத்துச் சென்று காண்பித்த இடங்கள் பற்றியும் சுவாரஸ்யமான எனது அனுபவங்களையும் அடுத்த புதினம் இதழில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ●

# Sky Wings Travel

*Your Travel Is Our Passion...*

24

## Talk to our Specialist in TAMIL

## 0208 672 9111

## COLOMBO SPECIALS

| | | |
|---|---|---|
| £522 | SriLankan Airlines | 40Kg |
| £472 | Emirates | 40Kg |
| £445 | QATAR AIRWAYS | 30Kg |
| £475 | JET AIRWAYS | 35Kg |
| £428 | KUWAIT AIRWAYS | 46Kg |
| £454 | ETIHAD AIRWAYS | 23Kg |
| £411 | Gulf Air | 46Kg |
| £469 | OMAN AIR | 30Kg |

**SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT**

## WORLDWIDE SPECIALS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| DUBAI | £270.00 | MELBOURNE | £597.00 | BANGKOK | £380.00 |
| NEW YORK | £330.00 | SINGAPORE | £430.00 | DELHI | £330.00 |

**119 Tooting High Street, London, SW17 0SY**

IATA

*Above fares are subject to availablity - T&Cs apply*

ATOL 5766 PROTECTED

# தமிழகத்தின் தவிர்க்க முடியாத தலைப்புச் செய்தி நாயகன்!

திருவாரூர் தியாகராஜர் கோயில் தெப்பக் குளத்தின் கரையில் இரண்டு சிறுவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். 'வா...நீந்தி அந்தக் கரைக்குப் போவோம்' என்று ஒருவன் அழைத்தான். இருவருமே குதித்து நீந்தினார்கள். பாதி தூரம் கடந்ததும் இன்னொருவன் சொன்னான், "என்னால் முடியாது வா... திரும்பிவிடலாம்" என்று. "திரும்பிப் போகும் பாதித் தூரத்தை முன்னோக்கிப் போனால், அந்தக் கரையைத் தொட்டு வெற்றி அடையலாம்" என்றான் அந்தச் சிறுவன்!

கட்சி ஆரம்பித்து சென்னையில் முதல் மாநில மாநாடு. எல்லோரும் மாநாட்டுத் தலைவரை அவரவர் மொழியில் வழிமொழிந்தார்கள். அந்த இளைஞர் கரகர குரலில், 'வாழ்வு மூன்றெழுத்து, வாழ்வுக்குத் தேவையான பண்பு மூன்றெழுத்து, பண்பிலே பிறக்கும் அன்புக்கு மூன்றெழுத்து, அன்பிலே சுரக்கும் காதல் மூன்றெழுத்து, காதல் விளைவிக்கும் வீரம் மூன்றெழுத்து, வீரன் செல்லும் களம் மூன்றெழுத்து, களத்திலே பெறும் வெற்றி மூன்றெழுத்து, வெற்றிக்கு நம்மை அழைத்திடும் அண்ணா மூன்றெழுத்து...' என்றபோது மாநாடு குலுங்கியது!

இந்திரா என்ற பிம்பமே இந்தியாவை அச்சுறுத்திக் கொண்டிருந்த நேரம் அது, 'எமர்ஜென்சியா?' என்று யோசிக்கவே பலரும் பயந்து நடுங்கிய நேரத்தில், 'இது சர்வாதிகாரத்துக்கான தொடக்க விழா' என்று ஒரு பேனா தீர்மானம் தீட்டியது. செயின்ட் ஜார்ஜ் கோட்டை கைவிட்டுப் போனாலும் பரவாயில்லை' என்று செங்கோட்டையைச் சீண்டினான் அந்தத் தலைவன்.





தனது 94 வயதில் கடந்த 07.08.2018 அன்று மறைந்த அமரர் கலைஞர் மு.கருணாநிதி பற்றி அன்னார் 90 வயதினை எட்டியபோது எழுதப்பட்ட கட்டுரையை இங்கு பிரசுரம் செய்கிறோம்.

முழுத் தெப்பக் குளத்தையும் கடந்த அந்தச் சிறுவன்...

கரகரப்பான தொண்டைக்காரனான அந்த இளைஞன்...

இந்தியாவையே திரும்பிப் பார்க்கவைத்த அந்தத் தலைவன்தான் கலைஞர் கருணாநிதி!

'90 வயது வரை வாழ்வோமா?' என்ற சந்தேகம் 62 வயதில் கருணாநிதிக்கு வந்தது. 'மனிதன் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது அதிசயமான செய்திகளில் ஒன்று. 90 ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்கள் மிகச் சிலர்தான்' என்று ஏக்கத்தோடு அன்று எழுதினர் கருணாநிதி. ஏக்கம் துடைத்து 90-ஐ எட்டினார். தனக்குப் பிடித்த பழமொழி என்று அடிக்கடி அவர் ஒன்றைச் சுட்டிக்காட்டுவார். 'நீண்ட தூரம் ஓடினால்தான், அதிக உயரம் தாண்ட முடியும்!'

கருணாநிதி அளவுக்கு உயரம் தாண்டியவர்கள், தமிழக அரசியலில் இதுவரை எவரும் இல்லை. ஐந்து முறை தமிழ்நாட்டு முதல்வர், தொடர்ச்சியாக 11 முறை சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் வென்றவர், 38 வயதில் தி.மு.க. பொருளாளர், 44 ஆண்டுகளாகத் தி.மு.க.வின் தலைவர் என்று அடுக்கிக்கொண்டே செல்லலாம். 32 வயதில் முதல்முறையாக எம்.எல்.ஏ. ஆன ஒருவர் 90 வயதிலும் அதனைத் தக்கவைத்திருப்பது இந்திய ஜனநாயகத்தின் அதிசயம். 1957-ல் அவரோடு சட்டசபைக்குள் போனவர்களில் இவர் மட்டுமே இன்னும் சபையை அலங்கரிக்கிறார்.

பலருக்குப் பதவிகள், பண்ணையார்கள் என்பதால் கிடைத்தன. முன்னோர்கள் தகுதியில் தொடர்ந்தன. ஆனால், திருவாரூருக்குப் பக்கத்தில் திருக்கோளிலி (பின்னர்தான் இது திருக்குவளை என அழைக்கப்பட்டது) என்ற கிராமத்தில் பிறந்த நாட்டு வைத்தியரின் மகனைச் சுற்றி 60 ஆண்டு தமிழ்நாட்டு அரசியல் சுழலக் காரணம், நேரங்காலம் பார்க்காத உழைப்பு. 'எதையும் தாங்கும் இதயம் இங்கு உறங்குகிறது' என்று அண்ணாவின் கல்லறையில் எழுதிய கருணாநிதி, 'ஓயாது உழைப்பவன் இங்கே உறங்குகிறான்' என்று எனது கல்லறையில் எழுதுங்கள் என்று எப்போதோ உத்தரவு போட்டுவிட்டார்.

12 வயதில் 'மாணவ நேசன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தினார். 90 வயதிலும் 'முரசொலி'யைத் திருத்திக் கொண்டே இருக்கிறார். 17 வயதில் தமிழ்நாடு மாணவர் மன்றத் தலைவர். இப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர். 'பீக்' அரசியல் செய்த பெரும்பாலான தலைவர்கள் ஒரு காலகட்டத்தில் தொய்வடைந்து, கடைசியில் அமைதியானது உண்டு. ஆனால், கருணாநிதியால் அது முடியாது. ஏனென்றால், ரத்த ஓட்டம் மொத்தமும் அரசியலாக ஓடிக் கொண்டிருக்கிறது!

தி.மு.க. சொற்பொழிவாளர் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் நடந்தது. பேச்சாளர்கள் தங்களது வருத்தங்களைச் சொன்னார்கள். கூட்டத்தினர் மட்டுமல்ல... மேடையில் இருந்தவர்களும் உன்னிப்பாகக் கவனித்தார்கள். அதிரடி அல்தாப் என்ற பேச்சாளர், கோவை மாவட்ட தி.மு.க.வுக்குள் இருக்கும் கோஷ்டி அரசியலைக் கொந்தளிப்புடன் கொட்ட ஆரம்பித்ததும் மேடையில் இருந்த ஸ்டாலின், 'இதையெல்லாம் இங்கே பேச வேண்டாம்' என்று தடுத்துள்ளார். 'இந்த இடத்தில் பேசலாமா கூடாதா என்பதைவிட, இப்படி எல்லாம் இருந்தால் கட்சி உருப்படுமா?' என்ற யோசனையில் கருணாநிதி மூழ்கினார். மைக் தனக்கு முன் வைக்கப்பட்டதும் அந்த ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்துவிட்டார். 'அணி அணியாகக் கட்சி பிரிந்து கிடப்பது கழகத்தின் பிணி. இத்தகைய பிணியோடு கட்சி இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே மேல்' என்று முழங்கினார். அடக்கப்பட்டுக்கிடந்த ஆத்திரத்தை, எப்படி எல்லாமோ வளர்த்த கட்சி இப்போது இப்படி இருக்கிறதே என்ற ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்திய விதம் அவருக்கு மட்டுமே உரித்தானது. இன்னும் 100 ஆண்டுகள் கழிந்த பின்னாலும் கழகத்தவருக்கு அச்சடித்துத் தர வேண்டிய அரிச்சுவடி அந்தப் பேச்சு.

கருணாநிதி அசைக்க முடியாத சக்தியாக இப்போது இருக்கும்போதுதான் இப்படிப் பேசுகிறார் என்று நினைக்க வேண்டாம். கட்சி ஆரம்பித்து ஓர் ஆண்டு கழித்து (1950) நடந்த நெல்லை மாவட்ட முதல் மாவட்ட மாநாட்டிலேயே அப்படித்தான் பேசினார். 'ஏதோ குறை சொல்லப்போகிறேன் என்று கருத வேண்டாம். இந்த ஓராண்டில் நாம் செய்யாமல்விட்ட பணிகள் ஏராளம் உண்டு. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும் கிளைகள் அதன் முத்துக்களாகவும் கோர்க்கப்படவில்லை' என்று மேடையில் அண்ணாவை வைத்துக்கொண்டே கருணாநிதி சொன்னபோது, அவருக்கு வயது 26. இதையெல்லாம் இங்கு பேச வேண்டாம் என்று இப்போது ஸ்டாலின் தடுத்ததைப்போல, அன்று ஈ.வே.கி.சம்பத் தடுத்தார். கருணாநிதிக்கு சம்பத் பதில் சொன்னார். அந்தப் பதிலுக்கு விளக்கம் அளித்தார் கருணாநிதி. இருவரது பேச்சையும் 'திராவிட நாடு' இதழில் வெளியிட வேண்டாம் என்றார் அண்ணா. இப்படிப்பட்ட எதிர்ப்பையே பார்த்துப் பார்த்துப் பழகியதால்தான் இதுவரையிலும் அவரால் அரசியல் நடத்த முடிகிறது. 'வாழ்க்கையே போராட்டம் என வர்ணிப்போர் உண்டு. எனக்குப் போராட்டமே வாழ்க்கையாகி விட்டது' என்று கருணாநிதி சொல்வதற்குக் காரணம், அந்தத் தலைமைப் பதவி அவருக்கு எளிதில் கிடைத்துவிடவில்லை.

30ம் பக்கம் பார்க்க...

# World Tour Store

## Travel with a SMILE...

## COLOMBO FR £406

## Worldwide Flights

| | |
|---|---|
| Chennai | fr £344 |
| Trichy | fr £506 |
| Kochi | fr £369 |
| Mumbai | fr £308 |
| Delhi | fr £326 |
| Goa | fr £371 |
| Dubai | fr £241 |
| Abu Dhabi | fr £251 |
| Toronto | fr £325 |
| Bangkok | fr £359 |
| Singapore | fr £367 |
| New York | fr £318 |

**Best Deal Guaranteed. Hurry! Book Now**

020 3970 4141


111b, Loampit Vale Lewisham SE13 7TG

www.worldtourstore.com

*Lines are opened from 8:00 hrs to 20:00 hrs*

* above fares are subject to availability. T&C's Apply






## பிரித்தானியத் தமிழர் தகவல் நடுவம் வழங்கும் தொல்லியல் நூல்

# அறிமுக விழா

**2500 ஆண்டுக்காலமாகப் புதையுண்டு கிடந்த புராதன பாரம்பரியத்தின் வீறுகொண்ட வெளிப்பாடு!**

**ஈழத்தமிழர் வரலாற்றியலில் இதுவரை வெளிவராத புதிய தகவல்களுடன்**

**கலாநிதி சிவ தியாகராஜா B.Sc., MBBS., Ph.D** எழுதிய பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம் KANTHARODAI CIVILIZATION OF ANCIENT JAFFNA 2018 செப்டம்பர் மாதம் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில்
Ealing Amman Temple Hall (Sri Kanagathurkkai Amman Temple) 5 Chapel Road, West Ealing, London W13 9AE.

இற்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் வடாழத்தில் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த நம் மூதாதையர்களின் வாழ்வியல், கலாச்சாரம், துணிவாண்மை, பெருமுயற்சி, ஆகியவற்றை கதிரியக்க, கல்வெட்டு, தொல்பொருளியல், வரலாற்றியல் ஆதாரங்களுடன் காலாகாலத்திற்கும் நிரந்தரமாகப் பதிவு செய்திருக்கும் நூல் இது!

சுவீடன் உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோக் Professor emeritus PETER SCHALK
பிரதம விருந்தினராகக் கலந்து இந்நூலை அறிமுகம் செய்து வைப்பார். இவ்விழாவை ஆதரவளித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். பிரதிகள் கிடைப்பவர்கள் பேறு பெற்றவர்கள்!



# மன அமைதிப் பூங்காவுக்கு

## ஒரு நல் வாழ்க்கைப் பாதை

### கடவுளின் அளவுகோல் என்பது...

எத்தனை முறை பிரார்த்தனை செய்யப்பட்டது, எத்தனை தடவை மந்திரங்கள் ஜபிக்கப்பட்டன, எத்தனை முறை விளக்குகள் ஏற்றப்பட்டு ஆரத்தி காண்பிக்கப்பட்டது, எத்தனை முறை மணி அடிக்கப்பட்டு, மறைநூல்கள் வாசிக்கப்பட்டன போன்றவற்றால் மனிதரின் செயல்களை தெய்வீக அளவுகோல்கள் மதிப்பிடுவதில்லை. உங்கள் இதயத்தில் எழும் எண்ணங்களின் தரத்தைப் பொறுத்து, எத்தகைய வார்த்தைகளை நீங்கள் உங்கள் அண்டை அயலாரிடம் பயன்படுத்துகிறீர்களோ அவற்றைப் பொறுத்து, உங்கள் வாழ்வை நீங்கள் யார் யாருடன் கழிக்க வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கிறானோ அவர்களுடன் நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு செயலையும் பொறுத்தே தெய்வீக அளவுகோல்கள் மனிதனை மதிப்பிடுகின்றன என்று நான் திட்டவட்டமாக உங்களுக்குக் கூறுகிறேன்.



### உங்களுக்கு மன அமைதி வேண்டுமா?

நல்லாரோக்கியமும், பொருளாதாரப் பாதுகாப்பும் மன அமைதிக்கு மிகவும் இன்றியமையாதவை என்பது எல்லோரும் அறிந்ததே.



ஆனால், இவை இரண்டும் இருப்பினும், பலரும் தொடர்ந்து மன அமைதியின்றி அல்லல்படுகின்றனர்.நீங்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்களா?ஆமாம் என்று நீங்கள் பதில் சொன்னால் மேலும் இதைப் படியுங்கள்.உங்களது தொல்லைகள் பெரும்பாலும் நீங்களாகவே உண்டாக்கிக் கொண்டது என்பதால், அவை தவிர்க்கப்படக் கூடியவையே. எப்படி என்று நாம் பார்ப்போம் -

நீங்கள் அடிக்கடி பிறர் விஷயங்களில் தலையிடுகிறீர்களா?அவர்கள் தவறாகவே இருக்கலாம். ஆனால், அதை முன்னிட்டு நீங்கள் அல்லல் உறுவானேன்?யாரையும், எதையும், குறை கூறாதீர்கள்.

பிறருக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை கடவுள் உங்களுக்குக் கொடுக்கவில்லை.எல்லோரும் அவரவர் விருப்பப்படியே நடக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்குள்ளே இலங்கும் கடவுள் அவர்களை அப்படிச் செய்யத் தூண்டுகிறார். உங்கள் அமைதியைப் பாதுகாக்க நீங்கள் உங்கள் சொந்த வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்பது ஒரு நல்ல விதியாகும்.

### நம் விருப்பமா உலகை இயக்குகிறது?

கடவுள் பொருள்களை முழுமையாகப் பார்க்கிறார். மனிதன் பொருள்களை பகுதியாகப் பார்க்கிறான். மனிதன் கடந்த காலம் மற்றும் எதிர்காலத்திலிருந்து பிரித்து, நிகழ்ச்சிகளை நிகழ் காலத்தில் மட்டுமே பார்க்கிறான்.கடவுளுக்கோ முன் நடந்தாலும், பின் நடக்க வேண்டுவதும் தெரியும்.அதனால்தான் கடவுள் ஒற்றுமையைக் காண்கிறார், மனிதன் வேற்றுமையைக் காண்கிறான்.கடவுள் பூரணமான நியாயத்தைக் காணும் அதே தருணத்தில் மனிதனோ அதைக் காண்பதில்லை. நீங்கள் உங்களை கடவுளின் ஸ்தானத்தில் வைத்துப் பாருங்கள்.நீங்களே கடவுள் என உணருங்கள்.பிரபஞ்சம் முழுவதும் உங்களது படைப்பே என்றும், அனைத்தும் உங்கள் விருப்பத்தாலேயே நிகழ்கின்றன என்றும் உணருங்கள்.உடனேயே உங்களுள் அபரிமிதமான அமைதியும், ஆற்றலும் ஊற்றெடுப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

### பிறர் நம்மைத் திட்டும்போது...



பிறர் உங்களைக் காரணமின்றி திட்டுவதாகவும், காரணமின்றி துன்புறுத்துவதாகவும் நீங்கள் கூறுகின்றீர்கள்.அது உண்மையாக இருந்தாலும் கூட அதற்காக அலட்டிக் கொள்ளாதீர்கள். நிலைமையைப் பொறுமையுடன் சமாளியுங்கள்.இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பதில் அமைதி ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை நீங்கள் காண்பீர்கள்.யாராவது உங்களைத் திட்டினால் கண்களை மூடிக் கொண்டு பொறுமையாக இருங்கள்.பிறர் அவர்கள் விருப்பம் போல் நினைக்கட்டும். அவர்கள் விரும்புவதைச் சொல்லட்டும்.

### வேலை அதுவே ஒரு தியானம்



உங்கள் வேலையில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். மன அமைதிக்கு முக்கியத்துவம் தருவோர் எல்லாவற்றிற்கும் மேலாக கடைப்பிடிக்க வேண்டிய நியதி இது.இந்த உலகத்தில் எதுவுமே உங்கள் கவனத்தை வேண்டுவதில்லை. அனைத்தையும் கவனிக்க ஒரு ஆண்டவன் இருக்கிறார். உண்மையில், உங்களையும் கவனிப்பது அவர்தானே! இந்த உண்மையை மறக்கக்கூடாது.

### குறை கூறலாமா?



நான் திரும்பவும் கூறுகின்றேன், உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்.எவரையும், எதையும் குறை கூறாதீர்கள்.குறை கூறுதல் என்பது திட்டுவதற்கு நிகர்.எது நடந்தாலும், அது கடவுளின் இச்சையில் நடக்கிறது. கடவுளின் அனுக்கிரகம் இன்றி எதுவுமே நிகழ்வதில்லை.ஏதாவது நிகழ்ந்தது என்றால் அது உங்கள் பார்வையில் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கலாம்.அதற்கு கடவுளின் அனுமதி இருக்கிறது என்றுதான் பொருள்.நீங்கள் அதைக் கண்டனம் செய்தால் கடவுளின் விருப்பத்தை, கடவுளின் பேரறிவை, கடவுளின் தீர்ப்பை நீங்கள் விமர்சிக்கின்றீர்கள் என்றுதானே அர்த்தம்.அதைச் செய்யாதீர்கள். உங்களுக்கு அமைதி கிட்டும்.

### இந்த உலகம் முட்டாள்கள் நிறைந்தது. நீங்கள் அறிவுடையவராக விளங்குங்கள்



எல்லோர் முன்னிலையிலும் பணிவுடன் இருங்கள்.எந்த நிலைமையிலும் அடக்கமாக இருங்கள்.நான் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்ற எண்ணத்தை விடுத்து அனைவரிடமும், அனைத்திடத்தும் கடவுளைக் காணக் கற்றுக் கொண்டால் தான் இது சாத்தியமாகும்.கடவுள் அப்படி விரும்புகிறார்.எனவே அது அப்படி இருக்கட்டும்.பிறர் உங்களை நிந்திக்கையில் நீங்கள் மௌனமாக இருங்கள்.கலக்கம் அடையாதீர்கள். பழிச்சொற்களை ஏற்றுக் கொண்டால் அடக்கத்திலும், தூய்மையிலும் நீங்கள் வளர்ச்சி அடைவீர்கள்.அதுவே ஒரு தவம்.ஆன்மீகத்தில் நீங்கள் உயர்வடைவீர்கள்.

சிவ தியாகராஜா

# பூதத்தம்பி கோட்டை

## அன்னையின் ஆணை

பயங்கரமான அந்தப் பௌர்ணமி இரவில் மல்லாவி கிராமத்திலிருந்த ஒரு குடிசையைப் பிரித்துக் கொண்டு உள்ளே புகுந்த மதம் பிடித்த யானை, அக்குடிசையினுள்ளே படுத்திருந்த ஒரு மனிதனைத் தனது துதிக்கையால் தூக்கிக் கொண்டு வெளியே ஓடி வந்து வானத்து வெண்ணிலவை நோக்கி வீசி எறிந்தது!

அந்த மனிதனைத் தூக்கி வீசிய கையோடு அந்த யானையும் அதற்கு வழிகாட்டியாக இருந்த வௌவாலும் காட்டிற்குள்ளே ஓடி மறைந்தன. அதன் பின்னர் அந்த யானையின் பிளிறல் சத்தம் கேட்கவே இல்லை!

அந்த யானையைப் பின்தொடர்ந்து வந்த ஜோதிநாதனுக்கு அந்த யானையும் அதற்கு வழிகாட்டி வந்த வௌவாலும் துவக்கிட்ட பணியை நிறைவேற்றிவிட்டுப் போய்விட்டார்கள் போலத் தோன்றியது. அவனால் அந்த மிருகங்களின் செயலை யதார்த்தமாக விளங்கிக்கொள்ள முடியவில்லை.

யானையின் பிளிறல் சத்தம் ஓய்ந்து அடங்கியதும் சிறிது சிறிதாக குடிசைகளுக்குள் பயத்தினால் பதுங்கியிருந்த மக்கள் வெளியே வர ஆரம்பித்தார்கள். அவர்களில் கொளுத்திய தீப்பந்தத்தைக் கையில் பிடித்தவண்ணம் வெளியே வந்த ஒருவரிடம் ஜோதிநாதன் போய் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு விசாரித்த போது, அவர் அக்கிராமத்தின் தலையாரி என்றும், அவரது பெயர் தங்கமுத்து என்றும் அறிந்து கொண்டான்.

"தம்பீ, காட்டிற்குள் செல்லும் மனிதர்களை ஆனை அடித்துக் கொல்வது இக் காடுகளில் நடைபெறும் சம்பவம். ஆனால், ஒரு கிராமத்திற்குள் புகுந்து ஒரு குடிசையை மட்டும் குறிவைத்து அதனுள் இருந்த ஒருவரைக் கொல்வது நாங்கள் கேள்விப்படாத ஒரு நிகழ்வு" என்றார் தங்கமுத்து.

தங்கமுத்துவின் கையிலிருந்த தீப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டு யானை எறிந்த மனிதன் விழுந்து கிடந்த இடத்தை அடைந்து தீப ஒளியில் அவனது முகத்தை நிமிர்த்துப் பார்த்த ஜோதிநாதனால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அங்கே அவனது பெற்றோர்களின் இழப்பிற்குக் காரணமானவர்களில் ஒருவனான அமரதாஸா இறந்து கிடந்தான்.

"இறந்து போய்க் கிடக்கும் இந்த மனிதன் யார் என்று தெரியுமா? எவ்வளவு நாட்களாக இந்த ஊரில் தங்கியிருக்கிறான்?" என்று தலையாரியிடம் கேட்டான் ஜோதிநாதன்.

"இவன் யாரென்று தெரியாது தம்பி; வெளியூர்க்காரன். இரு மாதங்களுக்கு முன்னர் வந்து இங்கே வெறுமையாகக் கிடந்த இக்குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அதிகம் வெளியே வருவது கிடையாது; கிணற்றில் தண்ணீர் எடுக்க மட்டும் வருவான். தானும் தன்பாடுமாக இருப்பான். அவனால் எவருக்கும் பிரச்சனை ஏதும் கிடையாது. இரவு நேரங்களில் எங்கேயோ போய்விட்டு நேரங்கழித்துத் திரும்பி வருவான். இதற்கு மேல் இவனைப் பற்றி எதுவும் தெரியாது" என்றார் தலையாரி தங்கமுத்து.

தனது அரைப்பட்டியில் பொருத்தியிருந்த தோல் பையிலிருந்து ஒரு வெள்ளிக்காசை எடுத்து தலையாரியிடம் கொடுத்த ஜோதிநாதன் - "இவனது உடலை காட்டில் எங்கேயாவது புதைத்துவிடுங்கள் ஐயா; மேலும், பழுதடைந்த இக்குடிசையை திருத்தியமைக்க இப் பணம் போதுமானது."

எனக் கூறிவிட்டு தனது குதிரையில் ஏறி பனங்காமத்திற்குப் பயணமானான்.

***

ஆனை அடித்து அமரதாஸா இறந்த ஒரு மாச காலத்தின் பின் ஒருநாள் இரவு. நடுநிசி தாண்டி நாழிகைகள் கழிந்த நேரம். மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்த ஜோதிநாதன் வியர்க்க விறுவிறுக்கப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். அவனை



அணைத்துக்கொண்டு படுத்திருந்த சந்திரவல்லியும் நித்திரை கலைந்து கண்விழித்தாள்.

"என்ன ஜோதி, ஏன் இப்படி வியர்த்துக் கொட்டுகிறது?"

"ஒரு பயங்கரமான கனவு கண்டேன் சந்திரா"

"நீங்கள் கனவைக் கண்டு கலங்குகிற மனிதரில்லையே! என்னத்தைக் கண்டனிங்கள்?"

"கனவில் எனக்கு கொற்றவைத் தெய்வம் வந்து காட்சி தந்தாள்!"

"இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு, வீரமும் வெற்றியும் கண்களில் தெறிக்க, வளைந்த இரு கோரைப் பற்கள் கடைவாயிலிருந்து வெளியே நீண்டு பளிச்சிட, இரு கைகளும் இரு காட்டாரிகளைப் பிடித்திருக்க, மற்றொரு கை மணியொன்றைப் பற்றி நிற்க, நான்காவது கை கழுத்தோடு அறுக்கப்பட்ட கபாலத்தைத் தாங்கி நிற்க - அவள் அதி பயங்கர ரூபிணியாகக் காட்சியளித்தாள்".

'இறந்தோரின் குரல் நீதிக்காக ஒலிக்கிறது! உனது வஞ்சம் உனது கடமை!' என்றாள்.

"அடுத்து நான் பார்த்தபோது அந்தக் கொற்றவைத் தாயின் முகம் எனது அன்னை அழகவல்லியின் முகமாக இருந்தது. அவர் தனது நான்காவது கையில் பிடித்திருந்த கபால முண்டம் அந்திராசியின் தலையாக இருந்தது.

'என்னைக் கொன்றவனை எதற்காக இன்னும் விட்டு வைத்திருக்கிறாய் ஜோதி! அவன் இறக்கும் வரைக்கும் எனது ஆத்மாவுக்கு ஓய்வு கிடைக்காது!' என்றார் அன்னை. அந்தக் கனவைக் கண்டு விழித்துக் கொண்டேன்" என்றான் ஜோதிநாதன்.

மறுநாள் காலை ஜோதிநாதன் அரச மாளிகையின் சபாமண்டபத்தை அடைந்தபோது அங்கே குமாரவன்னியன் மந்திரி சத்தியவாக்கரோடு உரையாடிக் கொண்டிருந்தார்.

"என்ன ஜோதி, சிரிப்பையே காணோம்; உனது முகம் வாடிப்போயிருக்கிறது; என்ன சேதி?" என குமாரவன்னியன் வினவியபோது, ஜோதிநாதன் அன்றிரவு தான் கண்ட கனவையும், கனவில் அவன் தாயார் தோன்றி அவனுக்கிட்ட ஆணையையும் எடுத்துரைத்தான்.

அச்சமயம் சொல்லிவைத்தாற்போல் தலைமை ஒற்றன் அரச கேசரியும் அங்கே வந்து சேர்ந்தான்.

அவனைப் பார்த்த குமாரவன்னியன் -

"எப்போது வந்தாய் அரசு, என்ன சேதி கொண்டு வந்திருக்கிறாய்?" என்று வினவ-

"இரவுதான் யாழ் நகரிலிருந்து திரும்பினேன் அரசே; அமைச்சர் அந்திராசியை நெடுந்தீவில் பூதத்தம்பி முதலியார் கட்டிக்கொடுத்த கோட்டைக்கு அதிபதியாக்கியிருக்கிறார்கள் டச்சுக்காரர்கள். அவரும் அந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்று நேற்றே அங்கு போய்விட்டார். மற்றும் சங்குப்பிட்டிக்கருகே கடற்கரையில் பதின்மூன்று டச்சுக்காரரின் தலைகளைக் கொய்து கம்பங்களில் செருகி வைத்திருந்ததைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அதைத் தொடர்ந்து பூநகரியில் டச்சு இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. அவர்களுக்கெதிராக மக்களின் கொந்தளிப்பும் கிளம்பியிருக்கிறது."

அதைக் கேட்ட குமாரவன்னியன் சொன்னார்-

"ஜோதி, இதுதான் நல்ல தருணம், நீ உடனடியாக ஒரு சிறு படையை அழைத்துக்கொண்டு நெடுந்தீவுக்குப் போய் அந்த அந்திராசியை எமனுலகிற்கு அனுப்பிவிட்டு வா."

"மாமா, ஒன்று சொல்கிறேன் கேளுங்கோ. எனக்கு இன்றுவரை எவரையும் பழிவாங்குவதற்காகக் கொலை செய்து பழக்கமில்லை, போரில் நேருக்கு நேர் நின்று எதிரியைக் கொல்வது வேறு; முதலிலேயே திட்டமிட்டு ஒருவனைப் பழி வாங்குவது வேறு. அவன் என்னதான் கயவனாக இருந்த போதிலும், எனது பெற்றோரைத் திட்டமிட்டு அழித்தவனாக இருந்த போதிலும், அவனை வஞ்சித்துக் கொலை செய்வதை என்னால் செய்ய முடியுமோ தெரியாது".

"நீ அவனைக் கொலை செய்ய வேண்டியதில்லை, எனது படை வீரர்கள் அவனைக் கொன்று போடுவார்கள், போய்விட்டு வரலாம்" என்றார் குமாரவன்னியன்.

"இந்த ஆலோசனை அவ்வளவு நல்லதாக எனக்குப்படவில்லை" என்றார் மந்திரி சத்தியவாக்கர்.

"ஏன் அமைச்சரே?"

"அரசே, டச்சுக்கார அரசின் ஒற்றர்கள் இந்த மண்ணிலும் உலவி வருகிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். ஜோதி ஒரு படையோடு புறப்பட்டால், அவன் கட்டாயமாக அவர்களது கவனத்தை ஈர்த்து, அவர்கள் டச்சு அரசுக்குத் தெரிவிப்பார்கள். நடுக்கடலிலேயே ஜோதியும் அவனது வீரர்களும் மூழ்கடிக்கப்படுவார்கள்."

"அப்போது உங்கள் ஆலோசனை என்ன?"

"ஜோதி தனியனாகப் போகட்டும். ஆடம்பரமான உடைகள் வேண்டாம்; கலைந்த தலையோடும், சாதாரணமான உடைகளோடும் போகட்டும். அவனைக் காண்பவர்கள் அவனை இனம் கண்டுகொள்ள கூடாது.

இரவு நேரம் இங்கிருந்து பிரயாணம் செய்தால் விடிவதற்கு முன் மண்ணித்தலையை அடைந்துவிடலாம். அதிகாலையில் அங்கே ஒரு படகை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு புறப்பட்டால் இருட்டுவதற்கு முன்னர் நெடுந்தீவை அடைந்து விடலாம், அவன் எவரும் அறியாமல் இரவோடு இரவாகப் போய் வருவதே புத்திசாலித்தனமானது.

மேலும் நாளைக்கு பௌர்ணமி தினம். அவனுக்குக் காட்சிதந்த அம்பாள் பௌர்ணமி நாளில் நிச்சயம் அவனுக்குத் துணை நிற்பாள். ஜோதி இன்றிரவே புறப்பட்டுப் போகட்டும்" என்றார் அமைச்சர் சத்தியவாக்கர்.



அமைச்சரின் ஆலோசனைப்படி தனது மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு, இரவோடு இரவாக மண்ணித்தலைக்கு தனது குதிரையை ஓட்டிச் சென்றான் ஜோதிநாதன். பௌர்ணமிக்கு முதல்நாள் நிலவு அந்த இரவில் அவனுக்கும் அவனது குதிரைக்கும் வழிகாட்டப் போதுமானதாக இருந்தது.

பூநகரிக்கு மேற்கே பாக்குத் தொடுவாயில் துருத்திக்கொண்டிருக்கும் நிலநீட்சியில் அமைந்த ஒரு சிறிய துறை மண்ணித்தலை. அங்கிருந்த ஒரு படகுக்காரனிடம் தனது குதிரையைப் பார்த்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டு, அவனிடம் ஒரு படகை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அந்த நிலநீட்சியின் முடிவிலிருந்த கல்முனையைச் சுற்றி தனது படகைச் செலுத்தி, நெடுந்தீவு நோக்கிய தனது கடல் பயணத்தை ஆரம்பித்தான் ஜோதிநாதன்.

***

பூமிக்கு மேலே பூந்தோட்டமாக வியாபித்துக் கிடந்த வானத்தில் விரிந்த வெண்தாமரையாக பூரண நிலவு பூத்துக் கிடக்க, சிவந்த செவ்வந்திப் பூக்களாக விண்மீன்கள் செவ்வொளி வீசிக் கொண்டிருந்த அந்த இரவில் ஜோதிநாதன் நெடுந்தீவை அடைந்ததையும் -

அந்த நிலவொளியில் அங்கிருந்த தடாகத்தில் நீச்சல் போட வந்த டச்சுப் பெண் கதரினாவைக் கெடுக்க வந்த கோயா என்ற இராணுவ வீரனை அவள் ஜோதிநாதனின் உதவியோடு குத்திக் கொலை செய்ததையும் -

பின்னர் ஜோதிநாதனின் உதவியோடு அந்த டச்சு வீரனின் சடலத்தை அங்கே புதைத்துவிட்டதையும் -இக் கதையின் ஆரம்ப அத்தியாயத்தைப் படித்த நேயர்கள் அறிந்திருப்பீர்கள்.

அந்த டச்சுக்காரப் பெண் கதரினா ஜோதிநாதனைப் பார்த்து -

"இன்று எனது மானத்தைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் செய்த உதவிக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை. உங்களுக்கு இரவில் தங்க இடமில்லை என நினைக்கிறேன். நீங்கள் விரும்பினால் இன்றிரவு இங்கே கோட்டைக்குள் தங்கிவிட்டுப் போகலாம். இங்கே நிறைய அறைகள் இருக்கின்றன; நீங்கள் வந்து போனதை எவரும் கவனிக்கமாட்டார்கள்" என்றாள்.

"மிக்க நன்றி; கோட்டைக்குள் தங்கிவிட்டுப் போகிறேன். அங்கே வேறு யார்யாரெல்லாம் இருக்கிறார்கள்?"

"இங்கே எனது தாயாரும், அமைச்சர் அந்திராசியும், நானும் மட்டுந்தான் இன்று இருக்கிறோம்"

"வேறு காவலாளிகள் ஒருவரும் இல்லையா?"

"காவலுக்குக் கோயாவை மட்டுந்தான் இங்கே விட்டுவிட்டுப் போனார்கள். அவன் இப்படிக் காமவெறியனாக மாறுவான் என ஒருவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்."

கோயாவைக் கொலை செய்ததைப் பற்றி எதுவிதமான உணர்ச்சிகளையும் அந்த டச்சுப் பெண் வெளிக்காட்டாதது அவனுக்கு விந்தையாக இருந்தது.

அவள் ஜோதிநாதனை கோட்டைக்குள் அழைத்துச் சென்ற சமயம் நடுநிசிக்கு மேலாகிவிட்ட போதிலும் வெளி மண்டபத்தில் மேசையில் எரிந்துகொண்டிருந்த மெழுகு திரியின் முன்னால் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்திராசி போத்தலும் கையுமாக கண்ணாடிக் குப்பியில் ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தார்.

அவள் தனது வாயில் விரலை வைத்து ஜோதிநாதனை ஓசைப்படாமல் வரும்படி சைகை செய்து உள்ளே அழைத்துச் சென்றாள். ஓர் அறையைத் திறந்து மெழுகுவர்த்தியை ஏற்றி அங்கிருந்த கட்டிலில் அவன் அன்றிரவு படுக்கலாம் எனக் கூறினாள்.

"அவர்தானா அந்திராசி? இந்த நேரம் வரை குடித்துக்கொண்டிருக்கிறாரே?"

"அவர் இங்கே வந்த நாளிலிருந்து இரவும் பகலும் குடித்துக் கொண்டேயிருக்கிறார். அவருக்கு நாளோ நேரமோ என்னவென்றே தெரியாது" என்றவள்-

"நாளைக் காலை நான் நேரம் கழித்துத்தான் நித்திரைவிட்டு எழுவேன்; அப்போது நீங்கள் இங்கே இருப்பீர்களோ தெரியாது. நீங்கள் செய்த உதவிக்கு மீண்டும் மிக்க நன்றி" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்று போனாள்.

ஒரு நாழிகை நேரம் தனது கட்டிலில் உட்கார்ந்த ஜோதிநாதன் அக்கோட்டையின் அரவம் எல்லாம் அடங்கியதும் கையில் மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டு கோட்டையின் சேகரிப்புக்கிடங்கை நோக்கிச் சென்றான். ஏற்கனவே ஒரு தடவை அங்கே வந்த டச்சுப்பெண்ணோடு வந்துபோனபடியால் அதைக் கண்டுபிடிப்பதில் சிரமமேதும் இருக்கவில்லை. அவன் அங்கே வந்த சமயம் காவலர்கள் எவரும் கோட்டையில் இல்லாதது அவனுடைய செயலை சுலபமாக்கியது.

ஒரு தள்ளு வண்டியை எடுத்து அதில் மண்தோண்டி, அலவாங்கு, கயிற்றுச் சுருள், கத்திகள் ஆகியவற்றோடு எட்டு முழ உயரமான தடிப்பான இரு கம்பங்களையும் எடுத்துப் போட்டுக் கொண்டு கோட்டையை விட்டு வெளியே வந்தான்.

வானத்தில் வெள்ளிஒளி சிந்திக்கொண்டிருந்த பூரணசந்திர வெளிச்சத்தில் வழி கண்டுபிடிப்பதில் சிரமமேதும் இருக்கவில்லை. கடற்கரையோரமாக வண்டியைத் தள்ளிக்கொண்டு, அத்தீவின் மேற்குக்கரையோரமாக இருந்த வெடியரசன் கோட்டையின் அழிபாடுகளுக்கு அப்பாலிருந்த மயானக் காட்டைச் சென்றடைந்தான்.

கடல் அலைகளின் ஓசையைத் தவிர உயிர் நடமாட்டம் எதுவுமே இல்லாத மயானம் அந்த நிலவொளியில் அச்சமூட்டும் ஓர் உணர்வைக் கொடுத்தது. போர்த்துக்கீசரைப் புதைத்த புதைகுழிகளின் மேல் நடப்பட்ட சிலுவைகளும், சில முக்கியஸ்தர்களைப் புதைத்த இடத்தில் எழுப்பப்பட்டு இன்று பாழடைந்து போய்க் கிடக்கும் மண்டபங்களும் பற்றையும் புதரும் மண்டிப் போய் ஒரு திகிலுணர்வைத் தந்தன.

தான் கொண்டு வந்த தள்ளுவண்டியை நிறுத்திவிட்டு மண்தோண்டியை எடுத்து இடையே ஆறு முழ இடைவெளிவிட்டு இரு குழிகள் தோண்டினான். தான் கொண்டு வந்த இரு கம்பங்களையும் அக்குழிகளில் ஒன்றையொன்று நடுவில் குறுக்கிடுமாறு 'X' வடிவில் நட்டு இடையில் கட்டுப்போட்டான், மிகுதிக் கயிற்றை



அங்கே போட்டுவிட்டு, கொண்டு வந்த உபகரணங்களை தள்ளுவண்டியில் எடுத்துக்கொண்டு கோட்டைக்குத் திரும்பினான்.

தான் எடுத்து வந்த உபகரணங்களை கோட்டையின் சேமிப்புக் கிடங்கில் போட்டுவிட்டு ஜோதிநாதன் வெளிமண்டபத்திற்கு வந்தபோது அங்கே அந்திராசி நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் மேசையில் தலையை வைத்து உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அந்திராசியைத் தோளில் போட்டுத் தூக்கிக்கொண்டு போய் தள்ளுவண்டியில் வைத்து மயானம்வரை உருட்டிச் சென்றபோது அவனிடமிருந்து முனகல் ஒலிகள் வந்தனவே தவிர அவன் கண் விழிக்கவில்லை. போதையில் அவன் மூழ்கிப்போயிருந்தான்.

மயானம் வந்ததும் அந்திராசியைத் தூக்கிக்கொண்டுபோய் ஏற்கனவே 'X' வடிவில் நட்டுவைக்கப்பட்டிருந்த கம்பங்களில் அவனது கைகளையும் கால்களையும் கட்டினான். கண்விழித்த அந்திராசி "நான் எங்கே இருக்கிறேன்? எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டுக்கொண்டேயிருந்தான்.

தனது கையிலே கத்தியை எடுத்துக்கொண்ட ஜோதிநாதன் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த அந்திராசிக்கருகே வந்தான்.

இந்தக் கயவனான அந்திராசி திட்டமிட்டு சூழ்ச்சி செய்து தனது தந்தை பூதத்தம்பிக்கு தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவன்; தனது அருமைத் தாயாரைக் கற்பழிக்க முயன்று அவரைத் தற்கொலை செய்ய வைத்தவன்; தன்னைப் பாதாள சிறைக்கு ஆயுள்தண்டனை அனுபவிக்கும்படி அனுப்பி வைத்தவன்; தன்னைக் கொலை செய்யும்படி அரச மாளிகைக்கே ஆள் அனுப்பி வைத்தவன்!

கையில் கத்தியை எடுத்த ஜோதிநாதனால் மனதை ஒருநிலைப்படுத்தி அந்தக்காதகனைக் குத்திக் கொல்ல முடியவில்லை.

கையிலெடுத்த கத்தியைக் கீழே போட்டுவிட்டு, அந்த மயானத்தில் நட்ட கம்பங்களில் அந்திராசியைக் கட்டியபடியே விட்டு விட்டு, தள்ளுவண்டியை எடுத்துக்கொண்டு கோட்டையை நோக்கி நடந்தான் ஜோதிநாதன். கோட்டையை அடைந்ததும் தள்ளுவண்டிலை சேமிப்புக் கிடங்கில் வைத்துவிட்டு சிறிது நேரம் சிந்தித்தான். தான் செய்யும் செயல் சரியா? தவறா? என்றதொரு ஐயம் அவனது மனதைக் குடைந்துகொண்டேயிருந்தது.

அந்திராசியைப் பழிவாங்கும் நோக்கோடுதான் ஜோதிநாதன் நெடுந்தீவுக்கு வந்திருந்தான். அந்திராசி என்னதான் கயவனாக இருந்த போதிலும் மது மயக்கத்திலிருக்கும் போது அவனைக் கொல்வது ஜோதிநாதனுக்குச் சரியான செயலாகப்படவில்லை. அவனது கட்டுக்களை அவிழ்த்து அவன் 'பிழைத்துப் போகட்டும் என விட்டுவிடுவோம்' என்ற எண்ணத்தோடு அவன் திரும்பிச் சென்றிருந்தான். ஆனால், அடுத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் வேறுவிதமாக அமைந்தன.

நிலவின் ஒளியில், கடற்கரை மணலில் அவன் மயானத்தை நோக்கி நடந்து வந்த போது கடலலைகளின் ஓசைக்கு மேலாக அமைதியாகவிருந்த மயானத்திலிருந்து 'கீ கீ'யெனப் பறவைகள் கீச்சிடும் ஒலி கேட்டது. அவன் மயானத்தை நெருங்க நெருங்க அந்தப் பறவைகள் போடும் சத்தம் அதிகரித்துக்கொண்டே போயிற்று. சிறு வயதில் 'மயானப் பறவைகள்' பற்றியும் 'சுடலைக்குருவிகள்'பற்றியும் கதைகளைக் கேட்டிருக்கிறான். இச் சத்தம் அவைகளின் ஒலியாக இருக்குமோ?

ஜோதிநாதன் மயானத்தை வந்தடைந்தபோது அங்கே அவன் கண்ட காட்சி இரத்தத்தை உறைய வைத்தது.

கம்பங்களில் கட்டப்பட்டிருந்த அந்திராசியின் தலையில் ஒரு ராட்சத வௌவால் உட்கார்ந்து அவனது தலையைக் கொத்திக் கொண்டிருந்தது. அந்த வலி தாங்காமல் அந்திராசி அலறிக் கொண்டிருந்தான்.

வானத்தில் வெள்ளி நிலவு மின்னொளியை அள்ளி வீசிக்கொண்டிருக்க, அதன் கீழே அந்திராசியின் தலைக்கு மேலே நூற்றுக்கணக்கான கரிய பெரிய வௌவால்கள் 'கீ கீ' என ஒலி பரப்பியவாறு சுற்றிச்சுற்றி வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தது, ஒரு பயங்கரமான திகிலுணர்வைக் கொடுத்தது. இத்தனை ராட்சத வௌவால்களும் எங்கிருந்து இங்கே வந்து சேர்ந்தன?

சடுதியாக அத்தனை வௌவால்களும் அந்திராசியை நோக்கிப் பறந்து வந்து அவனது உடலைக் குத்திக்குதற ஆரம்பித்தன. வலி தாங்க முடியாமல் "என்னை விடு! என்னை விடு!" என அவன் போட்ட அலறல் அத் தீவு முழுவதும் எதிரொலித்தது.

அந்தக் காட்சியைக் கண்கொண்டு காணச் சகிக்காத ஜோதிநாதன் திரும்பி தனது படகு தங்கிநின்ற குடாவை நோக்கி நடந்தான்.

பாரம்பரியமாக அத்தீவின் கோட்டையைக் கட்டிய பூதத்தம்பி முதலியாரின் கதையைக் கூறிவந்த நெடுந்தீவு மக்கள் அந்த அகால இரவில் சுடலையிலிருந்து வெளிக்கிளம்பிய அந்திராசியின் மரண ஓலத்தைப் பற்றியும் குறிப்பிடத் தவறுவதில்லை.

விடிவதற்கு முன்னான கருக்கிருட்டு நேரத்தில் ஜோதிநாதனின் படகு பூநகரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது, அவனது காதுகளில் அந்திராசியின் மரண ஓலம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

அந்திராசியைப் பழிவாங்க தெய்வ அநுக்கிரகமோ அல்லது இயற்கை நியதியோ அவனுக்குத் துணை நின்ற போதிலும், அதனால் ஒருவிதமான திருப்தியோ, மன நிறைவோ அவனுக்குக் கிடைக்கவில்லை.

அவன் தனது தந்தையை அந்திராசியின் சூழ்ச்சியால் இழந்தது ஒரு சோகம்; அருமைத் தாயார், அந்திராசியின் ஆசைக்குப் பலியாகி உயிரிழந்தது ஒரு சோகம்; அதுபோல் அந்திராசி பறவைகளால் கொத்தப்பட்டு இறந்ததும் ஒரு சோகம்தான்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் சூழ்ச்சி செய்து அழிப்பதையும், ஒருவர் மீது ஒருவர் வஞ்சம் தீர்ப்பதையும் அவனால் நியாயப்படுத்த முடியவில்லை. அந்திராசியை அழிப்பதை தனது பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையாகக் கொண்டானே ஒழிய பழிக்குப் பழி என்ற எண்ணம் அவன் மனதில் இருக்கவில்லை.

'உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவிடும்படியான ஒரு நிலைக்கு வரும்வரை மனிதகுலம் உய்யப் போவதில்லை' என எண்ணிக்கொண்டான்.

அடுத்த இதழில் முடியும்.



## நடிகை எமியின் உடற்பயிற்சி! இளையோருக்கு பயன் தரும் வீடியோ!!

**நடிகை எமி ஜாக்சன் உடற்பயிற்சி செய்யும் வீடியோவை வெளியிட்டுள்ளார். சமீபத்தில் விராட் கோஹ்லியின் ஃபிட்னஸ் சேலஞ்ச் டிரெண்ட் ஆனது. இப்போது எமி ஜாக்சன் வீடியோ ட்ரெண்ட் ஆகிறது. ஆனால், விராட் மாதிரி இவர் எந்த சேலஞ்சும் விடவில்லை. பொதுவாக நடிகைகள் என்றாலே ஜிம்முக்கு போவார்கள், உடற்பயிற்சி செய்வார்கள் என்பது தெரிந்த விஷயம்தான். அந்த எண்ணத்தை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக நடிகை எமி ஜாக்சன் உடற்பயிற்சி செய்யும் வீடியோவை வெளியிட்டுள்ளார். தம்பல்ஸ் வைத்து அவர் உடற்பயிற்சி செய்யும் வீடியோ வைரலாக பரவி வருகிறது. உடலினை உறுதி செய்ய வேண்டும் என ஜிம்முக்கு போகும் இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக அந்த வீடியோ அமைந்துள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல ஃபிட்னஸ் ட்ரெயினரான பிராட்லி சைமண்ட்ஸுடன் மீண்டும் பயிற்சியைத் துவங்கி விட்டதாக எமி ஜாக்சன் குறிப்பிட்டுள்ளார். லண்டனில் உள்ள தி மே ஃபேர் நட்சத்திர விடுதியின் உடற்பயிற்சி கூடத்தில் அவர் உடற்பயிற்சி செய்கிறார். மதராசப்பட்டினம் திரைப்படம் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் எமி ஜாக்சன். பார்பி பொம்மை போல் இருக்கும் அவருடைய அழகையும், அவரின் கொஞ்சல் தமிழையும் கண்டு, துரையம்மா என செல்லமாக அழைக்க ஆரம்பித்தார்கள். ஐ, தாண்டவம், தங்கமகன் என தமிழ்ப்படங்களில் நடித்த எமி ஜாக்சன் அடுத்ததாக 2.0வில் கலக்க காத்திருக்கிறார். அதுசரி, உடற்பயிற்சி செய்யும் வீடீயோவை பார்த்து கெட்டுப்போனால், அதற்கு நீங்களே பொறுப்பாளிகள்!**

## உடல் உறுப்புகள் தானம் செய்த தைரியமான நடிகை!



நடிகை ராதிகா ஆப்தே உடல் உறுப்பு தானத்திற்கு பதிவு செய்துள்ளார். பிரபல பாலிவுட் நடிகையான ராதிகா ஆப்தே, தைரியமாக முடிவெடுக்கும் நடிகை. இவர் தமிழில், ஆல் இன் ஆல் அழகு ராஜா, கபாலி போன்ற படங்களில் நடித்துள்ளார். கபாலி திரைப்படத்தில் ரஜினிகாந்தின் மனைவியாக நடித்தது வெகுவாக பாராட்டப்பட்டது. ராதிகா ஆப்தே, மாதவிடாய் காலங்களில் பெண்கள் பேண வேண்டிய சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். இப்போது, எல்லோரும் போற்றக்கூடிய மற்றொரு வேலையையும் செய்துள்ளார். இறப்புக்குப் பிறகு மற்றவர்களுக்கு பயன்படும் வகையில், உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்துள்ளார். உடல் உறுப்பு தானத்திற்கு பதிவிட்ட கொடையாளி என்பதற்கான அடையாள அட்டையை ட்விட்டரில் பதிவிட்டு இதை செய்வதற்கு இரண்டு நிமிடங்கள்தான் ஆனது என 'ட்வீட்' செய்துள்ளார். இதபோல், பல வருடங்களுக்கு முன்பே நடிகர் கமல்ஹாசன் உடல் உறுப்புகளை தானம் செய்ய பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரமாண்ட படத்தில் சிரஞ்சீவியுடன் நயன்!



**நடிகை நயன்தாராவுக்கு தமிழ் சினிமாவில் எப்போதுமே முதலிடம்தான் என ரசிகர்கள் வைத்து விட்டார்கள். கதாநாயகியை மையப்படுத்திய கதைகளில் அவர் அதிகம் நடித்து வருகிறார்.**

**அஜித் நடிக்கும் விசுவாசம் படத்திலும் அவர்தான் ஹீரோயின். கொலையுதிர்காலம், இமைக்காநொடிகள் என அடுத்தடுத்த படங்கள் அவரின் நடிப்பில் ரிலீஸ் ஆக காத்திருக்கிறது. இந்நிலையில் அவர் சயீரா நரசிம்ம ரெட்டி படத்தில் நடித்துள்ளார். பிரம்மாண்ட பட்ஜெட்டில் எடுக்கப்படும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக சிரஞ்சீவி நடிக்கிறார். மேலும், இப்படத்தில் அமிதாப் பச்சன், விஜய் சேதுபதி ஆகியோரும் நடிக்கிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்புக்காக நயன்தாரா ஹைதராபாத் சென்றுள்ளார்.**

# 4 வயதில் நடிக்க ஆரம்பித்து இப்போது 'வயதான ரஜினி' காதலி...

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். 13 வயதில் கதாநாயகியாகி, 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தென்னிந்திய சினிமாவின் 'டாப் ஹீரோயின்'. 35 ஆண்டுகளுக்கும் மேலாகச் சினிமாவில் புகழுடன் இருக்கிறார் மீனா. நமது நிருபர் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

**குழந்தை நட்சத்திரமாக முதல் சினிமா வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?**

அம்மா அப்போ அரசியல்ல இருந்தாங்க. அதனால சிவாஜி சாருக்கும் எங்களுக்கும் நல்ல நட்பு இருந்தது. ஒருமுறை சிவாஜி சாரின் பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவிக்க அம்மாவுடன் போயிருந்தேன். சிவாஜி சாருக்கு நான் மாலை அணிவிச்சேன். அந்த நேரம்தான் 'நெஞ்சங்கள்' படத்தில் நடிக்க ஒரு குழந்தை நட்சத்திரத்தைத் தேடிட்டு இருந்தாங்க. என்னுடைய பேச்சு, துடுக்குத்தனம் எல்லாம் சிவாஜி சாருக்குப் பிடிச்சுப்போக, 'நெஞ்சங்கள்' படத்துல என்னை நடிக்க பண்ணினாங்க. அந்த நாலு வயசுல சினிமாவைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. டைரக்டர் மேஜர் சுந்தரராஜன் அங்கிள் சொல்லிக்கொடுத்ததுபோல நடிச்சேன்.



தொடர்ந்து பல மொழிகளிலும் குழந்தை நட்சத்திர வாய்ப்புகள் கிடைக்க, பிஸியானேன். அதனால் படிப்பு ரொம்ப பாதிக்கப்பட்டுச்சு. ட்யூஷன் வெச்சுதான் படிச்சேன். தொடர்ச்சியான சினிமா வாய்ப்புகளால், எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டியதாச்சு. ஆனா, படிப்பு ரொம்ப முக்கியம்னு முடிவெடுத்து, பிஸி ஷெட்யூலுக்கு இடையிலும் கரஸ்ல பி.ஏ. மற்றும் எம்.ஏ. முடிச்சேன்.

**குழந்தை நட்சத்திரம் மீனா, கதாநாயகியானபோது அந்த முதிர்ச்சி நடிப்பில் கைகூடியதா?**

அப்போ எனக்கு 13 வயசுனு நினைக்கிறேன். தமிழ்ல 'என் ராசாவின் மனசிலே', தெலுங்கில் 'நவயுகம்'னு ஒரே நேரத்துல ரெண்டு படங்கள்ல ஹீரோயினா நடிச்சேன். ரெண்டு படங்களிலுமே எனக்குக் கர்ப்பிணி ரோல். ஹீரோயினா நடிக்க எனக்குப் பயமில்லை; சொல்லிக் கொடுக்கிறதை அப்படியே நடிச்சுடலாம்னு ஒரு நம்பிக்கை. 'நவயுகம்' பட ஷூட்டிங்... 'காத்தடிக்கும், மழை வரும், ஜன்னலைச் சாத்தும்போது பிரசவ வலி வரும், பயங்கரமா கத்தணும்'னு சொல்லி நடிக்கச் சொன்னாங்க. ரிகர்சலில் நான் 'ஓ'னு அழுது நடிக்க ஆரம்பிச்சேன். சுத்தியிருந்த எல்லோரும் சிரிச்சாங்க. 'ஏன்?'னு கேட்டேன். 'கண்ணைக் கசக்கிட்டு அழக் கூடாது. வலி இடுப்புலதான் வரும். அங்கே கை வெச்சுதான் அழணும்'னு சொன்னாங்க. அப்போதான் குழந்தை நட்சத்திரமா நடிக்கிறதுக்கும், ஹீரோயினா நடிக்கிறதுக்குமான வித்தியாசத்தை மனதளவில் உணர்ந்தேன்.



**ரஜினியின் மகளாக நடித்துவிட்டு, 'எஜமான்' படத்தில் அவருடன் ஜோடியாக நடித்த அனுபவம்...?**

ஹீரோயினா பல படங்கள்ல நடிச்சுட்டேன். அப்போ 'எஜமான்' படத்துல என்னை செலக்ட் பண்ணறதா பேச்சு அடிபட்டுச்சு. 'ரஜினி அங்கிளுக்கு நான் ஹீரோயினாவா? இதெல்லாம் சாத்தியமே இல்லை'னு முதல்ல நினைச்சேன். 'அவர் பெரிய நடிகர், ரொம்பச் சின்னப் பொண்ணான என்னை ஜோடியாக்க அவர் சம்மதிக்க மாட்டார்'னு நினைச்சிருந்தேன். 'ரஜினி சார் 'ஓகே' சொல்லிட்டார்; நீங்கதான் ஹீரோயின்'னு டைரக்டர் ஆர்.வி.உதயகுமார் சார் சொன்னார்.

முதல் நாள் ஷூட்டிங் போற வரை எனக்கு நம்பிக்கையே இல்லை. எனக்கும் ரஜினி சாருக்கும் சில ஷாட்கள் எடுத்ததுக்கு அப்புறம்தான் நம்பினேன். ஷூட்டிங் ஸ்பாட்ல எல்லார்கிட்டயும் சகஜமா பேசுவேன். சாரை பார்த்தா மட்டும் தலையைக் குனிஞ்சுப்பேன். ஒரு கட்டத்துல அவர் எங்கம்மாகிட்ட, 'பொண்ணுக்கு என்னாச்சுங்க... என்னைப் பார்த்தா மட்டும் டல் ஆகிடுது?'னு கேட்டார். பல ஷெட்யூல்களுக்குப் பிறகுதான் அவருடன் ஓரளவுக்கு பேச ஆரம்பிச்சேன்.

'நீ தெலுங்கில் பெரிய ஹீரோயினாமே... உன் கால்ஷீட்டுக்குப் பயங்கர போட்டினு கேள்விப்பட்டேன். சந்தோஷமா இருக்கு. காட் பிளஸ் யூ'னு சொன்னார். 'எஜமான்' படம் ரிலீஸாகி, டூயட் காட்சிகளைப் பார்த்தப்போ அவ்ளோ ஆச்சர்யமும் சந்தோஷமும் எனக்கு. தொடர்ந்து அவர்கூட முத்து, வீரா படங்களில் நடிச்சேன். அப்போ அவர்கூட எந்தக் கூச்சமும் இல்லாம இயல்பா பழகினேன்.

# சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு பா.விஜய் சவுக்கடி படம்!

தமிழகமே தலை குனிந்து நிற்பதாக கவிஞரும், நடிகருமான பா.விஜய் வேதனை தெரிவித்துள்ளார். பாடலாசிரியர் பா.விஜய் எழுதி இயக்கி, தயாரித்து நடித்துள்ள படம் 'ஆருத்ரா'. இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. இந்த விழாவில் இயக்குநர்கள் எஸ்.ஏ.சந்திரசேகர், பாக்கியராஜ், பேராசிரியர் ஞானசம்பந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆருத்ரா பட இசைத்தட்டை எஸ்.ஏ.சந்திரசேகரும், கே.பாக்யராஜும் இணைந்து வெளியிட, அதை பா.விஜயின் தந்தை பெற்றுக்கொண்டார். விழாவில் பேசிய பா.விஜய், "இன்றைய சூழலில் ஒரு படத்தை எடுப்பது மிகவும் சுலபம். ஆனால், அதனை வெளியிடுவதுதான் மிகவும் சவாலானது. அந்தவகையில் 'ஆருத்ரா' படத்தை வெளியிடும் தேனாண்டாள் பிலிம்ஸ் முரளிக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தப் படத்திற்கு சென்சார் வாங்குவதற்குள் 'திகில்' அனுபவமாகி விட்டது. முதலில் படத்தைப் பார்த்தவர்கள் இந்தப் படத்திற்கு என்ன சான்றிதழ் தருவதென்றே தெரியவில்லை எனக் கூறி ரிவைசிங் கமிட்டிக்கு அனுப்பி விட்டார்கள். அங்கிருந்த அதிகாரிகளும் படத்தைப் பார்த்து விட்டு, சுமார் ஒரு மணி நேரம் விவாதித்தார்கள். பின்னர் சில வன்முறைக் காட்சிகளை நீக்கச் சொல்லிவிட்டு, யு/ஏ சான்றிதழ் வழங்கினார்கள். ஆனால், படத்தை வெகுவாக அவர்கள் பாராட்டினார்கள். நிர்பயா பலாத்கார சம்பவத்தின் தாக்கத்தினாலேயே இப்படத்தை நான் உருவாக்கினேன். தற்போது நிகழ்ந்து வரும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு சவுக்கடியாக இப்படம் இருக்கும். சரியான சந்தர்ப்பத்தில் இப்படம் வெளியாகிறது என நினைக்கிறேன். ஒரு குழந்தையை பாதுகாப்பது அவரது பெற்றோர்களின் பொறுப்பு. ஆனால், நம் தமிழகத்தில் பெற்றோர்கள், குழந்தைகளைப் பார்க்காமல் போனைப் பார்த்தபடி இருக்கிறார்கள். தமிழகமே தலை குனிந்தபடி வாட்ஸ் அப் பார்த்தபடி உள்ளது. இவற்றிற்கெல்லாம் தீர்வு சொல்லும் வகையில், பெற்றோர்கள் குழந்தைகளை எவ்வாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் படமாக ஆருத்ரா இருக்கும்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நான் பாடியிருந்தால் அவர் உயிருடன் மீண்டிருப்பார்!

நவரசங்களின் ஒட்டுமொத்த உணர்ச்சி குவியல்தான் டி.ராஜேந்தர். பன்முக படைப்பாளி. தஞ்சை மண்ணை சொந்தமாக கொண்டவர். இவரது நிறைய பாடல்களில் தன் மண்ணின் காதலை வைத்து பாடல்களை அள்ளி கொடுத்திருப்பார் டி.ஆர். தன் முதல் படமான ஒருதலைராகம் படத்தில் 'கூடையிலே கருவாடு' பாட்டிலேயும் தன் காவிரியை நுழைத்துக் கொண்டார். "ஆயிரத்தில் நீயே ஒண்ணு, நானறிஞ்ச நல்ல பொண்ணு... மாயூரத்து காளை ஒண்ணு, பாடுதடி மயங்கி நின்னு... ஓடாதடி காவேரி... உன் மனசில் யாரோடி" என்றார்.



காவிரி ஆற்றின் மீதுள்ள மையலை, பல பாடல் வரிகளில் காட்டினார். சமீபத்தில்கூட, காவிரி நீர் திறந்துவிட வேண்டும் என்று திருவையாறு காவிரி கரைக்கே ஆதரவாளர்களுடன் வந்துவிட்டார், டி.ஆர். அப்போது, தாயே ... காவிரி தாயே... தண்ணீரை தாயேன் தாயேன்... என மனமுருகி வேண்டி, அங்கேயே விளக்கு ஒன்றையும் ஏற்றி வழிபாடும் நடத்திவிட்டு சென்றார். இந்நிலையில் தற்போது திருவையாறு கரையில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. தண்ணீர் வேண்டும் என்று வேண்டுதலை நடத்திவிட்டு சென்ற டி.ஆர். வெள்ளநீர் ஓடுவதை கண்டு மீண்டும் திருவையாறுக்கு சமீபத்தில் வந்தார். கூடவே அவரது ஆதரவாளர்களும் வந்தனர்.

திருவையாறு காவிரிக் கரை புஸ்ப மண்டப படித்துறைக்கு வந்த டி.ஆர், படித்துறையிலேயே ஒரு வாழை இலையை விரித்து வைத்தார். அதில் மாவிளக்கில் தீபம் ஏற்றினார். பின்னர் பொங்கல் வைத்து படையல் இட்டு வழிபட்டார். கூடவே அவரது ட்ரேட்மார்க் பாட்டும் ஆரம்பமானது. "தவழ்ந்து தவழ்ந்து வாயேன், தமிழ்நாடு வாழ வாயேன்" என்று பொங்கி வரும் காவிரி நீரை வரவேற்று பாடல் பாடினார். சும்மா பாடவில்லை... ட்ரம்ஸ் இசைத்தபடியே பாடி வணங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டி.ராஜேந்தர், சினிமாவில் எந்த ஒரு ஹீரோயினையும் தொட்டுக்கூட நான் நடித்ததில்லை என்றார். மேலும் இனிவரும் காலங்களில் தனது பயணம் ஒரு ஆன்மீகவாதியாக மட்டுமே தொடரும் என்றார். அத்தோடு விட்டாரா டி.ஆர். கூடவே, "கலைஞர் மருத்துவமனையில் இருந்தபோது, நான் போய் பாடியிருந்தால் அவர் உயிருடன் வந்திருப்பார்" என்று ஒரே போடாக போட்டார்!.

# குடித்து கும்மாளம் போட்ட தமிழ் சினிமா பிரபலங்கள்!



நடிகை சாயிஷாவின் பிறந்த நாள் விழாவில் சினிமா பிரபலங்கள் பலரும் மதுபோதையில் கும்மாளமிட்டனர். ஜெயம் ரவி நடித்த 'வனமகன்' படம் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோயினாக அறிமுகமானவர் சாயிஷா. தொடர்ந்து கடைக்குட்டி சிங்கம், ஜுங்கா, கஜினிகாந்த் உள்ளிட்ட படங்களில் நடித்து, முன்னணி நாயகியாக வளர்ந்து வருகிறார். இவர் தனது 21வது பிறந்தநாளை சமீபத்தில் கொண்டாடினார். இதையொட்டி சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் சினிமா பிரபலங்களுக்கு சாயிஷா பார்ட்டி கொடுத்தார். அதில் நடிகர்கள் பிரபுதேவா, ஆர்யா, சதீஷ், சவுந்தர்ராஜா மற்றும் இயக்குனர் விஜய், தயாரிப்பாளர்கள் என பிரபலங்கள் பலரும் கலந்துகொண்டனர். இரவில் நடந்த பிறந்தநாள் பார்ட்டியில் சாயிஷா கேக் வெட்டி தனது பிறந்தநாளை கொண்டாடினர். விடிய, விடிய நடந்த பிறந்தநாள் விழாவில் மது விருந்தும் அளிக்கப்பட்டது. பார்ட்டியில் பங்கேற்ற பிரபலங்கள் பலர் மதுபோதையில் கும்மாளமிட்டனர். இது கோலிவுட் வட்டாரத்தில் ஹாட் டாப்பிக்காக இருக்கிறது.

# 'பிக்பாஸ்–2' எல்லாம் நடிப்பு! காதலாவது, கத்திரியாவது!!





பிக்பாஸ்-2 வீட்டில் இந்த யாஷிகாவும், மகத்தும் அடித்த லூட்டி இருக்கே 'அப்பா' சொல்ல முடியாத அளவுக்கு நடந்து கொண்டார்கள். கேட்டால் மகத்தை காதலிப்பதாக கமலிடம் ஒப்புக் கொண்டார், யாஷிகா. மகத் மீது காதல் வந்தது உண்மைதான். அவருக்கு என்று தனிப்பட்ட வாழ்க்கை உள்ளது. நான் அதை மதிக்கிறேன் என்று யாஷிகா பெருந்தன்மையாக கூறியதை கேட்டு கமல் மற்றும் பார்வையாளர்களுக்கு அவர் மீது மரியாதை வந்தது. சின்னப் புள்ளையாக இருந்தாலும் எவ்வளவு பெருந்தன்மையாக பேசுது பார் என்றார்கள். மகத் பெயர் இனியும் கெடாமல் இருக்கத்தான் அப்படி சொன்னேன் என்று யாஷிகா சக போட்டியாளர்களிடம் கூறியபோதே, பார்வையாளர்களின் மதிப்பை இழந்துவிட்டார். தனக்கு காதலர் இருப்பதை கூறாமல் மகத்தின் பெயரை காப்பாற்ற அப்படியே விட்டுக் கொடுத்தது போன்று பில்ட்அப் கொடுத்த யாஷிகாவை பார்த்த பார்வையாளர்கள் 'இது உலக மகா நடிப்புடா சாமி' என்று நொந்து கொண்டார்கள். ஒரே நிமிடத்தில் பெயரை கெடுத்துக் கொண்டார் யாஷிகா! யாஷிகாவுக்கு காதலர் இருக்கிறார், மகத்திற்கு காதலி இருக்கிறார். ஆனால், பிக் பாஸ் 2 வீட்டிற்கு வந்த இடத்தில் அவர்களுக்கு இடையே நட்பையும் தாண்டிய உறவு ஏற்பட்டதை ஒப்புக் கொண்டதை பார்த்த பார்வையாளர்கள் துப்புகிறார்கள்! இப்போது எல்லாமே வெளிச்சம்; பிக்பாஸ் - நிகழ்ச்சியே ஒரு சீரியல் மாதிரி. எல்லாமே நடிப்புடா சாமி!

# சிம்பு மாறிவிட்டார்! மணிரத்னம் திருத்திவிட்டார்!!



செக்கச் சிவந்த வானம் படப்பிடிப்பு தளத்தில் மணிரத்னம் சிம்புவை தரதரவென்று இழுத்துச் சென்ற சம்பவம் நடந்துள்ளது. 'சிம்புன்னா வம்பு' என்ற பெயர் கோலிவுட்டில் இருந்தது. அதை மாற்றி தற்போது சமத்தாக மாறி வருகிறார் சிம்பு. சினிமா தவிர பொது விஷயங்களிலும் பொறுப்புடன் பேசி வருகிறார். மணிரத்னம் இயக்கத்தில் 'செக்கச் சிவந்த வானம்' படத்தில் வம்பு தும்பு எதுவும் செய்யாமல் நடித்துக் கொடுத்துள்ளார். சிம்பு படப்பிடிப்புக்கு சரியான நேரத்தில் வரவே மாட்டார் என்று பேசியவர்கள் கண் முன்பு 'செக்கச் சிவந்த வானம்' படப்பிடிப்புக்கு சரியான நேரத்தில் வந்ததுடன் இயக்குனர் சொன்னபடியே நடித்துக் கொடுத்தார். இது சிம்புவா? என்று அனைவரையும் வியக்க வைத்தார். இந்நிலையில் படப்பிடிப்பு தளத்தில் சுவாரஸ்யமான விஷயம் நடந்துள்ளது. மணிரத்னம் 'செக்கச் சிவந்த வானம்' படத்தில் சிம்புவின் வீட்டில் அவரின் சிறுவயது புகைப்படங்கள் வைக்கப்பட்டிருக்குமாம். ஒரு நாள் படப்பிடிப்பில் பிரேக்கின் போது சும்மா உட்கார்ந்திருந்த சிம்புவை பார்த்த மணிரத்னம் அவரின் கையை பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்றாராம்! 'மணி சார் எதற்காக சிம்புவை இப்படி இழுத்துச் செல்கிறார்?' என்று அனைவரும் அவரையே பார்த்துள்ளனர். சிம்புவை இழுத்துச் சென்று, அவரின் சிறுவயது புகைப்படங்களை காட்டியுள்ளார் மணிரத்னம். நான் உன்னை சின்னப் புள்ளையில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். தற்போது நான் எங்கு சென்றாலும் உன் ரசிகர்கள் அப்டேட் கேட்கிறார்கள். நீ அவர்களுக்காக மாற வேண்டும் என்று அறிவுரை வழங்கினாராம். மணிரத்னத்தின் அறிவுரையை கேட்ட சிம்பு, "சார் நீங்கள் என்னை நன்றாக கவனித்துக் கொள்கிறீர்கள். சம்பளத்தை கரைக்டாக கொடுக்கிறீர்கள். ஆனால், மற்றவர்கள் உங்களை போன்று இல்லையே. நான் என்ன செய்வது?" என்று கேட்டுள்ளார். சிம்பு சொல்வதை பார்த்தால் அஅஅ படத்தில் பிரச்சனை ஏற்பட்டதற்கு சம்பள பாக்கிதான் காரணமோ?

## மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர்.தியாகராஜன்




# FOMO

## FEAR OF MISSING OUT



ஆகஸ்ட் மாதத்தில் தமிழகத்திலும் இந்தியாவிலும் இரண்டு அனுபவம் முதிர்ந்த தலைவர்களின் மறைவு மக்களிடையே பெரும் அதிர்வை உண்டாக்கியது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி ஆகஸ்ட் 8ம் திகதி இயற்கை எய்தினார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ஆகஸ்ட் 16ம் நாள் மறைந்தார். இருவரும் 90 வயதுக்குமேல் நன்கு வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்தவர்கள். சுமார் 50 வருடங்களுக்கு மேல் தீவிர அரசியல்வாதிகளாக இயங்கி வந்தவர்கள். அதேசமயம் அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்களைக் கவரும் பேச்சாற்றல் மிகுந்தவர்களாகவும், கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் தங்களை ஒரு மாற்றுத் தளத்திலும் அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். நெருக்கடி மிகுந்த அரசியல் வாழ்வின் அழுத்தங்களை இலகுவாக்க இது போன்ற மாற்றுத் தளங்களில் இவர்கள் ஈடுபாடு காட்டியதே அவர்களது நீண்ட பெருவியாதிகளற்ற வாழ்வுக்கு ஆதாரமாக இருந்திருக்கலாம்.



சுமார் ஒரு வருடத்திற்கு மேல் மௌனம் சாதித்த கலைஞரின் வாழ்வில் கடைசி மூன்று வாரங்கள் எமதர்மராஜாவே அலுப்புறும் வகையில், அவரது உடல்நிலை பரமபத விளையாட்டாக அமைந்தது. கஷ்டப்பட்டே காலதேவனால் அவரைக் ‘கடத்திக்’ கொண்டு போக முடிந்தது. அந்த மூன்று வாரங்களும் கலைஞரின் உடல்நலம் குறித்த செய்திகளும், வதந்திகளும் தமிழகத்தை முற்றிலுமாக ஆக்கிரமித்து இருந்தது. இடையிடையே உடல்நிலை குறித்த பரபரப்புச் செய்திகளும், வந்து போயின. கோபாலபுரத்தில் கலைஞரின் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட பிரபல கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளும், அவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பெரும் பதற்றத்துக்கு தொடர்ந்து ஆளானார்கள். இந்தச் செய்தி பதற்றம் நான் அறியாமலே எனக்குள்ளும் புகுந்து கொண்டது. என்னுடைய விரல்கள் அலைபேசியின் செய்தி ‘அப்’களை அடிக்கடி வருடத் தொடங்கின. இதயத் துடிப்பு எகிறியது. நித்திரை தொலைந்தது. ஒருநாள் நண்பகலில் தனிமையில் உட்கார்ந்து, கடந்த நாட்களின் நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தபோது - என் மனம் கேட்டது. ‘ஏன் இந்த பதற்றம்?’ - 93வயது வரை முழுமையாக வாழ்ந்த ஒருவர், உடல்நலம் குன்றுவது தவறா? என்று ஆராயத் தொடங்கியது. தெளிவு வந்தது. இணையத்தள பரபரப்புச் செய்திகளுக்கு விடை கொடுத்து விட்டேன். அந்தரம் ஒன்றுமில்லை. ஆறுதலாகச் செய்தித் தாள்களை வாசிக்கலாம் என்று முடிவு எடுத்தேன். அதனைத் தொடர்ந்து பதற்றம் குறைந்து, இதயத்துடிப்பு சீராகி, அமைதியான ஆழ்ந்த நித்திரை வந்தது. அடுத்த ஓரிரு நாளில் கலைஞரும் மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.


சமூக ஊடகத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டும், இயங்கிக் கொண்டும் வாழ்ந்து கொண்டும் இருப்பவர்களுக்கு கிட்டும் பேரின்பத்தைதான் தற்போது *FOMO- FEAR OF MISSING OUT* என்று சிறப்பு நாமகரணம் சூட்டி இணைய செயற்பாட்டாளர்கள் அன்போடு அழைக்கின்றார்கள். தமிழில், ‘எதையாவது தவறவிட்டு விடுவோமோ?’ என்னும் பெரும் பதற்ற மனநிலையே இதன் அர்த்தம்.

*Face Book, Tweeter Whatsapp,* போன்ற இணைய ஊடகங்களில் உச்சரிக்கப்படும் *LIKES, TRENDING, VIRAL, NEAMS* போன்ற அட்சரங்கள் - இளைஞர்கள் மட்டுமின்றி எல்லா வயதினரையும், ஆண் - பெண் பேதமின்றி ஆரத்தழுவிக் கொண்டுள்ளது. அதன் அகோரப்பிடியில் சிக்கி பெரும்பாலோர் எல்லா நேரமும் ஒருவித பதற்றத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பதற்றத்தின் விளைவாக நித்திரையின்மை, மனச்சோர்வு, பசியின்மை போன்ற தொடர் மன, உடல் உபாதைகளும் அழுத்திக் கொண்டே வருகின்றன.

அலைபேசியில் செய்தி வந்து விழும், மணி ஓசை கேட்டதுமே மனம் பதறத் தொடங்கி விடுகிறது. செய்தி மணி ஓசையும், மனப் பதற்றமும் முடிவில்லாத தொடர்கதையாகி விட்டது. இதுதான் *FOMO*வின் அடையாளம். *FOMO* குறித்த ஏராளமான காணொளிகள் *You-Tube*இல் பார்த்துத் தெளியலாம். *FOMO*வின் நீட்சியே, உயர் இரத்த அழுத்தம், நித்திரை குறைபாடு (*SLEEP APNOEA*), டயபட்டிக்ஸ் போன்ற சிறப்புப் பரிசுகளாகும்.

நமது உடல், மன ஆரோக்கியத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கிய காரணியாக கட்டுப்பாடற்ற சமூக ஊடக ஈடுபாடு (*Social Meadia Adiction*), நவீன உலகத்தின் பேரவலமாக (*Disaster of the Modern World*) கணிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து பிரித்தானியாவின் *Royal Public Health Society, ‘Scroll Free September-2018’* என்ற சிறப்பு அழைப்பு ஹைகூவல் ஒன்றை மக்களுக்கு விடுத்துள்ளது.



மேற்குறிப்பிட்ட தீவிர நிலையிலிருந்து மீண்டும் சமூக ஊடக செயல்பாட்டை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கொண்டு வர, செப்ரெம்பர் மாதம் முழுவதும் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து தொலைபேசி, அலைபேசி, தொலைக்காட்சி, கணினி போன்றவற்றின் உபயோகங்களை மாலையில் குறைத்து, இரவில் கைவிட்டு, அமைதி வழிக்குத் திரும்புவது அவசியம்.

நவீன சமுதாயத்தில் நோய்கள் உருவாக இணைய தொழில்நுட்பமே பிரதான காரணமாக உள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பமே வியாதியிலிருந்து சுகம் பெறவும் பெரும் தடையாக உள்ளது. தனக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து இணையத்தில் அலசி ஆராய்ந்து அது குறித்த, அவசியமற்ற, அளவு கடந்த தகவல்களைத் திரட்டிக்கொண்டு மருத்துவர்களை நாடும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதும், சுகம் பெற வைப்பதும் பெரும் சவாலாக உள்ளது. எண்ணற்ற வீண் தகவல்களுடன் சிகிச்சை பெற வரும் நோயாளி அனுபவமிக்க மருத்துவரின் சரியான ஆலோசனைக்கும், சிகிச்சைகளுக்கும் உரிய மதிப்பு அளிக்காமல் உதாசீனப்படுத்தி, மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் மாற்றி மாற்றி அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். தேவையற்ற தகவல்களைத் தவிர்ப்பதும், சிகிச்சையில் நம்பிக்கை வைப்பதும் நோயிலிருந்து விடுபட மிகமிக அவசியம். இதுவே ஆரோக்கிய வாழ்விற்கான முதல் அடியுமாகும்.

மனம் சார்ந்தே, உடல் இயங்குகிறது. உடலின் இயக்கங்கள் அனைத்தும் மனதின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மனதைப் பாதிக்கும் எல்லாமே, உடலையும் கெடுக்கும். இதன் அடிப்படையிலேயே ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை முறை கட்டமைக்கப்பட்டுள்ளது. மனதால் வாழும் மனிதனின், உடலிலும் மனதிலும் உண்டாகும் நோய்களுக்கு பக்க விளைவுகளற்ற ஹோமியோபதி மருத்துவம், ஆரோக்கிய வாழ்வையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**


டயபட்டிஸ் சலஞ்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுபடுத்தலாம்
சிறப்பு சிகிச்சைகள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Infertility)
டயபட்டிஸ் (Diabetes)
டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.
சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.
எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்
உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"

SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST


Founded on 10.08.1991 Charity No. 1014409

5 Chapel Road London W13 9AE,

Tel: 020 8810 0835/ 020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர்!

**6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.**

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

**Please Extend your support to build our Meditation Hall your Magnanimity will enable us to build the Three Story 6000 Squate Feet Meditation Hall. Sponsorship of £180 for a Square feet.**

**Bank Details: SKTA Temple Trust**
**LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*


லண்டனில் தமிழர் வீடுகளில் அதிகரித்துவரும்
திருட்டுக்களைத் தடுக்க பெரிதும் உதவுகிறது.
geniecloud
Research shows that the Tamil community is being targeted.
We can help protect your home, office and business
Alarm systems
From £699
No monthly fees
Installation included.
Contact
020 7871 2799 - Option 4
07828 292 966
sales@geniecloud.co.uk
www.geniecloud.co.uk


geniecloud
உங்கள் வீட்டில் நடப்பதை
நீங்கள் உலகில் எங்கிருந்தாலும்
போனில் பாக்கலாம்.
HIKVISION
First Choice for Security Professionals
2 HD Camera
from £499
4 HD Camera
from £849
Installation included. Watch your property through your phone anywhere in the world.
Contact
020 7871 2799 - Option 4
07828 292 966
sales@geniecloud.co.uk
www.geniecloud.co.uk



# ஈழத்து இசைக்கலைஞர் யாழ்.ரமணன் மறைவு

ஈழத்து இசைக் கலைக்குப் பெருமை சேர்த்த யாழ்.ரமணன் மறைவு அழவைத்துவிட்டது. அவரது இசைப் பயணத்தில் ஆரம்ப காலத்திலிருந்து 1984வரை பயணித்த ஒருவன் என்பதால், அந்த கால இவர் நினைவுகள் நெஞ்சோடு வாழ்கின்றன.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் ரசேந்திரம் தம்பதியின் மகன். இயற்பெயர் ராஜேஸ்வரன். யாழ்.டொன் பொஸ்கோவிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் படித்தார். சங்கீதம் கற்றுத் தேர்ந்த தாயாரிடம் சங்கீதம் கற்றார். 1972 இசைவாணர் கண்ணனிடம் கிற்றார் வாத்திய இசையைக் கற்றார். கண்ணன் கோஷ்டி, கலாலய குழு ஆகியவற்றில் கிற்றார் வாசித்தார். அதைத்தொடர்ந்து 1975இல் பொறியியலாளர் குணசேகரன் இயக்கிய சுண்டிக்குழி ராஜன்ஸ் இசை குழுவில் சேர்ந்தார். பின்னர் பாடகர் கே.எஸ்.பாலச்சந்திரன் இக்குழுவை 1984வரை இயக்கினார். அக்காலகட்டத்தில் குழுவில் அங்கம் வகித்த இசைக் கலைஞர்கள் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். யாழ்.ரமணனின் கிற்றார் வாத்தியம் தனித்துவமாகத் திகழ்ந்தது.

சட்டப்படிப்புக்காக கொழும்பு சென்றார். ரூபவாஹினி புகழ் அப்சரஸ் இசைக்குழுவில் கிற்றார் இசைக்கலைஞராக விளங்கினார். உலகத்தமிழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீட்டின் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சியிலும் பங்கு கொண்டார். யாழ்.ரமணன் என்ற பெயரை ஹமீட் சூட்டி மகிழ்ந்தார். அதுவே இசைவானில் நிலைத்தது. சட்டத்தரணியான அவர் இசையோடும் இரண்டறக் கலந்து இயங்கினார். கே.எஸ்.பாலச்சந்திரன் மற்றும் பல கலைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறிய பின்னரும், ராஜன்ஸ் இசைக்குழுவை தொடர்ந்து அவர் மறைவு வரை வெற்றிகரமாக இயக்கினார். விடுதலை உணர்வுள்ள பாடல்களுக்கு இசை அமைத்து புகழ் பெற்றார். பாடகர்கள், இசைக் கலைஞர்கள் உருவாக உதவினார்.

தேசியத்தலைவரிடமிருந்தும் பெரும் பாராட்டுதலைப் பெற்றார். இவர் விடுதலைப்புலிகள், மெல்லிசைப் பாடல்கள் என 800க்கும் அதிகமான பாடல்களுக்கு இசை வழங்கியும் இசையமைத்துமுள்ளார். அதில் 'ஓ மரணித்த வீரனே', 'மாவீரர் புகழ் பாடுவோம்', 'மாவீரர் யாரோ என்றால்', 'பூத்தகொடி பூக்களின்றி தவிக்கின்றது', அத்துடன் 'பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது' என்ற பிஞ்சுமனம் திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள் மிகப்பிரபலம் வாய்ந்தவை அத்துடன் திரையிசைப்பாடல்களும். இத்தனை பெருமைக்கும் புகழுக்கும் சொந்தக்காரரான யாழ்.ரமணனை இயற்கை விட்டு வைக்கவில்லை. வயிற்றில் ஏற்பட்ட உபாதை காரணமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டு, சிகிச்சை பலனளிக்காமல் 09.08.2018இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். ஈழத்தமிழ் இசை உலகு ஒரு பெரும் இசைமேதையை இழந்து விட்டது. ஈழத்து இசை உலகம் இருக்கும்வரை யாழ்.ரமணனின் புகழும் வாழ்ந்து கொண்டுதானிருக்கும்.

*–எம்.குருநாதன்.*

# தமிழக ஆதீனங்களின் அன்பை நிறைவாக பெற்ற சிவதம்பு



தமிழையும், சைவத்தையும் நேசிக்கிற அனைவரது அன்பையும் பெற்ற 'தம்பு' என்று அன்பாக அழைக்கப்படும் திருஞானசுந்தரம் தம்பு, லண்டன் சைவ, தமிழ் உலகில் சேவையாளராக மதிக்கப்படுவர். சமூக சீலர் சிவதம்புவுக்கு இம்மாதம் 30ம் திகதி லண்டனில் மணி விழா கொண்டாடி போற்றப்படவுள்ளார். தாயகத்தில் சுன்னாகத்தில் பிறந்து, கண்டியில் வளர்ந்தவர் தம்பு.

சிவனருளால் இவருக்குக் கிட்டிய மனைவி முத்துராணி. தர்சனா, ஐஸ்வினி இரு பெண். குழந்தைகள்-கலையுடனும், தமிழுடனும் லண்டனில் வளர்ந்து வருகின்றனர்.

தாயகத்தில் புலமைப் பரிசில் பெற்று, லிபியா, சவூதி போன்ற நாடுகளில் பணியாற்றி, 1991இல் லண்டன் வந்தார். இங்கு பிரபல வர்த்தகர்களுடன் ஒருவராகத் திகழ்கிறார்.

1992 முதல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் சிவப்பணியில் இணைந்து கொண்டார். 2002 முதல் இலண்டன் சைவமுன்னேற்ற சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றத் தொடங்கிய திரு.சிவஞானசுந்தரம் தம்பு, இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளராகி (Publication Secretary), தொடர்ந்து 2010ல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் உபதலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். தற்பொழுது துணைப் பொருளாளராகத் தொடர்ந்து பணி செய்து வருகின்றார். இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் கலசம் சஞ்சிகை சிறப்பாகத் தொடர்ந்து வெளிவருவதற்கு பல வழிகளில் இவர் அரும்பணியாற்றி வருகின்றார்.

இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தொடங்கிய காலம் முதல் அதன் வளர்ச்சியில் பங்கேற்றார். சிவப்பணிகளாலும் தமிழ்ப்பணிகளாலும் இக்காலகட்டத்தில் இலண்டன் தமிழ்ச்சமுதாயத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்றார். தமிழகத்தின் குன்றக்குடி ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், கௌமார மடம் உட்பட பல தமிழக ஆதீனங்களாலும் சைவநிறுவனங்கள் சைவப்பெரியார்களாலும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியாலும் போற்றி மதிப்பளிக்கப்பட்ட பெருமைக்குரியவர்.

இவர் தாயகத்தில் நல்லை ஆதீனம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், சுன்னாகம் மயிலணி சிவன் கோயில், சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் கோயில், சுன்னாகம் சிவபூதராயர் கோயில் என்பவற்றுடன் பலவழிகளில் நெருங்கிப் பணியாற்றிச் சிவப்பணி செய்து வருகின்றார். நகுலேஸ்வரம் திருப்பணிக்காக இலண்டனில் தொடங்கப்பெற்ற கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளையின் இணைப்பாளராக இயங்கி, நகுலேஸ்வரம் தலைமைக் குருக்களுடன் மிகநெருக்கமாக இணைந்து பணியாற்றி, கோயில் புனருத்தானத் திருப்பணிகள் முடிவுற்றுக் குடமுழுக்குவிழா சிறப்பாக இடம்பெறப் பல உதவிகளைச் செய்தார். குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பலம் அடிகளாரின் வேண்டுகோளை ஏற்று, குன்றக்குடி ஆதீனத்தின் உலகத் திருக்குறள் பேரவையினை 2013ல் இலண்டனில் முதன் முதல் நிறுவி அதன் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்.

இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தனது 16வது இலண்டன் சைவமாநாட்டில் இவருக்குச் "சமூகசீலர்" என்னும் விருதுப்பட்டத்தினை வழங்கியது.

*- தமிழன்.*

# லண்டனில் நடந்த கரவை தயாளனின் இரு நூல்கள் வெளியீட்டு விழா

"உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 'இடி முழக்கம்' என்ற மாணவர் சஞ்சிகையில் சாதிப் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையின் மூலம் எழுத்துத்துறையில் பிரவேசித்த கரவை மு.தயாளனின் 40 ஆண்டுகால எழுத்து முயற்சியின் சிறந்த வெளியீடாக 'புளிய மரம்' என்ற சிறுகதைத் தொகுப்பு மலர்ந்திருக்கிறது. தமிழில் முதல் சிறுகதை எனப்படும் முதுபெரும் எழுத்தாளர் வா.வே.சு.ஐயரின் 'குளத்தங்கரை அரச மரம்' என்ற தலைப்பைத் தாங்கியுள்ளது. மரங்கள் எமது தமிழர் வாழ்வின் முக்கிய அடையாளம். எமது சைவ ஆலயங்கள் தல விருட்சத்தையே மையமாகக் கொண்டு எழுந்திருக்கிறது" என்று பிரபல ஆய்வாளரும், முன்னாள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமான மு.நித்தியானந்தன் கரவை மு.தயாளனின் நூல்கள் வெளியீட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் ஆனந்த தியாகர் தலைமையில் சமீபத்தில் லண்டன் கெய்ஸ் தேவாலய மண்டபத்தில் எழுத்தாளர் கரவை மு.தயாளனின் 'புளிய மரம்', தயாளனின் குறும்பா ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது.

'புளிய மரம்' சிறுகதைத் தொகுப்பு பற்றிய தனது கருத்துக்களை மு.நித்தியானந்தன் முன்வைத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "லண்டனிலிருந்து நீண்ட காலத்தின்பின் கரவெட்டி செல்லும் கதாபாத்திரம் தான் பார்த்து, அனுபவித்து, வளர்ந்த 'புளிய மரம்' எவ்வளவு சரித்திர நிகழ்வுகளைச் சந்தித்திருக்கிறது என்பதை கதாசிரியர் தயாளன் அழகாகச் சித்தரித்திருக்கிறார். சமூக மாற்றங்கள், சாதிப்பிரச்சினைகள், புலம் பெயர் சமூகத்தில் தொடரும் சாதிய ஏற்றத்தாழ்வுகள், புலம் பெயர் நாடுகளில் புதிய தலைமுறைப் பெண்ணின் திருமணச் சிக்கல்கள் போன்ற சமூகப் பிரச்சினைகளை தனது கதைகளின் மையப் பொருளாகத் தெரிவு செய்துள்ளார். எழுபதுகளில் ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர்கள் வரித்துக்கொண்ட சமூகப் பார்வையை தயாளனின் கதைகளில் காணமுடிகிறது."



ஆனந்த தியாகர் தமது தலைமை உரையில், சைவ வழிபாட்டு முறைகளில் அவரது பார்வை வேறுபட்டிருந்தாலும், அவர் பணியைப் பாராட்டினார். லண்டன் முருகன் ஆலய பிரதம குரு கைலை நாகநாத சிவம் பேசுகையில், தயாளன் கருத்துக்களோடு முரண்பட்டாலும், அவரது அனைத்துப் பணிகளையும் மதிப்பதாகக் குறிப்பிட்டார். அரங்கத்தில் தயாளன் தம்பதிக்கு பொன்னாடை அணிவித்து, கௌரவம் வழங்கினார்.

விமர்சகர் மாதவி சிவலீலன் தயாளனின் குறும்பா நூல் பற்றிய அறிமுகத்தைச் செய்தார். குறும்பா வடிவில் சமூகப் பிரச்சினைகளை வடித்துள்ளார் என்றார்.

எழுத்தாளர் நவஜோதி யோகரட்னம் பேசுகையில், பல விஞ்ஞான பாடநூல்களை எழுதிய நல்லாசிரியர் என்றார். ஒளிபரப்பாளரும், எழுத்தாளருமான எம். என்.எம்.அனஸ் பேசுகையில், நம்மிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதாகக் குறைப்பட்டார். நூலாசிரியர் தயாளன் ஏற்புரை நிகழ்த்தினார்.■



டாக்டர் ஸ்ரீதரன்

# அரைகுறைகள்

வெளிநாடுகளில் வாழும் ஆசிய இனத்தவர்களில் மிக அதிகமானோர் அவர்களின் இள வயதிலேயே மாரடைப்பால் இறப்பதற்கு அவர்களின் உணவு வகைகளே காரணம் என படித்தவர்கள் பணிபுரியும் அமெரிக்காவின் மிகப் பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கூறுகிறது. இதை மனதார நம்பும் படித்தவர்கள் பலரில் பொறியியலாளர் பாஸ்கரனும் ஒருவர்.



கடந்த இருபது வருடங்களாக இலண்டனில் வசிக்கும் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்கரனுக்கு மருத்துவ விஞ்ஞானத்தில் அபார நம்பிக்கை. உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக மருத்துவ விஞ்ஞானம் கூறும் சகல விதிமுறைகளையும் தவறாது கடைப்பிடிப்பவர் பாஸ்கரன்.

நோயிலிருந்து தப்புவதற்கா மது அருந்துவதில்லை - இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருப்பதற்காக. மாமிசம் புசிப்பதில்லை - எடையைக் கட்டுப்பாட்டுடன் பாதுகாப்பதற்காக. இனிப்பு பதார்த்தங்களை தொடுவதேயில்லை - நீரிழிவு நோயை விரட்டுவதற்காக. இப்படி எதை எதையோ தியாகம் செய்து தனக்குத் தானே அவர் அன்றாடம் விதித்துக்கொண்ட கட்டுப்பாடுகள் - நெறிமுறைகள் ஏராளம் ஏராளம்!



ஆண்டுதோறும் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைகள் கூட அவரது உடல் நிலை ஆகா - ஒகோ என்று இருப்பதாக ஊர்ஜிதம் செய்தன. ஒரு நாள் - திருமணமாகாத பதினாறு வயதுடைய அவருடைய ஒரே மகள் அருந்ததி ஒரு ஆபிரிக்க இனத்தவனின் பிள்ளையை வயிற்றில் சுமப்பதாக அறிந்த போது மாரடைப்பால் இறந்து போனார் பாஸ்கரன்! இறக்கும் பொழுது பாஸ்கரனுக்கு வயது நாற்பத்தி ஐந்து!.

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற - அவர் மகள் அருந்ததியின் நிலை தெரியாத - பாஸ்கரனின் படித்த நண்பர்களும் உறவினர்களும் இப்பொழுது தங்கள் உணவு விஷயத்தில் முன்னைவிட அதிக உஷாராக இருக்கிறார்கள்! அவர்கள் கொழுப்புச் சத்து பதார்த்தங்களை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்வதில்லை. அன்றாடம் உள்ளெடுக்கும் கலோரிகளை தவறாது கணக்கில் வைத்துக்கொள்கிறார்கள். தங்கள் வயது - உயரம்-எடை- இவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளை அடிக்கடி சோதனை செய்து கொள்கிறார்கள்.

பாஸ்கரன் இறந்த செய்தியை கேள்வியுற்ற - அவர் மகள் அருந்ததியின் நிலை தெரிந்த பாஸ்கரனின் படித்த நண்பர்களும் உறவினர்களும் இப்பொழுது தங்கள் பிள்ளைகளை தாங்களே தினமும் பாடசாலைக்கு காரில் அழைத்துச் செல்கிறார்கள் - அவர்கள் தனியே செல்வதை தடுப்பதற்காக. வெள்ளிக்கிழமைகளில் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள் - பக்தி வளர்வதற்காக. வார விடுமுறையில் திருக்குறள்-பரத நாட்டியம்-கர்நாடக சங்கீதம் போன்றவற்றை கற்க வைத்து அவர்களை மிகுந்த கலாச்சாரத்துடன் வளர்க்கிறார்கள்-கண்ணகியை போல!

எதை எதையோ எதிர்பார்த்து-அன்றாடம் ஏதேதோ செய்து கொண்டிருக்கும் இவர்கள் மட்டுமா இங்கு அரைகுறைகள்?

# வெற்றுக்குடங்கள்

அன்று சனிக்கிழமை. நேரம் இரவு பன்னிரண்டு மணி. மாடியில் அமைந்திருக்கும் தனது படுக்கை அறையில் சுகமாக உறங்கும் சுகந்தனின் தூக்கம் கலைகிறது. அந்தத் தெருவே அதிரும்படி குரைத்த அவனுடைய நாய் திருவள்ளுவரினால். சுகந்தன் ஒரு நித்திரை பிரியன். அதைக் கெடுக்கும் எதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது.

திருவள்ளுவரை அதட்டி மேலே அழைத்து, அது மேலும் குரைக்காதவாறு அதை ஒரு அறையில் பூட்டி விடுகிறான். அதன் பின் நிம்மதியான உறக்கம் சுகந்தனுக்கு.

மறுநாள் காலை மிகப் பெரிய கொட்டாவியுடன் அமர்க்களமாக கண் விழித்த சுகந்தனுக்கு மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்களெல்லாம் இரவு திருட்டுப் போய் விட்டன!

நடந்ததைக் கேட்ட சுகந்தனின் நண்பனுக்கு ஒரே சிரிப்பு. அவன் சுகந்தனுக்கு உரைத்த கீதை இது: உனது நாயின் குரைப்பு ஒரு காரியம். அதன் காரணம் இங்கு நடமாடிய திருடன். காரணம் இன்றி இங்கு ஒரு போதும் காரியம் இல்லை. ஆனால், காரணத்தை அறியாமல்-அறிய முயற்சிக்காமல்-காரியத்தை மட்டும் பார்த்து-அதற்குப் பரிகாரம் தேட முயற்சித்தால்-காரணம் மிக விபரீதமான வேறு பல புதிய காரியங்களை உருவாக்கி விடும்.

சுகந்தனுக்கு இது நன்றாகவே புரிந்தது. ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன. சுகந்தன் இன்று ஒரு ஆங்கில டாக்டரைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருக்கிறான். கடந்த சில தினங்களாக அவனுக்கு ஒரு வகை வயிற்று வலி. எப்போது வரும்-எப்போது போகும் என்று சொல்ல முடியாது. இப்பொழுதெல்லாம் அவனால் நன்றாக உறங்கக் கூட முடிவதில்லை. சுகந்தனின் குறையைக் கேட்ட டாக்டர் கூறினார்:

இன்றிலிருந்து அந்த வயிற்று வலி வரும் போது நான் இப்பொழுது கொடுக்கும் மாத்திரையை அருந்துங்கள். உடனே வலி பறந்து விடும், நிம்மதியாக உறங்கலாம்.

வெளியே வந்து மாத்திரைகளை குப்பைத் தொட்டியில் போட்ட சுகந்தன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்:



குரைத்த நாயை மேலே அழைத்து அதை அறையில் அடைத்த நான் ஒரு குறை குடம். வயிற்று வலிக்கு மாத்திரை தந்து வலியை மட்டும் மறைக்க வைக்கும் இவன் ஒரு வெறும் குடம்.

எத்தனை குறைகுடங்களை பரலோகம் அனுப்பியிருக்கிறார்கள் இந்த வெற்றுக்குடங்கள்!

# கோவணம்

கடந்த பத்து வருடங்களாக இலண்டனில் வசிக்கும் இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்க் கலைகளின் பாதுகாவலர்-தமிழ்க் கலாச்சாரத்தின் தந்தை-உயர்திரு.மகாலிங்கம் அவர்கள்-வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமது கலைகளையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இலண்டன் கலை கோவில் என்னும் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் தலைவராக வேறு இயங்கி வருகிறார். இது விடயமாக அவர் அரசாங்கங்களுடன் பேசுகிறார்-பண உதவி பெறுவதற்காக. அடிக்கடி வெளிநாடுகளுக்கு வேறு செல்கிறார்-கலைஞர்களை சந்திப்பதற்காக. இலண்டனில் வாழும் தமிழ் பெற்றோர்கள் அவரை தமிழ் அன்னை பெற்றெடுத்த தவப் புதல்வனாக மதிக்கிறார்கள். கடந்த பத்து வருடங்களாக கலாச்சாரத் தந்தை இலண்டனில் தலைமை தாங்காத கலை நிகழ்ச்சி கிடையாது-பிரதம விருந்தினராக கலந்து கொள்ளாத கலாச்சார நிகழ்ச்சி கிடையாது.

இன்று கூட அவர் ஒரு புல்லாங்குழல் அரங்கேற்றத்திற்கு தலைமை தாங்குவதற்காக சென்றிருக்கிறார். வீட்டில் யாருமில்லை-அவரது செல்லப் பிராணிகளான காம்போதி என்னும் நாயையும் கல்யாணி என்னும் பூனையையும் தவிர. ஸோபாவில் படுத்திருந்தபடியே கல்யாணி காம்போதியிடம் கேட்டது:

நம் எஜமான் நமக்கு வைத்த பெயர்களே அவர் ஒரு கலை பிரியன் என்பதை உனக்கு எடுத்துக்காட்டவில்லையா?

சுயமாக சிந்திக்கத் தெரிந்த காம்போதிக்கு கோபம் வந்து விட்டது.

அறிவு கெட்டதனமாக பேசாதே. நம் எஜமானுக்கு கலையும் தெரியாது, கலாச்சாரமும் புரியாது. அறுபத்தி ஐந்து வயதில் இலண்டனுக்கு வாழ வந்திருக்கும் இவர்-இலண்டனில் வேறு ஏதும் செய்ய வழி இல்லாததால்-வசதியாக பிழைப்பு நடத்த தானாகவே தேடிக்கொண்ட வழி இது.



பிறந்த நாட்டுப் பழக்க வழக்கங்களை மறக்கவும் முடியாமல்-புகுந்த நாட்டு மரபுகளை ஏற்கவும் முடியாமல்-அதுவுமின்றி இதுவுமின்றி-செல்லும் வழி தெரியாமல் இலண்டனில் அலைந்து கொண்டிருக்கும் புத்திகெட்ட வௌவால் கூட்டத்தை ஏமாற்றுவதற்கு நம் எஜமான் தேர்ந்தெடுத்த இரண்டு வார்த்தைகள் தான் கலையும் கலாச்சாரமும்.

எதை படிக்கிறோம்-எதற்காகப் படிக்கிறோம் என்று தெரியாமல்- ஏதோ ஒன்றை-எதற்காகவோ படிக்க வேண்டும் என்று அலையும் முட்டாள் கூட்டம் இலண்டனில் இருக்கும் வரையில் நம் எஜமான் கலையின் தந்தை தான்! கலாச்சாரத்தின் பாதுகாவலர் தான்!

பசுத்தோல் போர்த்தி விட்டால் புலி பசு ஆகிவிடுவதில்லை என்று ஏட்டில் படித்த கூட்டத்திற்கு சேலை அணிவதால் மட்டும் கலாச்சாரம் வளர்வதில்லை என்று புரியாமல் இருக்கும் வரையில் நம் எஜமான் கலையின் தந்தை தான்! கலாச்சாரத்தின் பாதுகாவலர் தான்!

கோவணம் கட்டாத ஊரில் அரைஞாண் கயிறு விற்பவர்கள் மட்டுமா முட்டாள்கள்!



ஏ.ஜே.ஞானேந்திரன்

# 72 மாத சீஸ்பேர்கர் விற்பனைக்கு!



இன்று உலகப் புகழ் பெற்று விட்ட அவசர உணவான சீஸ்பேகரைப் பற்றி உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. அந்த சீஸ்பேகரை கடையில் வாங்கி, சாப்பிடாமல் 6 வருடங்கள் வைத்திருந்த புதுமையான ஆசாமியின் கதைதான் இது!

ஆறு வருடங்கள் ஹம்பேகரையும், அதனுடன் கிடைத்த சிப்ஸையும் பத்திரமாக வைத்திருப்பதே ஒரு தனிக் கதை. இந்தக் கதையையும் மீறி, அதை இணையத் தளத்தில் இவர் விற்க முயற்சித்திருப்பது, மாபெரும் கோமாளித்தனம்! காலங்கடந்த பழைய காலத்துப் பொருட்கள் (முத்திரைகள் போன்றவை) பெரிய விலையில் விற்பனையாவது சகஜந்தான். ஆனால், இந்தக் கனடியரோ உடனே சாப்பிட வேண்டிய ஒன்றை பத்திரமாக 72 மாதங்கள் வைத்திருந்து விட்டு, இப்பொழுது அதையே விற்கும் வியாபாரியாக மாறியிருக்கிறார்.

என்றுமே இதை உபயோகித்ததில்லை. புத்தம் புதியது என்று ஏனைய பொருட்களை விற்பதுபோல, இவரும் “ஒருபோதும் சாப்பிட்டதில்லை. குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்படவும் இல்லை” என்று குறிப்பிட்டுள்ளார். இன்று காலை கடையில் வாங்கியதுபோல் இருக்கின்றன. வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில், இந்த பேர்கர் கொஞ்சம் கறுத்திருக்கின்றது. அவ்வளவுதான்! என்று உற்சாகமாகக் கூறியிருக்கின்றார். தன் மகளைக் கொண்டு 2012 ஜூன் மாதம் 6ந் திகதி இதை வாங்கியதாகவும், மக்கெடானால்ட்ஸ் உணவு கெடாது என்பது வெறும் வதந்திதானா என்பதை அறிய விரும்பியதாகவும் இவர் கூறியிருக்கின்றார்.

தான் வீட்டில் செய்த பேர்கர் 5 வருடங்களுக்கு முன்பு இதற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டதாகவும், அது கெட்டு எறியப்பட்டு விட்டது என்றும் இவர் குறிப்பிட்டிருப்பது, பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. இதை யார் வாங்கப் போகிறார்கள் என்று நீங்கள் எள்ளி நகையாடக் கூடும்.

சற்றுப் பொறுங்கள். 22.91 டொலர் என்ற அடிமட்ட விலையிலிருந்து, 62.65 டொலர் வரை (சுமாராக 16,500 ரூபா) விலை எகிறிக் குதித்திருக்கின்றது. விற்பனைக்கான கடைசி நாளில் இது 20,000 ரூபாவாக மாறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. பைத்தியக்கார உலகம் என்கிறீர்களா? நாம் எல்லோருமே ஒருவகையில் பைத்தியங்கள்தான்!

# குடிகாரக் கடல் பறவைகள்



கல்யாண விருந்துக்கு போய்விட்டுவந்த பறவைகளோ? இங்கிலாந்தின் தென் மேற்குப் பிராந்தியத்திலிருந்து வந்து தரையிறங்கியுள்ள கடற்பறவைகள், அதிகாரிகளை நிலைகுலைய வைத்துள்ளன.

என்னதான் காரணம்? போதையில் பறந்து வந்து தள்ளாட்டத்தோடு குழம்பி நின்ற இந்தப் பறவைகள், அதிகாரிகளையும் குழம்ப வைத்துள்ளன... சில பறவைகள் இறந்துள்ளன. வேறு சில மரணப் படுக்கையில் இருக்கின்றன. இது எப்படிச் சாத்தியமாகும் என்று ஆராய்ந்ததில், எங்கோ ஒரு மதுபான உற்பததியாளர் கழித்த பொருட்களை இந்த அப்பாவிப் பறவைகள் சுவைத்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுக்க ஆரம்பித்துள்ளது. நிற்க முடியாமல் தள்ளாடுகின்றனவாம் சில பறவைகள். மனிதர்களைப் போலவே, போதையில் தள்ளாடும் ஒரு பறவையை வீடியோப் படமெடுத்து வைத்துள்ளோம் என்கிறார் ஒரு அதிகாரி.

மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதில், பல பறவைகளை மரணத்திலிருந்து மீட்டுள்ளார்கள். பின்பு இவை சுயாதீனமாகப் பறக்க விடப்பட்டுள்ளன. டெவன், டோர்செட் போன்ற கடற்கரைகளிலிருந்தே இந்தக் கடற்பறவைகள், சமீப காலங்களில் சிசிச்சை அளிப்பதற்காக, சோமசெட் பிராந்திய மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. நாளை முதல் குடிக்கமாட்டேன்... சத்தியமடி தங்கம் என்று இந்தப் பறவைகள் பாடிச் சென்றிருக்குமோ?



# நகங்களின் வயது 66

இவரது பெயர் சிறீதர் சில்லால். இவருடைய நகங்களுக்கு 66 வயதென்றால் நீங்கள் நம்பத் தயாரா? இந்த மாதத்தின் பெரிய புதினம் இதுதான்! இலண்டன் பஸ்ஸின் நீளத்தை ஒத்த நகங்களை, கடந்த 66 வருடங்களாக பூச்செடி வளர்ப்பது போல் வளர்த்து வந்திருக்கிறார் இந்த அதிசய மனிதர்! எப்படி இந்த நகங்கள் உடையாமல் தூக்கிச் சுமந்தாரோ தெரியவில்லை. படைத்தவனுக்குத்தான் வெளிச்சம்!

தான் 66 வருட காலமாக வளர்த்ததை இப்பொழுது கத்தரித்திருப்பதுதான் புதிய செய்தி! இந்தியாவின் பூனா நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரை, கின்னஸ் சாதனைகளைப் பதியும் நிறுவனம், நியூயோர்க் நகருக்கு அழைத்துள்ளது. இங்கு மிகக் கவனமாக இவர் நகங்கள் கத்தரிக்கப்பட்டுள்ளன.

கின்னஸ் சாதனையாளராகி இருக்கும் இவர், தனது 14வது வயது தொடக்கம் நகம் வளர்க்க ஆரம்பித்திருந்தார். ஒரு தடவை, இவரது ஆசிரியர் மிக அக்கறையோடு வளர்த்த நீண்ட நகம் உடைவதற்கு இவர் காரணமாக இருந்துள்ளார். “நீயாக நகங்களை வளர்த்தாலொழிய, அதன் சிரமம் உனக்கு விளங்காது” என்று மன வேதனையோடு ஆசிரியர் கூறியதைச் சவாலாக எடுத்துக் கொண்டு, நகம் வளர்க்க ஆரம்பித்தவர் இந்த 82 வயது சில்லால். இவர் வளர்த்த 5 விரல் நகங்களின் மொத்த நீளம் 29 அடி 10.1 அங்குலம். பெருவிரல் நகந்தான் அதிநீளமானதாம்!

இங்குள்ள ரைம்ஸ் சதுக்க அருங்காட்சியகத்தில் கத்தரிக்கப்பட்ட நகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என்பது கொசுறுச் செய்தி! ஆத்தா கோழி வளர்த்தா ஆடு வளர்த்தா என்று கமல் ஒரு படத்தில் சொல்கிறார். இவர் நான் நகம் வளர்த்தேன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

# பூச்சாடிகளாகிய மார்பகங்கள்..



இங்கு எதாவது மந்திரவித்தை நடக்கின்றதோ என்று குழம்ப வேண்டாம். மனித உறுப்புகள் எப்படி ஒரு ஜடப்பொருளாக மாறுகிறது என்று நீங்கள் திகைப்பது நியாயந்தான்.

சரி கதைக்கு வருவோம். குழப்பம் ஒருவேளை தீரலாம்.

எம்மா லோ என்ற ஆங்கிலேயப் பெண்மணி தொழிலால் ஒரு குயவர்! அதாவது மட்பாண்டங்களைச் செய்பவர். பல பல வடிவங்களில் பூச்சட்டிகளைச் செய்கிறோமே. இவற்றைப் பெண்களின் மார்பக வடிவில் செய்தால் என்ன என்ற எண்ணத்தில் பிறந்ததுதான் இந்த மார்பகப் பூச்சட்டிகள்!

தன் சினேகிதனுக்கு மார்பக வடிவிலான ஒரு



பூச்சாடியை நத்தார் பொருளாகப் பரிசளித்த பின்பு, இது பலர் பேசும் பொருளாகி விட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால், பெண்கள் எவராவது இந்தப் பூச்சட்டிகளை வாங்க விரும்பினால் தங்கள் மார்பகங்களின் அளவுகளை இவரிடம் கொடுத்து, அதே அளவில் பூச்சாடிகளைச் செய்து பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு சம்பந்தப்பட்ட பெண்கள் வயது வந்தவர்களாக இருக்க வேண்டும். மார்பகங்களின் போட்டோவையும் கொடுக்க வேண்டும்.

ஒரு பெண்ணால் இன்னொரு பெண்ணுக்குச் செய்யப்பட்டவை என்ற அடிப்படையில், இவரது பூச்சாடிகள் பெண்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

வெள்ளம் போல, கொள்வனவுக் கட்டளைகள் வந்து குவிய திணறி நிற்கிறாராம் எம்மா.

குழப்பம் தீர்ந்ததா? எதையும் செய்யலாம் எப்படியும் செய்யலாம் என்ற அளவுக்கு இப்பொழுது பெண்கள் சுதந்திரத்தை மேலைநாடுகளில் அனுபவிக்கிறார்கள் என்பதை உங்களால் அறிய முடிகிறதா?

# சர்வதேச தர ஆயுர்வேத அனுமதி பெற்ற தாய் மண்ணின் உற்பத்திகள்

LOTUS TODAY

வழங்கும்

## தினமும் சுகம் தரும் சூடான தேநீர்

### சர்க்கரை தொல்லையில் இருந்து விடுதலை

சிறு குறிஞ்சா
(Gymnema Sylvestra)



நாவல்
(Jamun Coffee)



பாகற்காய்
(Bitter Gaurd)



மாவிலை கொழுந்து
(Mango Leaf)



### அழுத்தம் சமநிலை பெற

செவ்வரத்தம் பூ
(Hibiscus)



### நல்ல நித்திரை மனம் உடல் அமைதி

துளசி
(Tulsi/Holy Basil)



### உடல் மெலிவதற்கு

கொரக்கா புளி / குடம் புளி
(Garcinia Cambogia)



### கொழுப்பு கரைய

ஆவாரம்பூ
(Cassia Senna Leaf)



கொய்யா கொழுந்து
(Guava Leaf)



### சக்தி வீரியம்

முருங்கை (Moringa)



நாவல் (Jamun Coffee)



**இயற்கை எமது நண்பன் - முன்னோர் நமது வழிகாட்டிகள்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
உங்கள் வீடுகளுக்கான டெலிவரியும் செய்து தரப்படும்

lotustoday.com, lotustoday.co.uk
hello@lotustoday.com
+442081337020, +447889665195

AYURVEDA CERTIFIED

**Traditional Saiva Hindu Temple Sculptor**



REFERENCE CODE: SGT_0006

HOURS OF WORK: Full time
CONTRACT: Fixed term to complete remaining structural work at the temple as indicated below

- To construct Gopuram tower structure (external construction / exact replica of internal structure) using traditional methods and materials (cement, brick, sand and stone)
- Small deity sculptings for Gopuram structure
- Minor repair works to internal shrines
- (Small other external embellishments

Must have strong communication skills and min 5+ years experience of constructing traditional Hindu Temples.

**Please contact the Temple on 0208 542 7482 / 0208 5424141 or email enquiries@ghanapathy.com for further information.**

**Supporting documents will be required and interview process required if shortlisted.**



**அழைப்பு**

வருகின்ற செப்டம்பரில் 75வது அகவையைப் பூர்த்தியாக்கும்
அன்பர் நடராசா சச்சிதானந்தன் அவர்களிற்கு
சேவை நலம் பாராட்டு விழா



**"சச்சி 75"**

ஞாயிறு 16.09.2018ம் திகதி
சிவன் நிலையத்தில்
12A, Lee High Road, Lewisham, SE13 5LQ

**பி.ப. 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.**
**பி.ப. 4.30 மணிக்கு மண்டபம் திறந்திருக்கும்.**

நிகழ்வு உரிய நேரத்திற்கு ஆரம்பமாக இருப்பதால் தங்களைக் காலம் தாழ்த்தாமல் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சியின் இறுதியில் நடைபெற இருக்கும் இரவு விருந்திலும் தாங்கள் எல்லோரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்

குறிப்பு :
நிகழ்விற்கு வருகை தருபவர்களும், வருகை தரமுடியாவதர்களும் 09.09.18ம் திகதிக்கு முன்பாக எம்மைத் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.
நன்றி

**satchi75@hotmail.com**

ஏற்பாட்டாளர்கள்
ப. நவேந்திரன் – 07916 134 976
நா. சிறீகெங்காதரன் – 07932 635 395
க. விவேகானந்தன் – 07956 106 463
வ.இ. இராமநாதன் – 07956 369 557
மு.து. செல்வராசா – 07393 203 387
தி. அருள்தாஸ் – 07830 298 891



**பெண் உதவியாளர் தேவை**



வயதான தாயாரை
காலை முதல் மாலை வரை
கவனிப்பதற்கு பெண்
உதவியாளர் ஒருவர் தேவை.

பாசமுள்ளவராகவும், அன்பாகப் பழகக் கூடியவராகவும் இருக்க வேண்டும். West Croydon பகுதியிலிருந்து 5 மைல் சுற்றளவுக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 07735346890**



**பருத்தித்துறையில் 4 அறை வீடு விற்பனைக்கு**




பருத்தித்துறை நகர எல்லைக்குள், மாபிள் பதித்த நான்கு அறைகள் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. பஸ், நிலையம், ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ் மகளிர் கல்லூரிகளுக்கு அண்மித்த பூதராயர் கோயில் ஒழுங்கையில் அமைந்துள்ளது. நவீன வசதிகளுடன் குளியலறை, ரொயிலட், எந்த நேரமும் நல்ல தண்ணீர் – சுற்றுமதில் உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு:
**அருள்வேல் 07877915924**


# வேலணையூர் பொன்னண்ணா

பழம் பெரும் எழுத்தாளர் வேலணையூர் பொன்னண்ணா என்ற பொன்னையா தியாகராசா டென்மார்க்கில் 26.7.2018 அன்று தனது 79வது வயதில் அமரரானார்.

புலம்பெயர் தேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, வேலணையூரின் பெருமையையும், தன் தாய் நாட்டின் பெருமையையும் நிலைநாட்டி வந்த ஓர் பாசமிக்க, நேசமிக்க தமிழ் உணர்வாளரை, சைவசமய அபிமானியை நாம் இழந்து விட்டோம்.



புலம்பெயர் தேசத்திற்கு தன் நடுத்தர வயதில் குடிபெயர்ந்து, தன் ஊரின் பெயரைக்கொண்டே தன்னை அழைத்து, தன் ஊரிற்குப் பெருமை சேர்த்த வேலணையூர் பொன்னண்ணாவின் மறைவு வேலணை மக்களுக்கோர் பேரிழப்பாகும். புலம்பெயர் நாட்டில் பத்து நூல்களை வெளியிட்டு, தான் பிறந்த வேலணை ஊருக்கும், தாய் மண்ணிற்கும் பெரும் பெருமை சேர்த்தவர் இந்தப்பெருந்தகை. இவர் 2005ம் ஆண்டில் வேலணையூரின் சிறப்பையும், அச்சிறப்பிற்கு வித்திட்ட நம் முன்னோர்களையும் அறிமுகப்படுத்தி – தொகுத்து வெளியிட்ட "அருளமுதம்" என்ற நூல் பலரின் பாராட்டையும், அங்கீகாரத்தையும் பெற்றது.

தனது முதல் நூலான 'நிலமாகி' என்ற நூலை 1993இல் வெளியிட்டிருந்த இத்தமிழறிஞர், தொடர்ந்து வெந்தவனம், அபிராமி அம்மன் பஜனைப்பாடல், பிள்ளையார் பக்தி பஜனைப் பாமாலை, பச்சை இறகு, உளிகள், அருளமுதம், நெஞ்சத்து நெருப்பு, என எட்டு நூல்களை வெளியிட்டு தமிழன்னைக்கும், தமிழிற்கும், தான் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்தவர். தனது நீண்ட வாழ்வை – அதில் எதிர்நோக்கிய சவால்களை எல்லாம் தன் சந்ததியினருக்கும், வருங்கால தமிழ் சமுதாயத்திற்கும் தெரிவித்திட வேண்டி, இவர் தனது 75வது வயதில் நிறைவாக வெளியிட்ட 'பனிமலை தாண்டிய பாதச்சுவடு' என்ற நூலின் மூலம் இவரது பெருமை காலம் கடந்தும் எம்மவர் மத்தியில் நிலைத்து நிற்கும். இப்பேர்ப்பட்ட தமிழறிஞர் வேலணை ஊரைச் சேர்ந்தவர் என்பதில் வேலணை ஒன்றியம் பிரித்தானியம் பெருமை அடைகின்றது.

காதற்கணவனை இழந்து தவிக்கும் பொன்மணி அம்மையாருக்கும், பெறற்கரிய தந்தையை இழந்து துயருற்றிருக்கும் பிள்ளைகளுக்கும், அன்பு மாமனாரை இழந்து துயருறும் மருமகன்மார் – மருமகள்மாருக்கும், பாசமிக்க பாட்டனை இழந்து பரிதவிக்கும் பற்றுமிக்க பேரப்பிள்ளைகளுக்கும், புலம் பெயர் தேசத்தில் தமிழையும் சைவத்தையும் வளர்த்த ஓர் நல்லவரை – வல்லவரை இழந்து வாட்டத்திலிருக்கும் வேலணையூர் உறவினர்கள், நண்பர்கள் – தமிழ் இலக்கிய அன்பர்கள் அனைவர்க்கும் வேலணை ஒன்றியம் பிரித்தானியா சார்பாக எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வேந்தனார் இளஞ்சேய்,*
*(செயலாளர், வேலணை ஒன்றியம் - பிரித்தானியா)*



ப.வை. ஜெயபாலன்




# வடக்கின் வளத்துக்கு ஒரு முத்தாரம் கிளிநொச்சி

இலங்கை வரைபடத்தில் தலையான யாழ்ப்பாணத்தின் தொண்டையை அண்டிய நிலம் 634 சதுரமைல் பிரதேசம். பளை, கரைச்சி, பூநகரி, கண்டாவளை என நான்கு பிரதேச சபைகளின் இணைப்பு. முள்ளிப்பற்று, முகமாலை, புலோற்பளை, கரைச்சி, கிளிநொச்சிப் பட்டினம், பூநகரி, பல்லவராயன்கட்டு, இரணைதீவு என ஏழு கிராம சபைகளும் ஒரு பட்டினசபையும் இதன் முன்னைய கூறுகள். எழுதுமட்டுவான் தொடக்கம் முறுகண்டி அண்மியதாக இதன் நீட்சி. முல்லை தீவு வீதி புன்னை நீராவி முதலாக பூநகரி முழங்காவில் வரையாக இதன் அகலம். நெல் வயல்களும், தோட்ட நிலங்களும், இதன் இயற்கை வளம். இவற்றுக்கு நீர்ப்பாசன வசதியை தர நீரைத் தேக்கும் குளங்களாக ஒன்பது, இன் நிலத்தில் உள் அடங்கும்.

இரணைமடு குளம், அக்கராயன் குளம், யூனியன் குளம், கரி காகலை நாகபடுவான் குளம், முறிப்பு குளம், வன்னேரிக்குளம், கல்மடு குளம், பல்லவராயன் குளம், அம்பாள் குளம் என்பன. நுளம்பு, பாம்பு, கொடுக்கன் முதலான விஷயந்துகளின் உறைவிடமாக சில வயல் நிலங்களின் வளத்தையும் தேக்கி நின்ற நிலம். நீர்ப்பாசன திட்டங்கள் குளங்கள் மூலமாக வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலேயே ஆரம்பமானது.

கட்சன் என்ற பொறியியலாளர் இரணைமடுக் குளத்தின் நீர்ப்படிவு அமைப்பில் முக்கிய பங்காளர். அவர் நினைவாக இன்னும் ஹட்சன் வீதி வட்டக்கச்சியில் பெயர்தாங்கி நிற்கிறது. இரணைமடுக்குளம் 44,000 ஏக்கர் வரை நீர்ப்பாசன விஸ்தீரணத்தை உள்அடக்கிய பெரும் குளம். 1944ம் ஆண்டு வட்டக்கச்சி குடியேற்ற திட்டத்துடன் கிளிநொச்சியின் மிடுக்கு ஆரம்பம் கண்டது.



ஏற்கனவே பூநகரி, கரைச்சி பழையகமம் என இருந்த நிலங்களை நிலையாக்கி கொண்டு வாழ்ந்தவர்கள் சிலர். ஆரம்ப தேர்தலில் கிளிநொச்சி, கரைச்சி மொத்த வாக்காளர் தொகை 148. குடிசன செறிவு குடியேற்றத்திட்டங்களுடனேயே வியாபகம் கண்டது. ஏற்கனவே மணலும் மண் நிலமுமாக இருந்த பளைப்பகுதி தென்னை வளத்தால் குடிசன பரவலை கொண்டிருந்தது. இரணைமடு குளத்தின் கீழான வட்டக்கச்சி, உருத்திரபுரம், முரசு மோட்டை, இராமநாதபுரம், அக்கராயன் என்ற குடியேற்றத்திட்டங்கள் வளம் தேடும் வசதிகளை வழங்கி நிலையாக கிளிநொச்சியில் வாழும் யாழ்ப்பாணத்தவர்களால் நிரம்பியது முதலாக எட்டாம் வாய்க்கால் வரையாக உறுதிக்காணிகளும் நெல் உற்பத்தி அதிகரிப்பால் பெறுமதியானது. மலையக தமிழ் தொழிலாளர்களை வயல்களில் குடியிருத்தி நெற்செய்கையை வளப்படுத்த அந்த வண்டல் மண்ணின் அதிஉச்ச நெல் விளைச்சல் வழிகோலியது. அரச உத்தியோகஸ்தர்களான நடுத்தர மக்களுக்கு வழங்கப்பட்ட 10 ஏக்கர் திட்டமும் புளியம் பொக்கணை முதலான பகுதிகளின் காடுகள் களனியாக காரணமாயின.



1965 முதலாக பசுமைப் புரட்சியில் அக்கறை காட்டிய டட்லி, சிறிமாவோ அரசுகள் படித்த வாலிபர் திட்டங்களை அமைத்தன. விஸ்வமடு, திருவையாறு என மிளகாய் செய்கையில் உச்ச விளைச்சலையும் இறக்குமதி தடை காரணமான விலை ஏற்றத்தால் இலட்சாதிபதிகளான இளைஞர்கள் பல நூற்றுக்கணக்கானவர்களையும் இந்தத் திட்டங்கள் அறுவடை செய்தன. விஸ்வமடுக்குளம், கனகாம்பிகைக்குளம் என்பன செப்பனிடப்பட்டு சிறப்பான நீர்ப்பாசன வளங்களை நெறிப்படுத்தின.

1958 இன் இனக்கலவரம் தென்பகுதி மக்களை விரட்ட அவர்களின் புகலிடமாக கிளிநொச்சி ஆனது. குறிப்பாக வடக்கின் முதல் தோன்றிய அகதிகள் குடியேற்ற திட்டமாக 1958இல் தர்மபுரம் அமைந்தது. 1977 இனக்கலவரம் கிளிநொச்சியில் ஜெயபுரம், வன்னயபுரம் என புதிய பெரும் அகதி குடியேற்ற திட்டங்களும் கண்டி வீதி 55ம் கட்டை முதல் முறிகண்டி வரை இரு பக்கமும் பல சிறிய குடியேற்றங்களை கொண்ட கிராமங்களும் உருவாக சந்தர்ப்பம் வகுத்தது. ஆனந்தபுரம், மலையாளபுரம், அளபதிபுரம், ஆரோக்கியபுரம் என்ற குடியேற்ற கிராமங்கள் கிளிநொச்சி பஸ் டிப்போ சந்தியில் இருந்து அக்கராயன் வீதி வரை அணிவகுக்கலாயின. கனகபுரம், அம்பாள் குளம் என்பன இவற்றின் உதயத்தால் செறிவையும் வளர்வையும் கண்டன. இந்த குடியேற்றங்கள் ஜெயபுரம் வரையாக 1983 இனக்கலவில் அகதிகளை கொண்டதாக அமைந்தன.

1984ம்ஆண்டு கிளிநொச்சி தனி மாவட்டமானது. கல்வியில் மிகமிக பின்தங்கி இருந்த கிளிநொச்சி கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகளும் பல்கலைக்கழகம் காண இந்த தனி மாவட்டம் பின்தங்கிய பிரிவு என்ற பரிவோடு வழிசமைத்தது. கிளிநொச்சி நகரை ஆரம்பத்தில் மெருகுபடுத்திய பிளாக்கர் பொன்னம்பலம் என்ற கரைச்சி கிராமசபை தலைவர் மக்களின் மறக்க முடியாத மதிப்பை பெற்றவர். தனிமாவட்ட சாதனைக்கு காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி அவர்களும், கிளிநொச்சி மாதாவின் வளத்தை வளர்த்த முன்னணியாளர் என்பதும் வரலாற்று பதிவு.



கிளிநொச்சி தொகுதி 1960ம் ஆண்டு தேர்தல் வரை சாவகச்சேரி தொகுதியின் ஒரு பிரிவாக விளங்கியது. தனித் தொகுதியாகி வளர்ச்சி கண்ட கிளிநொச்சி அதிஉச்ச வளர்ச்சியைக் காண ஆயுதப் போராட்டமும் வழிவகுத்தது. அதுவரை தினமும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து போய்க்கொண்டிருந்த அரச உத்தியோகஸ்தர்களும் ஆசிரியர்களும் ஆனையிறவு சோதனை கெடுபிடி, புகையிரத சேவை நிறுத்தம் என்பவற்றால் கிளிநொச்சியில் தங்கி இருந்து சேவையாற்ற வேண்டியதாயிற்று. தவிர இந்திய இராணுவ கால யாழ்க்குடா இடம் பெயர்வு கிளிநொச்சியை வந்து அடைந்தது. கிளிநொச்சி சனசெறிவு அதிகரித்தது.




இடம் பெயர்வு, புலம் பெயர்வு என்பன கிளிநொச்சியின் சனத்தொகையை மீண்டும் வீழ்ச்சி காண வைத்துள்ளது. ஆயினும் அதன் வளமும் சிறப்பும் மங்கவில்லை. யாழ்க்குடா நாட்டின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் உற்பத்தி நிலமாக தொடர்ந்து ஒளிர்கின்றது. மிளகாய், வாழைக்குலை, கருவாடு என்பனவற்றின் கொள்வனவுக்காக புதன், சனிக்கிழமைகளில் தென் இலங்கை சிங்களவர் வர்த்தகத்துக்கு வந்து போகும் கிளிநொச்சி மத்திய சந்தை மீண்டும் நவீன சந்தை தொகுதியாக உருவெடுத்துள்ளது.

காடு அடர்ந்த ஒரு ஒதுக்குப்புறம் 70 ஆண்டுகளுக்குள் எழிலும் ஒளிர்வும் உள்ள வளநிலமாக வளர்ச்சி கண்டுள்ளது. போர்க்கால தளர்வுகள், இடிபாடுகளை தாண்டிய பாரிய வளர்ச்சி. வடக்கின் வளத்துக்கு ஒரு முத்தாரம். ●




டாக்டர். என்.ஜெகநாதன்



# 'அதுவே சரி'

ஆம் அதுவே சரி' என்று நாம் மற்றோருடன் ஒத்துப்போனால் நமக்குள் பிரச்சனைக்கு இடமில்லை. வாக்குவாதம் எழாது. எனினும் எமக்குள் சரியாகப்பட்டு விட்டது சரியானதல்ல, என்பதே மெய்யாகவும் அமையக்கூடும் என்பதை அறியக்கூடிய சந்தர்ப்பத்தையும் இழந்துவிடலாம். நாம் கலந்தாலோசிக்கவில்லை என்பதும் இதற்கு ஒரு காரணமாகிறது. கருத்து வேற்றுமைக்கு இடமளிப்பதாலும் எமது அறிவுணர்வு (*Awarness*) மேலோங்கலாம்.

**பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தால் தவிர்க்க முடியாதது என்பது முன்னோர்களால் சொல்லி வைக்கப்பட்டதே!**



பரிணாமம் (*Evolution*) என்பதன் அடிப்படை, ஏற்கனவே உள்ள ஒரு அமைப்பிலிருந்து வேறுபாட்டுடன் கூடிய அமைப்பிற்கான வாய்ப்பு. மனிதன் எதையும் புதுவிதமாக அல்லது முற்றிலும் புதியதாக தோற்றுவிக்க விளைவதும், ஏற்கனவே நடைமுறையிலுள்ளது சரிதான் (*It is ok*) என்ற எண்ணத்திலிருந்து விலகுவதால்தான்.

ஆவல், ஏக்கம், கவலை என எதுவும் மனதில் எழாதிருக்க 'இது போதும்' என்ற எண்ணத்துடன் இருந்து விடலாம். அத்தகைய மனவுணர்ச்சிகளை (*Emotions*) தவிர்த்து மனதை சமநிலையில் வைக்க இது ஒரு வழிதான். ஆவல் (*Anxiety*) என்ற மனவளர்ச்சிப் பெருக்கமே விலங்கினங்களை தற்காப்பிற்காக, 'சண்டை'யிடு அல்லது 'தப்பி ஓடு' (*Fight or Flight*) என்ற முறையில் செயற்பட தூண்டுவது.

கருத்து வேறுபாடுகள் எமக்குள் எழுந்தால் நாமும் அவ்வாறு செயற்பட வேண்டும் என்ற அவசியமில்லை. உணர்ச்சிவசப்பட்டுவிடுவதும் தவறானதே. இவ்வாறெல்லாம் செயல்படுபவர்கள் தமது தற்பெருமையின் தற்காப்பு என்றவாறு என்றே கூறலாம். அதைவிடுத்து அறிவுணர்வு மேலோங்குவதற்கு சர்ந்தப்பமளிப்பதே மேலானது. மெய்மை (*Reality*) என்னவாயிருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்கும் அதுவே வாய்ப்பு.

கருத்துக்களில் இணக்கமில்லை என நமக்குள் இணக்கம் (*We Agree to Disagree*) என்று சிலர் ஒதுங்கிவிடுவார்கள். 'என் கருத்தை நிராகரிக்க என்ன தைரியம் அவனுக்கு; சுத்த மடையன்', என மனதிற்குள் திட்டுபவர்களும் உள்ளார்கள்.

இவ்வாறு எண்ணம் கொள்வோர்கள் தமக்கு மற்றவரைவிட மேலான அறிவு, ஆற்றல், அனுபவம் என்றவாறு முடிவு கொண்டோர்களே. தமது கருத்தே மெய்யானது என அவர்களே நிர்ணயித்தும் விடுவார்கள். அது மெய்மைக்கு மாறாகவுமிருக்கலாம் என அவர்கள் அறியத்தவறுகிறார்கள். அவ்வாறாயின் 'அதுவே சரி' என்ற அவர் எண்ணம் அதுவே சரி = கழுதைக்கான முறையில் என்றே கருத வேண்டும். கழுதை அறிவாற்றலில் குறைந்துள்ளதால் எதையும் பழக்கி (*Training*) விடுதல் சுலபமல்ல என்று சொல்வார்கள்.

இவ்வாறான எண்ணத்தை தலை (மூளை)யில் கொண்டவர்கள் 'தலைவிதியும் அதற்கேற்பவே அமையும். தாம் பிடித்த முயலுக்கு 3 கால்கள்தான் என்று வாதிடும் சுபாவம் உடையவர்களாக இவர்கள் அமைவார்கள். வாதத்திற்கு மருந்துண்டு, பிடிவாதத்திற்கு எதுவும் மருந்தில்லை என்பது ஒரு முதுமொழி.

கற்றது கையளவு, கல்லாதது உலகளவு என்பதை யாராலும் மறுக்க முடியாது. தனக்கு தெரிந்தது இவ்வளவே என்று கூறிவிட யாரும் இலகுவில் முன்வருவதில்லை. சாக்ரட்டீஸ் (*Socrates*) இடம் 'உமக்கு நிச்சயமாக தெரிந்துள்ளவை எவை?' என்று வினவியபோது, அவர் கொடுத்த பதில் இவ்வாறே - தனக்கு என்னவெல்லாம் தெரியாதென்பதே நிச்சயம், தெரிந்துள்ளவை என எண்ணம் கொண்டவை எதுவும் நிச்சயம் என்று சொல்வதற்கில்லை.

மக்களுக்கிடையே எழும் பிரச்சனைகளுக்கான ஒரு காரணம், ஒரு சாராரின் நம்பிக்கைகள் மறுசாராரின் நம்பிக்கைகளிலிருந்து வேறுபட்டதாக அமைவதும், அதைச் சகிக்க முடியாமையுமே. மறுசாராரை அடக்கி / ஒழித்து விட்டால் தமது நம்பிக்கைகளை மேலோங்கி அல்லது பரப்பி விடலாம் என்ற எண்ணமும் ஆகும்.

திபெத்திய முன்னாள் தலைவர் தலாய் லாமாவின் ஒரு மேற்கோள் இவ்வாறுள்ளது - நாம் பெருமளவில் பேச விழைவதெல்லாம் ஏற்கனவே எமக்குத் தெரிந்தவையாகவேயுள்ளவை, மற்றோர் பேச்சுக்கு செவிசாய்க்க முன்வந்தோமானால் எமக்குத் தெரியாதனபற்றியும் தெரிந்து கொள்ள முடியும்.

இன்னொருவர் மீது கொண்டுள்ள பகை, தப்பபிப்ராயம் போன்றவை அவரின் கருத்துக்களை நிராகரித்துவிடக் காரணமாகலாம். எதையும் முழுமையாக கிரகிக்கவெனின், எமது மனம் பாகுபாடற்ற நடுநிலையில் செயற்பட வேண்டும். ஏற்கனவே எமது அறிவாகவும் அனுபவமாகவும் கொண்டுள்ளவையால் மனதை நடுநிலை தவறவிடக்கூடாது. வழக்குமன்றத்தில் ஜூரி (*Jury*) சேவை புரியும்போதும் இந்த விதமாகவே சாட்சி / வாதங்களை பரிசீலிக்கும்படி நீதிபதி அறிவுறுத்துவார்.

**பார்வைக்குள்ளது ஒன்றேயானாலும் பார்வையாளர் ஒவ்வொருவரும் கொள்ளும் அர்த்தம் வேறுபட்டதாக அமையலாம்.**

பார்வைக்குள்ளது ஒன்றேயானாலும் பார்வையாளர் ஒவ்வொருவரும் கொள்ளும் அர்த்தம் வேறுபட்டதாக அமையலாம். அது அவரவர் மனநிலையில் தங்கியுள்ளது. மனக்கண்ணோட்டத்தில் இவ்வாறு அமைவதை அறிவுணர்வாக கொள்ளலாம். இதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். *Beware of Awarness* என்றவாறு ஆங்கிலத்தில் சொல்லலாம். அதை நாம் உணர்வில் கொண்டால் மற்றவர்கள் கருத்துக்களையோ அல்லது அவர்களையோ இலகுவில் 'தூக்கி எறிந்து' விட மாட்டோம்.

இன்னொருவரின் கருத்தை நாம் ஏற்க வேண்டியதில்லை. ஆனால், கேட்டவுடன் உணர்ச்சிவசப்படவும், 'பதிலடி' கொடுக்க வேண்டும் என்று துள்ளவும் மாட்டோம். எமக்கு எது சரியாகப்படுவதுபோல் அவருக்கு அவர் கருத்தே சரியாகப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்வோம்.

நாம் உறுதியாக கொண்ட எண்ணமே எமது நம்பிக்கையாகி விடுகிறது. எமது நம்பிக்கைகள் யாவும் மெய்யானவை என்று சொல்வதற்கில்லை. அசைக்க முடியாத நம்பிக்கையானால் நாம் எண்ணத்தை மாற்றிக் கொள்ள மாட்டோம் என்பதை குறிப்பதே. அது மெய்யற்றது என்றானால் நாம் அறியாமை அல்லது மாயைக்குள்ளாகிவிட்டோம் என்றே அமையும். இவ்வாறான நிலையில் அறிவுணர்வு விஸ்தரிக்கப்பட இயலாது.

மனம் ஒரு மந்திரச் சாவி என்ற கருத்தை பிரபலமான ஒரு பேச்சாளர் / எழுத்தாளர் வெளியிட்டுள்ளார். மனம்புரியும்விளையாட்டு (*Mind Games*) என்று குறிப்பிடக்கூடியதாக 'மனத் தடுப்பு இயக்கங்கள்' (*Defence Mechanisms*) பற்றி உளவியல் வல்லுனர்கள் விபரித்துள்ளார்கள். 'திராட்சைக்கு எட்டாத நரி' என்ற கதையின்படி 'அந்தப் பழம் புளிப்பானது' என்ற எண்ணமாற்றும் இயக்கத்தை மனம் கொண்டது என்பது அதற்கு ஓர் உதாரணம். மெய்மையை ஏற்றுக்கொள்ளுவது கசப்பு மாத்திரையை விழுங்குவதுபோல் என ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

'என் கண்ணில் உன்பார்வையென்றால் என்னுயிரும் உன்னதன்றோ' மனதைத் தொடும் செய்யுள் இது. என் மனக்கண்ணோட்டம் (எண்ணங்கள்), உன் மனக்கண்ணோட்டம் (எண்ணங்கள்) ஆகிவிடின் ஈருடல் ஓர் மனம் கொண்டவராவோம், கருத்தொருமித்தவராவோம் என்பதற்கான உவமையே அது. இது காவியங்களில் பொருந்தும். நடைமுறையில் பொருந்துமா? பொருந்தாவிடில்



வருந்துவோம்.

'தங்கள் சித்தம் என் பாக்கியம்' என மனைவி கணவனின் எண்ணத்தையேற்பதாக வரலாற்றில் சொல்லியிருக்கலாம். தற்போதைய காலகட்டத்தில் அவர்கள் இருவரது அபிலாஷைகளும் **50:50** என்ற முறையிலே ஏற்கப்பட வேண்டியுள்ளன. இல்லையேல் அவர்கள் கதை விவாகரத்தில் முடிந்து விடும். நகைச்சுவையாளர் ஒருவர் கூறியது இது - 'ஓம்' என்ற மந்திரத்தை சொல்வதைவிட, ஆம், அதுவே சரி என்று சொல்லிவிட்டால், வீட்டில் சண்டை சச்சரவே இல்லை!

விவேகம் என்பதை பகுத்தறிவான எண்ணங்கள் (*Discriminative Thinking*) மூலம் தெளிவு (*Clarity*) காணுதல் எனலாம். இதில் முழுமையாக வெற்றி பெறுவோரை மெய்யறிவு கொண்டவர்களாக கருதலாம். சராசரி மனிதர்களுக்கு இது எட்டாதது. விஞ்ஞான ரீதியில் இம்முயற்சியில் ஈடுபட்டால் விஞ்ஞானியாகவும், மெய்ஞ்ஞான ரீதியில் ஈடுபட்டால் மெய்ஞ்ஞானியாகவும் கருதப்படலாம். இவை எல்லையில்லா முயற்சிகள் அன்றோ! ஆன்மீகம் பற்றி பேசுவோரில் சிலர் அது தேடுதலை குறிப்பது என்பதை மறந்து விடுகிறார்கள். அதுவே சரி என எதிலும் இறுதியான முடிவு கொண்டுவிட்டால் தேடுதலுக்கு அதற்கு மேலாக இடமில்லை. மனிதப் பிறவியிருக்கும்வரை அது முடிவடையாத ஒரு பிரயாணமாகவே அமையும்.

உறுதியாக சொல்வதாயின், 'யாதொன்றுமறியேன் பராபரனே' - தாயுமானவர். ●



திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்

# வள்ளுவன் புகழ் வையகம் எல்லாம்!

பலருக்குப் பல வகையில் பயன்படும் சிறப்பு வாய்ந்த தனிப்பொது நூலாகிய திருக்குறளை இலக்கியமாகக் கருதிக் கலைநயம் காணலாம்; ஒழுக்க நூலாகப் பேணலாம்.

**"அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப் படும்" (501)**

என்பது பொருட்பாலில் 'தெரிந்து தெளிதல்' அதிகாரத்தின் முதல் குறள்.

தனக்குத் துணையாக இருக்க வல்லோரைத் தெரிந்து தெளிய வழிகாட்டும் குறட்பா இது. அறத்தில் நம்பிக்கை உறுதி உடையவரா? பொருள் வகையில் நாணயம் ஆனவரா? இன்ப வேட்கைக்கு எளிதில் அடிமையாகக் கூடியவரா? தன் உயிர்க்கு அஞ்சி நெருக்கடியில் நம்பியோரைக் கைவிட முற்படுபவரா? என்றெல்லாம் ஒருவரை ஆய்ந்து தெளியவேண்டும் எனக் கூறுகிறது இக்குறள்.

தலைமைப் பண்பு விழைவார்க்கு மட்டும் இக்குறள் பொருந்தும் என நினைக்காமல் தலையாய நூலாக நாம் ஏற்க விழையும் நூலுக்கும் இத்தேர்ச்சி முறை பொருந்தும் என்பது என் கருத்து. அந்த வினாடிக்கு மட்டும் இன்பம் தந்து பின் மறக்கச் செய்யும் நூலை விட எக்காலத்திற்கும் எச்சூழலிலும் கைகொடுத்து உதவ வல்லதே சிறந்த நூல். அப்படிச் சிறந்து நிற்கும் தலைமை நூலாகத் திருக்குறளை நாம் பெற்றுள்ளோம். எனினும் எந்த அளவுக்கு அதில் தெளிவு பெற முயல்கிறோம்?

ஒருவனுடைய அறிவை ஆராய்கையில், மறக்கக்கூடாத அடிப்படையான உண்மை ஒன்று உண்டு. எல்லாம் அறிந்தவரும் ஏதும் அறியாதவரும் என இவ்வுலகில் யாரும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஓரளவேனும் உலக ஞானம் இருக்கவே செய்யும். அதுபோலச் சிறந்த அறிஞரிடத்தில் ஓரளவு அறியாமை இருப்பதும் இயல்பு.

**"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு" (503)**

எனும் இக்குறட்பா, திருக்குறளைப் போற்றிப் பயில்வார்க்கும் ஒரு வகையில் பொருந்தும். திருக்குறளின் அரிய கருத்துக்களைப் பிழையறக் கற்றாலும் கூட, நமக்கு அதனை முழுதுறத் தெரிந்து கொண்டதொரு மனநிறைவு ஏற்படுவதில்லை.

சமுத்திரக் கரையில் நின்று அதனை நாள்தோறும் பார்த்தாலும் கூட மீண்டும் மீண்டும் சென்று அலை எழுச்சியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எவர்க்கும் குறைவதில்லை. வானத்தில் வலம்வரும் பூரணச் சந்திரனை எத்தனைதரம் பார்த்தாலும் மனம் சலிப்பதில்லை. மீண்டும் அதை அண்ணாந்து பார்க்கவே ஆவல் பிறக்கும். தெருவில் மணியோசை எழுப்பி வரும் கோவில் யானையைப் பலமுறை பார்த்திருந்தாலும், அது மறுநாள் மணியடித்து வரும்போதெல்லாம், சிறுபிள்ளை போல மீண்டும் அதனை வியப்புடன் பார்க்கும் விருப்பில் இருந்து யாராலும் விடுபட முடிவதில்லை. திருக்குறள் பயிற்சிக்கும் இது பொருந்தும். எத்தனை முறை புரட்டினாலும் திருக்குறள் எழுப்பும் அறிவுரை அலைகள் ஓய்வதில்லை; பலமுறை பயின்றாலும் அதன் முழுநிலவொளி ஊற்று வற்றிப் போவதில்லை. எத்தனை தடவை திருப்பிப் பார்த்தாலும் அதன் பொருட்பெருமை வியப்பூட்டத் தவறுவதில்லை.




"வள்ளுவன் புகழ் வையமெல்லாம் வாரி இறையடா தமிழா" என இளமையில் கேட்ட திரைப்பாடலை இன்று கேட்டாலும் நமக்குள் அது கிளர்ச்சியூட்டாமல் இருப்பதில்லை. அப்பாடலின் எடுப்பான இசையைவிட, அழுத்தமான பொருட்செறிவே அப்பாடலை இன்றும் நினைக்கச் செய்கிறது.

வையகம் முழுமைக்கும் உரிய நூல் திருக்குறள். அதனை இயற்றிய திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தவர் எனினும் அவர் யாத்த நூலே அவரை உலகறியச் செய்துள்ளது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' எனும் தொடர் நூல் வழியாக - ஆசிரியரையும் உலகப் பொதுவுடைமை ஆக்கிவிட்டது.

வள்ளுவம் - உலக நூல், அறம் - பொருள் - முதலான அதன் கருத்துக்கள், ஒரு நாட்டார்க்கோ, மதத்தார்க்கோ மட்டும் உரியன அல்ல. திருக்குறள் முழுதும் வரும் 'உலகு' எனும் சொல்லாட்சியே இவ்வுண்மையை நிலைநிறுத்தும். பழந்தமிழ்ப் பண்பாட்டின் மூல வித்தாகிய - 'உலகு' எனும் கருத்து விரிந்த சிந்தனை மரமாகிச் செழித்திருப்பதே திருக்குறள் எனும் பண்ணை நிலம், பின்னர் உலகம் தோன்றிய சீவகாருண்ய, மனிதாபிமான, சமதர்ம உணர்வுகள் அனைத்தும் திருக்குறள் எனும் பேராலமர நிழலுக்குள் அடங்கிவிடுவன என்றே சொல்ல வேண்டும்.

'உலகு ஒரு குலம்' என உபதேசம் செய்து நின்று விடாமல் ஒரு குலச் சிந்தனை உருவாவதற்கான கருவிகளையும் திருக்குறள் அளிக்கிறது. அவற்றுள் முதல் கருவி அன்பு,

**"அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு" (80)**

என்பது அக்கருவியின் ஆற்றலைக் கூறுகிறது. அன்பு, இயற்கை உணர்வு; எல்லா உயிர்களிடமும் விளங்குவது; அனைத்தையும் வளர்ப்பது; பரிணாம வளர்ச்சியாக; கூர்தல் அறமாக என்றும் நிலவுவது, அந்த அன்பு விரைந்து வளரும் களம் மாந்தர் மனம். மனத்தாலமைவதே வாழ்வு. அன்பின் வழியே வாழ்க்கை வளர்தல் வேண்டும். அவ்வாறு வளரும் வாழ்வு பண்பும் பயனும் தரும்; வாழ்க்கைக் கலையாக நீடு நிலவும்.

வள்ளுவம் வழங்கும் மற்றோர் ஆற்றல் மிகு கருவி: அறம்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதன்; அனைத்து**
**அறன் ஆகுல நீரபிற" (34)**

என்றும்,

**"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்" (35)**

என்றும் குறள் நெறி கூறுகிறது அன்பு - அறம் எனும் குறள் நெறிகளைப் பயன் கொள்ளும் துறைகளாக, இல்வாழ்க்கை தொட்டு எல்லா அதிகாரங்களும் படிக்கட்டுப் போல அமைக்கப்பட்டுள்ளன.

'திருக்குறள் - ஒரு சுரங்கம்' என்பார் திரு.வி.க. அதிலிருந்து இதுவரை எத்தனையோ கருத்துச் செல்வங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு ஆயிரமாயிரம் இலக்கியங்களுக்கு ஆபரணக் கற்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அணிவோர்க்கெல்லாம் விலைமதிப்பற்ற அழகுச் செல்வங்களாக இன்றும் துலங்குகின்றன.

'திருக்குறளை ஓர் உயிர்மருந்துக் கடை' என ஒப்பிடுவார் அறிஞர் வ.சு.ப.மாணிக்கனார். அவரவர் நோய்க்கேற்றபடி, உரிய மருந்துகள் கடையில் இருப்பதைப் போல, நம் வாழ்வுக்கேற்ற தனி அறங்களும் பொது அறங்களும் திருக்குறள் மருந்துக் கடையில் உண்டு. அவற்றை நாமே வாங்கிப் பிணி தீர்த்துக் கொள்ளலாம்.

பலருக்கும் பல வகையில் பயன்படும் சிறப்பு வாய்ந்த தனிப்பொது நூலாகிய திருக்குறளை இலக்கியமாகக் கருதிக் கலைநயம் காணலாம்; ஒழுக்க நூலாகப் பேணலாம். அரசியல் நூலாகப் படிக்கலாம்; காலம் மாறினாலும் அடிப்படை அறங்கள் மாறுவதில்லை எனும் பேருண்மையை அறியலாம். ■

# லண்டனில் 40வது ஆண்டு நாடக விழா



எதிர் வரும் செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி, லண்டன் வாடேரஸ்மீட் *WATERSMEET THEATRE* என்ற பெரும் அரங்கில் க பாலேந்திரா தலைமையில் இயங்கும் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெறுகிறது.

"'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்றான் மகாகவி பாரதி. இப்பொழுது, நாடகத்தமிழ் நானிலம் முழுவதும் ஒலிப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள், லண்டன் அவைக்காற்று கலைக் கழகக் குழுவினர். அவர்கள் லண்டனில் தமது 40 வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றனர். இந்த நாடகக் குழுவினருக்கு ஆணிவேராக இருக்கும் ஆனந்தராணி-பாலேந்திரா தம்பதியருக்கும், நாடகக் குழுவினருக்கும் என் வாழ்த்துக்கள்.

நான் அக்குழுவினருடன் சுவிட்ஸர்லாந்துக்குச் சென்றபோது, இவர்கள் மேடையேற்றிய நாடகங்களுக்குக் கிடைத்த வரவேற்பு என்னைப் பிரமிக்க வைத்தது. அரசியல், சமூகப் பிரச்னைகளை வெறும் கோஷங்களாக்காமல், அழகியல் உணர்வுடன் இவர்கள் அணுகும் முறை பாராட்டத்தக்கது.

'*Catch them young*' என்பதற்கேற்ப கடந்த சில ஆண்டுகளாகச் சிறார் நாடகப் பட்டறைகள் நடத்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருவது மகிழ்ச்சிக்குரியது. தமிழ் நாட்டில் இத்தகையப் பயிற்சிக் கூடங்கள் இல்லவேயில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னுடைய 'மழை', 'பசி', 'சூறாவளி' என்ற மூன்று நாடகங்களும் அவைக் காற்றுக் கலைக் கழகத்தினரால் பல தடவைகள் மேடை ஏற்றப்பட்டிருக்கின்றன. சொல்லப்போனால், இந்தியாவில் அவை மேடை ஏறியதைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாக பாலேந்திரா குழுவினரால் உலகமெங்கும் மேடை ஏறி இருக்கின்றன என்பதையும் சொல்லியாகவேண்டும்".

-இது தமிழகத்து நாடக ஆளுமை பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி அவர்கள் கூற்று.

1978 இல் பாலேந்திரா நெறிப்படுத்திய "கண்ணாடி வார்ப்புக்கள்" நாடகத்தின் வெற்றியைத் தொடர்ந்து இந்த அமைப்பு இலங்கையில் தொடங்கப்பட்டது. 1978இல் இருந்து 1982 வரை இலங்கையிலும். கடந்த 36 வருடங்களாக லண்டனிலும் புலம் பெயர் நாடுகளிலும் தொடர்ந்த நாடக செயற்பாடுகளை இடைவிடாமல் செய்து வருகிறது. தாயகத்தில் 4 வருடங்களில் கணிசமான பங்களிப்பை தமிழ் நவீன நாடக உலகுக்கு, காத்திரமான நாடகங்களின் தொடர்ந்த மேடையேற்றங்கள் மூலம் செய்திருக்கிறது. இவர்களது பெரும்பான்மையான நாடகங்களில் சமூகத்தில் காணும் ஒடுக்கப்படடவர்களுக்கெதிரான பலவிதமான வன்முறைகளும் அதனால் பாதிப்படையும் சமூக, தனிமனித அவலங்களும் பேசுபொருளாக இருந்து வருகிறது. அவைக்காற்றுக் கழகத்தின் சிறந்த படைப்பபுக்கள் நூற்றுக்கணக்கான மேடையேற்றங்களைக் கண்டிருக்கின்றன. லண்டன் மாநகரத்தோடு மட்டும் நின்றுவிடாமல் ஏனைய நாடுகளுக்கும் சென்று, நாடக ரசிகர்களின் தாகத்தை தீர்ப்பது மட்டுமில்லாமல், படைப்பாளிகளின் ஆர்வத்தைத் தூண்டி வருவது பாராட்டுதற்குரியதாகும்.

அன்றிலிருந்து இன்று வரை பங்கு பற்றுபவர்கள் அனைவரும் தன்னார்வ தொண்டர்களே. எந்த பெரிய அமைப்புகளின் நிதி பெறாமல் சமரசம் ஏதுமில்லாமல் தமிழ் மக்களின் ஆதரவில் கடினமான விடாமுயற்சியுடன் நாடக இயக்கத்தை தொடர்கிறது.

கடந்து 28 வருடங்களாக லண்டனில் பிறந்து வளரும் தமிழ் சிறுவர்களைக் கொண்டு தமிழில் நாடகங்களை செய்து மேடையேற்றி வருகிறது .

கடந்த 15வருடங்களாக லண்டனில் முதலாவது தமிழ் நாடகப் பள்ளியை நிறுவி வாராந்தம் நாடக வகுப்புகளை தொடர்ந்து செய்து வருகிறது. பயிற்சியாளர்களாக பாலேந்திராவும் ஆனந்தராணியும் செயல்படுகின்றனர். இந்த நாடகப் பள்ளியின் 15ஆவது ஆண்டு நிறைவும் அதே தினம் கொண்டாடப்படுகிறது என்பது மகிழ்ச்சியான செய்தி.

6 வயதில் இவர்களோடு இணைந்த சிறுவர் சிலர் இளையவர்களாக திருமணமான பின்னரும் தொடர்ந்து இவர்களுடன் பயணிக்கிறார்கள். இவர்களில் சிலரை இணைத்து பாலேந்திராவின் விருப்பு நாடகமான "கண்ணாடி வார்ப்புக்கள்" (*The Glass Menagerie*) இப்போது புதிதாக பாலேந்திராவின் நெறியாள்கையில் தயாரிக்கப்படுகிறது. இதில் பங்கு கொள்ளும் ஒருவரது அடுத்ததலைமுறை சிறுவர்களும் நாடக வகுப்புகளில் இணைந்து புதிய சிறுவர் நாடகங்களில் பங்கு பற்றுவது இவர்களின் தொடர்ந்த வளர்ச்சிக்கு அறிகுறி.

தமிழர் வாழும் பல நாடுகளிலும் நாடக விழாக்களை நடத்தியதோடு, லண்டனில் கடந்த 27 வருடங்களாக தொடர்ந்து இடைவிடாமல் வருடாந்த நாடக விழாக்களை செய்து வரும் இவர்களது பணி போற்றத்தகுந்தது.

நடைபெறவிருக்கும் 40 வது ஆண்டு நிறைவு விழாவில் லண்டன் சிறுவர்களை வைத்து ஜோன்சன் ராஜ்குமார் எழுதிய "அமைதி பூங்கா ", லண்டன் இளையோர் தாமாகவே தமிழில் எழுதி நடிக்கும் " அது" , லண்டன் இளையோரை இணைத்து "கண்ணாடி வார்ப்புக்கள்" ஆகிய நாடகங்களுடன்,

பாலேந்திரா நெறிப்படுத்திய நாடகங்கள் பலவற்றை இணைத்து - பங்கு பற்றிய அனைவரும் மேடையில் தோன்றி ஒரு "நாடகங்களின் சேர்க்கை நிகழ்வு" ஒன்றும் இடம் பெறவுள்ளது.

## நூல் அறிமுகமும் வெளியீடும்

## 'அறமும் போராட்டமும்'

**நூல் வெளியீட்டு விழா 16.09.2018 ஞாயிறு**
**மாலை 3 மணி முதல் 5.30 மணி வரை**

Surbiton Librarly Hall இல்
(Ewell Road, Surbiton,
Surrey KT6 6AG) நடைபெறவுள்ளது.

## பாரிஸில் 3வது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு

பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பாரீஸ் செம்மொழி மத்திய ஆய்வு நிறுவனம், அழகப்பா பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இணைந்து நடாத்தும் மூன்றாவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு - 'இலக்கியச் செவ்வியம் விபுலாநந்தம்' 08.09.2018 சனி, 09.09.2018 ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் பாரிஸில் (20, Esplanade Nathaliesarraute. 7501 Paris) நடைபெறவிருக்கிறது. தமிழக பல்கலைக்கழக துணைவேந்தர்கள், அரச தூதுவர்கள், உலகத் தமிழறிஞர்கள் பங்கு பெறும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறார்கள்.

## வேலணையூர் பொன்னண்ணாவுக்கு லண்டனில் அஞ்சலி கூட்டம்

சமீபத்தில் டென்மார்க்கில் மறைந்த முது பெரும் ஈழத்து எழுத்தாளர் அமரர் வேலணையூர் பொன்னண்ணா நினைவு அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை, ஈவிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில், (5,CHAPEL ROAD, WEST EALING, LONDON W 139AE) மாலை 3-7 மணிவரை நடைபெறவுள்ளது.

பிரித்தானிய வேலணை ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்தில், அதன் உறுப்பினர்கள், புலம் பெயர் சைவ, தமிழ் அறிஞர்கள், பிரித்தானியாவில் இயங்கும் வேலணை கிழக்கு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம், வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், சைவ முன்னேற்றச்சங்கம், சைவதிருக்கோயில் ஒன்றியம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இரங்கல் உரை நிகழ்த்துவர். விபரங்களுக்கு: 07855558019 (இளஞ்சேய) 07930543057 (கலைவேந்தன்)



# த க ண்ணீரிலும்

## மிதக்கும் கேரளா தேசம்!

கடவுளின் தேசம் இன்று தண்ணீரிலும் கண்ணீரிலும் மிதந்துகொண்டிருக்கிறது. மழையும், வெள்ளமும் கேரளத்தின் இயல்பையே மாற்றியிருக்கிறது. இதுவரை 350க்கும் அதிகமானோர் இறந்திருக்கின்றனர்.

களப்பணியில் இருப்பவர்கள் கூறுகையில் 1000க்கும் அதிகமானோர் இறந்திருக்கக்கூடும் என்று தெரிவிக்கின்றனர்.

இயற்கைப் பேரிடரால் வரலாறு காணாத அளவுக்குக் கேரள மாநிலம் சீர்குலைந்து இருக்கிறது. கடந்த 92 ஆண்டுகளில் இல்லாத மழையும் வெள்ளமும் கேரளத்தைப் புரட்டிப் போட்டிருக்கிறது. இந்த வருடத்தின் பருவமழையை எந்தக் கேரள மக்களாலும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது.

ஜூன் முதல் வாரத்தில் தொடங்கிய பருவமழை ஆகஸ்ட் முதல் வாரத்தில் ருத்ரதாண்டவம் ஆடியது. கடல்மட்டத்திலிருந்து 2403 மீட்டர் உயரத்தில் இருக்கும் இடுக்கி அணையிலிருந்து மழையின் காரணமாக 26 ஆண்டுகளுக்குப் பிறகு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. ஏற்கனவே, மழையின் அளவும் அதிகரித்திருந்த நிலையில் கேரளத்தில் இருக்கும் 33 நீர்த்தேக்கங்களிலிருந்தும் பெருவாரியான நீர் திறந்துவிடப்பட்டது. ஆரல்கள், களம்பூர், வண்டிபெரியார் போன்ற இடங்களெல்லாம் நீரில் தத்தளிக்கத் தொடங்க, அதிகபட்ச வெள்ள பாதிப்புப் பகுதிகளாக ஆகஸ்ட் முதல் வாரத்தில் கேரள அரசு அறிவித்தது. அதற்கடுத்த நாள்களில் வயநாடு, இடுக்கி, கன்னூர், திரிச்சூர், எர்ணாகுளம் எனக் கேரளத்தின் பிற பகுதிகளும் வெள்ளநீரால் சூழ ஆரம்பித்தன. வெள்ளம், மழை இதோடு நிலச்சரிவும் சேர்ந்து கொண்டது. ஆயிரக்கணக்கான மரங்களும் வீடுகளும் இந்த நிலச்சரிவில்



சிக்கிச் சீரழிந்து போயின. இடுக்கி மாவட்டத்தில் அதிக அளவில் பாறைகள் இருக்கின்றன. அந்தப் பாறைகளில் அதிக விசையுடன் தண்ணீர் மோதும்போது, பாறை வெடித்து இன்னும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிக்கின்றது. கன்னூரில் அதிக அளவில் நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. வாகனங்களும், கால்நடைகளும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அரசும், பல தன்னார்வ அமைப்புகளும் பேரிடரில் சிக்கியிருக்கும் மக்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

மூன்றரை லட்சம் மக்கள் உயிரோடு மீட்கப்பட்டனர். ஏழு லட்சம் மக்கள் வீடுகள் இழந்து முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

மக்களோடு மக்களாக நின்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது கேரள அரசு. இரவு பகல் பாராமல் அனைத்து அதிகாரிகளும் வெள்ள பாதிப்புகளைச் சரி செய்ய உத்தரவிட்டிருக்கிறார் கேரள முதல்வர் பினராயி விஜயன். அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீர் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார். கேரளத்தின் பாதிப்புகளை இப்போது பட்டியலிட முடியாது. சென்னை வெள்ளத்தைவிட பத்து மடங்கு அழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. மீண்டும் கேரளத்தைக் கட்டமைக்க பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும். அதற்கான நிவாரணங்களைப் பிற மாநில அரசுகளும், பல்வேறு அமைப்புகளும், தன்னார்வலர்களும் கேரளத்துக்கு வழங்கி வருகிறார்கள். கேரளத்தின் உள் மாவட்டங்களுக்குச் செல்வதற்கான அனைத்துப் பாதைகளும் வெள்ளத்தால் சேதமடைந்திருக்கின்றன. உயிரைப் பணயம் வைத்துத்தான் பேரிடர் மேலாண்மை குழுக்கள் மக்களை மீட்டு வருகின்றனர். ‘பாதைகள் இல்லாத ஊர்களிலும் மலை மேடுகளிலும் மக்கள் சிக்கியிருக்கிறார்கள். அவர்களை மீட்பது பெரும் சவாலாக உள்ளது.’



வெள்ளத்தில் இறந்தவர்களுக்கு இறுதிச்சடங்கு செய்யக்கூட இடம் இல்லாத அளவுக்கு வெள்ள பாதிப்பு இருக்கிறது. இந்த இயற்கை பேரிடரிலிருந்து கேரளம் மீண்டு வர வேண்டும். ●

---

# இலண்டன் பல்கலைக்கழகத்தில் SOAS தமிழ்த் துறை(பீடம்)




உலகப்புகழ் பெற்று விளங்கும் இலண்டன் பல்கலைக்கழகத்தில்-SOAS தமிழுக்கான இருக்கையைத்துவங்குவதற்கு அதிகாரப்பூர்வமான ஒப்புதலை பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. இதற்கான ஒப்புதலை கல்லூரியின் துணை இயக்குனர் கலாநிதி நவதேசு பியூவால் (Dr. Navtej Purewal) இலண்டன் தமிழ் இருக்கை ஒருங்கமைப்புக் குழுவினரிடம் வழங்கினார்.

### இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் படிப்பு வரலாறு:

இலண்டன் பல்கலைக்கழகத்தில் 1931 முதல் இயங்கிவந்த தமிழ் படிப்புகள், 1995 களுக்குப் பிறகு மாணவர் சேர்க்கை குறைந்ததாலும், கல்லூரியின் பொருளாதார முதலீடுகள் குறைந்ததாலும் நிறுத்திவைக்கப்பட்டன. உலகளாவிய தமிழர்களின் எழுச்சியாலும், புலம்பெயர் தமிழ் மக்களின் தமிழ் ஆர்வத்தாலும், ஐக்கிய இராச்சியத்தில் தமிழ் படிப்புக்கான தேவைகள் அதிகரித்துள்ளதால், தமிழ் படிப்புகளை மீண்டும் கொண்டுவருவது என்று பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

### தமிழ் இருக்கை அமைப்பு (Tamil Chair UK):

ஐக்கிய இராச்சியத்தில் தமிழ் இருக்கை ஒன்றை அமைப்பது தொடர்பாக 10 பேர் கொண்ட ஒரு தன்னார்வக் குழு, திரு.செலின் சார்ச் தலைமையில், கடந்த வருடம் நவம்பர் (November 2017) முதல் செயல்பட்டு வருகிறது. கந்தசாமி செல்வன், பழனிவேல், சிவாபிள்ளை, சிவநேசன், செந்தில்குமார், பாலசுப்ரமணியம், பாலகிருசுணன், மற்றும் திருமதி உமாதேவி ஆகியோர் தமிழ் இருக்கை அமைப்பின் ஏனைய உறுப்பினர்கள்.

இந்த தமிழ் இருக்கை அமைப்பு, முதல் கட்டமாக ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ச், மற்றும் இலண்டன் பல்கலைக்கழகங்களின் தமிழ் வளர்ச்சி சூழலை ஆய்வு செய்து, இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே சிறப்பாக இயங்கி தற்போது செயல்படாமல் இருக்கும் தமிழ் இருக்கையைப் புதுப்பிப்பதே சிறந்தது என்று உணர்ந்து, இலண்டன் பல்கலைக்கழகத்துடன் SOAS தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இந்த பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் தான் இலண்டன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ளது என்பதும், இந்த பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் தான் பல அரும்பெரும் ஓலைச்சுவடிகளும், புராதான தமிழ் புத்தகங்களும் உள்ளன என்பதும், இந்த தமிழ் இருக்கைக்கு வலு சேர்க்கும் பிற காரணிகள்.

### அதிகாரப்பூர்வ ஒப்புதல்:

இந்நிலையில், இலண்டன் பல்கலைக்கழகம், தமிழ் இருக்கை அமைப்பின் கோரிக்கையை ஏற்று, இலண்டன் பல்கலைக்கழகத்தில் SOAS தமிழ் படிப்புகளைத் துவங்குவதற்கு உரிய அதிகாரப்பூர்வ அனுமதியை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள திருவள்ளுவர் சிலையின் முன் வைத்து வழங்கினர்.

அனுமதிக் கடிதத்தை, கல்லூரி துணை முதல்வர் நவதேசு வழங்க, தமிழ் இருக்கை ஒருங்கமைப்புக் குழுவினர் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து பெற்றுக்கொண்டனர்.

தமிழ் இருக்கை அமைத்தல் மற்றும் வருடாந்திர கல்வி உதவித்தொகைகள் வழங்குதல் என இருக்கைக்கு மொத்தம் 6 மில்லியன் பவுண்டுகள் முதல் 10 மில்லியன் பவுண்டுகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலண்டன் தமிழ் இருக்கை 2021 இல் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தமிழ் இருக்கை கொண்டாட்ட நிகழ்வுகள், பல்கலைக்கழகத்தால் அக்டோபர் 14, 2018 அன்று கொண்டாடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ●



இளவாலை எஸ்.ஜெகதீசன்

# பந்தாடிய குகை







தாய்லாந்து நாட்டின் சியாங்ராங் மாகாணத்தில் மியான்மார் எல்லையில் உள்ளது தாம் லுவாங் என்ற குகை. தாம் லுவாங் குன் நும் நங் நன் என்பது அதன் முழு பெயர். ஆறு ஒன்றுக்கு பிறப்பிடமாக உள்ள தூங்கும் பெண்ணின் பெருங் குகை என்பது அதன் அர்த்தம். தாய்லாந்தின் நான்காவது பெரிய குகையான இதன் நீளம் 10.316 மீட்டர்.



ஏராளமான நீர் வீழ்ச்சிகளும் அடர் அடவிகளும் சூழ்ந்த பகுதியில் உள்ள காற்றின் சுதந்திரம் குறைந்த இயற்கையின் சிக்கலான இக் குகைக்குள் யூன் மாதம் 23ம் திகதி காட்டுப்பன்றிகள் எனும் பெயருடைய கால்பந்தாட்ட குழுவின் 11 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 12 சிறார்கள் பயிற்சியாளர் எக்காபோல் சந்தாவாங்குடன், சிக்கிக் கொண்டதற்கு திடீர் மழையால் ஏற்பட்ட காட்டு வெள்ளம் குகையின் உற்புறவாசலை 16 அடி உயரத்துக்கு அடைத்தது காரணமானது.

வழமையாக பயிற்சி எடுக்கும் மைதானத்திலிருந்து 45 நிமிட சைக்கிள் சவாரியில் அமைந்துள்ள இக்குகைக்கு ஏன் சென்றார்கள் என்பதற்கு சாகச பயணம் மேற்கொண்டனர் என்பதே பரவலாக கூறப்படும் காரணம். எனினும் இது பயிற்சியின் ஒரு பகுதி அல்லது குழு உறுப்பினர் ஒருவரின் பிறந்த நாளுக்கான இன்ப அதிர்ச்சி அல்லது மழைநாளில் குகைக்குள் அணியினரின் பெயரைப் பொறித்தால் எதிர்காலத்தில் தாய்லாந்தின் தேசிய அணியில் விளையாடலாம் என்ற மூடநம்பிக்கை போன்ற காரணங்களும் கற்பிக்கப்படுகின்றன.

உலகை உதறி விட்டு; ஓரிரு மணித்தியாலங்களாவது குகைக்குள் நிற்கலாம்என்றுசென்ற பந்தாட்டச் சிறாரை யூன் 23 முதல் யூலை 10 வரை இருவாரங்களாக குகையே பந்தாடியது உலகமே பதறி உயிரில் வரவு வைத்த நாட்கள்.

இந்தக் குகை டூய் நங் நன் மலையின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது. மலை உச்சியிலிருந்து 800 மீட்டர் ஆழத்தில் சிறார் மாட்டியிருந்தனர். குகையின் உட்பகுதி சில இடங்களில் 33 அடி உயரமானது. சில இடங்கள் மிகவும் குறுகலானது.

உலகை உதறி விட்டு, ஓரிரு மணித்தியாலங்களாவது குகைக்குள் நிற்கலாம் என்று சென்ற பந்தாட்டச் சிறாரை யூன் 23 முதல் யூலை 10 வரை இரு வாரங்களாக குகையே பந்தாடியது - உலகமே பதறி உயிரில் வரவு வைத்த நாட்கள்.

யூன் 23 பகல் 11 மணியளவில் 12 சிறுவர்களும் பயிற்சியாளரும் குகைக்குள் புகுந்தனர். பெருகிப் பாய்ந்த காட்டு வெள்ளம் குகை வாசலை அடைத்த போது மதியம் ஒருமணி. மாலை மணி 4க்கு உள்ளே சிக்கியவர்களின் அடையாளமாகியது வெளியே அனாதரவாக கிடந்த அவர்களின் சைக்கிள்கள். நள்ளிரவில் தேடுதல் பணி ஆரம்பிக்கப்பட்டது.

உள்ளே சென்றவர்களை வெளியே வர விடாது வெள்ளம் மிரட்டியது. வெளியே இருந்தவர்களை உள்ளே செல்ல விடாது வெள்ளம் விரட்டியது. தொடரவுள்ள தொடர் மழை காரணமாக அவர்கள் முக்குளிக்க கற்றுக் கொண்டு வெளிவர வேண்டும் அல்லது குகைக்குள் பெருகும் வெள்ளம் வடியும் வரை 4 மாதங்களுக்கு அங்கு தாக்குப்பிடிக்க வேண்டும் என்றது தாய்லாந்து ராணுவம்.

வெளவால், எலி, நத்தை, பூரான் பூச்சி, புழு போன்றன உணவாவது தாய்லாந்தில் விநோதமல்ல. அதனால் 4 மாதங்களென்ன 4 வருடங்கள் கூட அவர்கள் அங்கு தாக்குப்பிடிப்பார்கள் என கற்பனையில் கனவு கண்டவர்களும் உலகெங்கும் இருந்தனர்.

கைவசம் உள்ளே இருந்த உணவு குறைந்தது. கைவசம் வெளியே உணவு இருந்தும் உண்பது குறைந்தது. வெளியே இருந்தவர்களை ஏக்கம் தாக்கியது. உள்ளே உள்ளவர்களை தாக்கம் ஏங்க வைத்தது. குதுகலம் மறைந்த துயரம் வெளியே. துயரத்தை மறக்க குதூகலம் உள்ளே. வெளியே பார்வையாளர்கள் வீரர்கள் ஆனார்கள். உள்ளே வீரர்கள் பார்வையாளர்கள் ஆனார்கள்.

தாய்லாந்து கடற் படை வீரர்களும் பேரிடர் மீட்புப் பணியினரும் ஆழ்கடல் சுழியோடிகளும் குகைக்குள் தேடுதலை ஆரம்பித்தனர். மீட்புப் பணியில், அமெரிக்க பிரித்தானிய நீரடி ஆய்வு குழுவினர் நால்வருடன் சர்வதேச நீரிடர் மீட்பு நிபுணர்களும் சேர்ந்தனர். குகைக்குள் உயரும் வெள்ளப் பெருக்கினை குறைக்க பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் இயக்கப்பட்டன. குகைக் கூரையில் படக்கருவிகளைப் பொருத்தி குகைக்குள் அவதானிக்க வசதியாகப ஆங்காங்கே 100 துளைகள் தோண்டப்பட அதன் ஊடே கொஞ்சம் காற்றும் அதை விடக் கொஞ்சமாக சூரிய ஒளியும் உட்புகுந்தது. வழி நெடுக வழிகாட்டவென கயிறு போடப்பட்டது. தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓ சா நிலமையை நேரில் அவதானித்தார். உள்ளே அதிகதூரம் குகைக்குள் முன்னேறிய சுழியோடிகள் செயற்பாட்டு முகாமொன்றை தற்காலிகமாக அமைத்தனர். சிறார் யோகாசனம் தியானம் மூச்சுப் பயிற்சி மூலம் மனதை ஒருமுகப்படுத்தி சோர்வை தவிர்க்க ஆரம்பித்தனர். அவர்கள் உயிருடன் இருப்பதை முதலில் பிரித்தானிய சுழியோடிகள் குழு கண்டு, ஆக்ஸிஜன் உருளைகள விநியோகித்தது. ஏசாதீங்கம்மா என்ற வார்த்தை உள்ளிருந்தும் பசியை தாங்கினாயா என்ற வார்த்தை வெளியிலிருந்தும் அதன்பின் பலமுறை குகைச்சுவர்களில் எதிரொலித்தது. மருத்துவர் தாதி உட்பட ஏழு பேர் கொண்ட சுழியோடிகள் மருந்துகளுடனும் உணவுகளுடனும் சிறார் இருந்த பகுதிக்கு சென்று தங்கி முகத்தை மூடும் வகையில் மூச்சுக்கவசம் அணியும் பயிற்சியையும் முக்குளிப்புப் பயிற்சியையும் ஆரம்பித்தனர். ஒவ்வொரு சிறுவரோடும், இரண்டு சுழியோடி வீரர்கள் உடன்வரவும், மீட்கப்படும் சிறுவனுக்கான காற்றுக் குடுவையை ஒருவர் சுமக்கவும் அடுத்தவர் அவனுடன் கயிற்றால் இணைக்கப்படவும் திட்டமிடப்பட்டது. மீட்புப் பணியில் ஈடுபட்ட சமன் குணன் என்ற தாய்லாந்தின் கடற்படை வீரர் உள்ளே ஆக்ஸிஜன் தீர்ந்து போன நிலையில் சகதியில் சிக்கி உயிரிழந்தார். சர்வதேச சுழியோடிகள் 18 பேர் நான்கு சிறாரை பாதுகாப்பாக முதலிலும் மேலும் நான்கு சிறாரை அடுத்தநாளிலும் மீட்டனர். அதற்கும் அடுத்த நாளான யூலை 10 ம் திகதி மிகுதி நான்கு சிறாரும் பயிற்சியாளரும் மீட்பு பணியாளர்களும் பத்திரமாக குகையை விட்டு வெளியேறினர்.



-மொத்த உலகமும் திரும்பிப் பார்த்து வாழ்வோடு வரவு வைக்கும் வரலாறானது பந்தாடிய குகை!

தாய்லாந்தின் 10,000 மக்கள் 100க்கும் மேற்பட்ட சுழியோடிகள் 900 பொலிஸார் 2000 ராணுவ சிப்பாய்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். 10 பொலிஸ் உலங்கு வானூர்திகள் பொலிஸாரின் 7 நோயாளர் ஊர்திகள் 700 பிராணவாயு உருளைகள் நூறு கோடி லிட்டர் நீரை வெளியேற்றும் இயந்திரங்கள் மீட்பு பணியில் செயற்பட்டன.

பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, ரஷ்யா, இந்தியா, ஜப்பான், இஸ்ரேல், பெல்ஜியம், செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, நெதர்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகள் கரை சேர்க்கும் பணியில் கரம் கொடுத்தன.

வெளவால் எச்சங்களால் வரும் நோய் (Histoplasmois), எலிகளின் சிறுநீர் தரும் வியாதி (Nyctophobia), ஈரநிலப் பூஞ்ஞைகள் மூலம் உருவாகும்பிணி (Melioidois), இருட்டுக்கு பயம் (Leptospirosis) போன்றன எதிர்காலத்தில்அவர்களுக்கு ஏற்படக் கூடிய உபாதைகள்.

-ஆண்டவா அவர்களை அவற்றிலிருந்து காப்பாற்று என்பதே உலகின் இப்போதைய பிரார்த்தனை! *

# லண்டனில் நாட்டிய விழா 2018

'பரத நாட்டியத்தின் உச்சம், இசையின் காட்சி வடிவம். அது ஒரு சடங்கு. பக்தியின் செயற்பாடு. நடனத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒருவர் அதே அளவுக்கு இசைக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்த இரண்டு கலை வடிவங்களிலும் முழுப் பயிற்சி பெற வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன' என்று 20ஆம் நூற்றாண்டின இசை, நடனக்கலைஞராக உலகெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட பாலசரஸ்வதி கூறுகின்றார்.

இந்த அடிப்படையில் நாட்டியம் எவ்வகையில் பரிணமித்து இவ்வுலகை ஆக்கிரமிக்கின்றது என்பதைப் புலப்படுத்தும் வகையில் அந்த நாட்டியத்திற்கான பாடலை கலாநிதி ஜெயந்தி யோகராஜா அவர்களே ஆக்கி, லண்டன் நாட்டிய விழா 2018 ஐ முதற் தடவையாக நடாத்தியிருந்தார். அவர் ஆக்கிய பாடல்களுக்கு திரு. பசில் தங்கராஜா அவர்கள் இசையமைத்து ஸ்ரீ ஆனந் அரவிந்தச்சன், ஸ்ரீஅப்சிபா ராஜ்குமார் ஆகியோர் அழகான குரல் வடிவம் கொடுத்து 'துழரசநெல ழக னுயஉந' என்ற இறுவெட்டையும் இந்த நாட்டிய விழாவில் வெளியிட்டிருந்தார்.

இந்த இறுவெட்டை லண்டன் நுண்கலை அமைப்பின் தலைவியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்ரீமதி அம்பிகா தாமோதரம் வெளியிட்டு வைத்திருந்தார். ஹரோ மேயராகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஹரீமா மரிக்கார் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து இவ்விழாவைப் பாராட்டியிருந்தார். கௌரவ விருந்தினர்களாக ஹரோ முன்னாள் மேயர்களான



லண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணா, சசிகலா சுரேஷ் கிருஷ்ணா, மற்றும் ஊடகவியலாளர்கள், நாட்டிய ஆசிரியர்கள், கலைஞர்கள் என கலந்து சிறப்பித்திருந்தனர். பிரம்ம ஸ்ரீ வியாச சர்மா குருக்களின் பூஜையுடன் ஆரம்பித்த இவ்விழாவை நாட்டிய ஆசிரியர்களான ஸ்ரீமதிகள் ரட்னலக்ஷ்மி சோமசுந்தரம், அனனியா ஐங்கரன், பாமினி சித்தரஞ்சன், நந்தினி ராஜன், கௌசல்யா தர்மீர், சாந்தி பிரதாபன், சோபிகா துளக்ணன், கௌசல்யா பிரதாபன், பிரியதர்சினி பிரதாபன், பிரியதர்சினி துளக்சீதரன், சங்கீதா நவரட்னம், சஸ்கியா கோகராஜா ஆகியோரின் மாணவிகள் இந்நாட்டிய விழாவை தமது நாட்டியத் திறமையால் சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்ட பணத்தொகை இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமையில் வாடும் விதவைப் பெண்கள் மற்றும் ஊனமுற்ற பெண்களுக்குமாக அனுப்பப்பட்டு உதவிக்கரம் வழங்கியதாக இவ்விழாவை மேற்கொண்ட கலாநிதி ஜெயந்தி யோகராஜா மகிழ்வுடன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் நவஜோதி ஜோகரட்னம், சஸ்கியா யோகராஜா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருந்தனர்.

*** நவஜோதி ஜோகரட்னம்.**


## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)

தகமைகள்: விண்ணப்பதாரர் உதவி அர்ச்சகர் பட்டம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 6 மாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

கடமைகள்: நாளாந்த பூஜையின்போதும், விசேட பூஜைகள் நடைபெறும் காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் பிரதம சிவாச்சாரியாருக்கு உதவி செய்தல்.

வேதனம்: மாதம் 1222+ ஓய்வூதியம். வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை வழங்கப்படும். ஆலயம் இலவச தங்குமிடமும் உணவும் வழங்கும்.

பதவிக் காலம்: 2 வருடங்கள்.

தேவை: உதவி அர்ச்சகர்-நிலை 2 (Asst. Religious Worker)

தகமைகள்: விண்ணப்பதாரர் மாலை கட்டுதல், பிரசாதம் சமைத்தல், பிரதம சிவாச்சாரியருக்கு உதவி செய்தல் போன்ற அனுபவம் இருத்தல் வேண்டும்.

கடமைகள்: மாலை கட்டுதல், பிரசாதம் சமைத்தல், பிரதம சிவாச்சாரியருக்கு உதவி செய்தல்.

வேதனம்: மாதம் 1000 + ஓய்வூதியம். வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை வழங்கப்படும். ஆலயம் இலவச தங்குமிடமும் உணவும் வழங்கும்.

பதவிக் காலம்: 2 வருடங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: மேற்குறிப்பிட்ட இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்ப முடிவு திகதி 14-09-2018. விண்ணப்பதாரர் சுய விபரக்கோவையுடன் தபால் மூலம் அல்லது email மூலம் விண்ணப்பிக்கவும்.

**அனுப்ப வேண்டிய விலாசம்:**

General Secretary, Shri Sithi Vinayagar Thvasthanam (Harrow)
Unit B, Rear of 59 Station Road, Harrow, Middlesex HA1 2TY
Email: Sithivinayagarharrow@gmail.com



# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

7ம் பக்கத் தொடர்ச்சி....

# தமிழகத்தின் தவிர்க்க முடியாத

## தலைப்புச் செய்தி நாயகன்!

இத்தனை ஆண்டுகாலம் அதனைத் தக்கவைத்துக் கொள்வதும் அத்தனை சாதாரண விஷயம் அல்ல!

கருணாநிதி இந்தக் கட்சிக்குத் தலைவர் ஆகும்போது 46 வயது. அவரைவிட சீனியர்கள், சூப்பர் சீனியர்கள் கழகத்தில் குவிந்து கிடந்தார்கள். சமீப வருடங்களில் ஒரு வீரபாண்டி ஆறுமுகத்திடம் கருணாநிதி பட்ட கஷ்டத்தைப் பார்த்தோம். ஆனால், அன்று 100 வீரபாண்டி ஆறுமுகங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். அனைவரையும் அரவணைத்துத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதுதான் ஜனநாயக அரசியல் காலகட்டத்தில் கவனிக்கத்தக்கது என்றால், இந்திய அரசியல் தலைவர்களிலேயே முதல் பரிசுக்குத் தகுதியானவர் கருணாநிதி மட்டும்தான்.



பேராசிரியர் அன்பழகன் என்ற ஓர் உதாரணம் போதும். ‘கருணாநிதியைத் தளபதியாக வேண்டுமானால் ஏற்றுக்கொள்வேனே தவிர, தலைவராக ஏற்க மாட்டேன்’ என்று கடற்கரைக் கூட்டத்தில் வங்காள விரிகுடாவைச் சாட்சியாக வைத்துக்கொண்டு கர்ஜித்தவர் அவர். ‘கலைஞரை நான் ஏன் தலைவராக ஏற்றுக்கொண்டேன் தெரியுமா?’ என்று இன்று ஒவ்வொரு கூட்டத்திலும் அன்பழகன் விளக்கம் அளிக்க வேண்டிய அளவுக்கு கருணாநிதியின் பிம்பம் பிறகு உயர்ந்தது. ‘அண்ணா இருந்த இடத்தில் கருணாநிதி எல்லாம் தலைவரா?’ என்று கேட்டவர்கள் எல்லாம், ‘நல்லவேளை... கருணாநிதி தலைவர் ஆனார். அவர் இல்லாமல் போனால் கட்சியே இருந்திருக்காது’ என்று சீனியர்கள் பலரையும் இறுதிக்காலத்தில் சொல்ல வைத்தவர் கருணாநிதி.

கருணாநிதியைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் ஒரு பலசாலிக்குப் பின்னால் தனது பேதங்களை விட்டொழித்து தி.மு.க. ஒன்று சேர்ந்திருக்கிறது’ என்று 1969-ல் ‘ஸ்டேட்ஸ்மேன்’ பத்திரிகை எழுதியது. தன்னைத் தேர்ந்தெடுத்ததற்குப் பரிகாரமாக 45 ஆண்டுகள் இந்தக் கட்சியைக் காப்பாற்றிக் கொண்டு வந்து பலசாலி மட்டும் அல்ல, பெரும்பலசாலி என்பதை நிரூபித்துவிட்டார் கருணாநிதி. மனவலிமை இருந்தால் எந்த எதிர்ப்பு மலையையும் உடைக்கலாம் என்பதற்கு உதாரணமாகவும் மாறிவிட்டார். கருணாநிதியிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடம் இது.

அதேசமயம், எல்லா மனிதருக்கும் இன்னொரு பக்கம் உண்டு. அது கருணாநிதிக்கும் உண்டு. தன் மனதுக்குப் பட்டதை யாருக்கும் விட்டுத்தராமல், யார் என்ன விமர்சித்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் சுய சிந்தனையாளராக வலம் வந்த கருணாநிதியின் வளர்ச்சிக்கான தடைக் கற்கள் அவரது குடும்பத்துக்குள் இருந்தே வந்தன. ‘வாரிசுகள் வரட்டுமே... இதில் என்ன தப்பு?’ என்று ஆரம்பத்தில் வழி அமைத்துக் கொடுத்தார். ஒன்றுக்கும் மேற்பட்ட சக்திகள் கிளம்பி, அண்ணா அறிவாலயத்துக்கே ஐந்து வாசல்களைத் திறக்கும் சூழ்நிலை ஏற்பட்டதை கருணாநிதி உணர்வதற்குள், அந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் மன்னை நாராயணசாமி, எஸ்.கணேசன், கோ.சி.மணி-என்று மூன்று கோஷ்டிகளையும் ஒரே இடத்தில் உட்கார்த்தி வைத்துச் சமாதானம் பேசிய துணிச்சல் மிகுந்த கருணாநிதிக்கு, கோபாலபுரத்துக்குள் அந்தத் துணிச்சல் கைகொடுக்கவில்லை. அங்குதான் அந்த பலசாலியின் கோட்டையில் ஓட்டை விழுந்தது!



இது சொந்தக் கட்சியில் மட்டுமல்ல... அவரது அரசியல் நிலைப்பாடுகளுக்கே முட்டுக்கட்டை போடும் அளவுக்கு வளர்ந்தது.

ஈழத்தில் இறுதிப் போர் நடந்த 2009 பிப்ரவரி 3-ம் நாள், சென்னை ராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்து தாடி முளைத்த நிலையில் தள்ளுவண்டியில், ராஜினாமா முடிவோடு வந்த கருணாநிதியைத் தடுத்ததும் அந்தக் குடும்பத் தடைக் கற்கள்தான். இத்தனை ஆண்டுகாலம் அவர் எழுப்பி வைத்திருந்த ‘தமிழினத் தலைவர்’ என்ற பிம்பத்துக்குப் பங்கம் ஏற்படுத்தியது குடும்பக் காரணிகள்தான். அப்போது எல்லாம் கருணாநிதியால் எதுவும் செய்ய முடியவில்லை, பழிகளைச் சுமப்பதைத் தவிர!

அந்த மன உளைச்சல்களைக் களைவதற்காக மாலை வேளைகளில் தன்னைத் துதி பாடும் பாராட்டு மேடைகளில் தேடித் தேடி இடம் பிடித்தார் கருணாநிதி. சில மணி நேரப் பாராட்டு விழாக்கள் பல பழிச் சொல்லுக்குத்தான் அவரை ஆளாக்கின.

காங்கிரஸ் திரைச்சீலை அதிகப்படியாகச் சாயம் போன பிறகு, கருணாநிதி அவராகவே கழற்றிப் போட முடிவெடுத்த நேரத்தில், கைத் தட்டத்தான் யாரும் இல்லை. மொத்த அடியையும் வாங்கிக்கொண்டு பலவீனமான நிலையில் குத்தும்போது, காங்கிரஸுக்கே வலிக்கவில்லை. அரசியல் அரங்கில் உரிய நேரத்தில் எடுக்கப்படாத எந்த முடிவும் வீரியம் இழந்து போகும் என்ற எதிர்மறைப் பாடத்தை மிகத் தாமதமாகக் கருணாநிதி உணர்ந்த காலகட்டம் அது.

-இத்தகைய ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும், கருணாநிதி இப்போதும் தமிழ்நாட்டின் தலைப்புச் செய்தி! ●

---

3ம் பக்கத் தொடர்ச்சி..

# எதிரிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவேன்

பலாலியில் இராணுவமுகாம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும், அதன் ஆரம்பகாலப் பணிகள் எவ்வாறானவை என்பதையும் தெரிந்துகொண்டால், தையிட்டி திஸ்ஸ விகாரையின் உண்மையான வரலாற்றை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

இரண்டாம் மகாயுத்தம் முடிந்த ஒரு தசாப்தத்தின் பின்னர் பலாலியில் முதலாவது படைமுகாம் அமைக்கப்பட்டது. இதன் பெயர்ப் பலகையில் TAF II Head Quarters என்று எழுதப்பட்டிருந்தது.

Task Antiforce of Illicit Immigration (சட்டவிரோத குடியேற்ற தடுப்புச் செயலணி) என்பது இந்த முகாமின் பெயர். அக்காலத்தில் வடபகுதிக் கடல் வழியாக சட்டவிரோத குடியேற்றமும். பொருட்கள் கடத்தலும் இடம்பெறுவதாகக் கூறி அதனைத் தடுக்கும் கண்காணிப்புக்கு என இந்தப் படைமுகாம் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையுடன் சம்பந்தப்படாதவகையில் இந்தப் படைமுகாமின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

பின்னர் 1980களின் ஆரம்பத்திலிருந்து படிப்படியாக பலாலியை தலைமையாகக்கொண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன.

இந்த விபரங்களுடன் பார்க்கையில் பௌத்த விகாரையொன்று தையிட்டியில் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. இங்கு பௌத்தர்கள் வெசாக் பண்டிகை கொண்டாடியதற்கான தரவுகளும் கிடையாது.

கோட்டை முனியப்பரைக்; கண்டவரைக் கண்டே பலகாலமாகி விட்டது. என்று தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை பாடிய வரிகளே, தையிட்டி திஸ்ஸ விகாரைக்கும் பொருந்தும்.

வடமாகாண சபையின் முதலாவது ஆளுனராகவிருந்த சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியாக பணியாற்றியவர்.

இப்போதிருக்கும் ஆளுனர் குரே தென்னிலங்கையில் சிங்களத்தைக் காவல்புரியும் ஓர் அரசியல்வாதியாக இருந்தவர். இவர்கள் இருவரது கனவும் நினைவும் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதே.

தமிழ் மக்களால் தங்கள் பிரதிநிதிகள் என்று நாடாளுமன்றம் அனுப்பப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஆதரவுமின்றி (கடுமையான எதிர்ப்புடன்) முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியல் பயணத்தை மேற்கொண்டு வருவதைப் பார்க்க முடிகிறது.

சில சந்தர்ப்பங்களில் ஆளுனர் குரேக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் சிலர் சேர்ந்து இயங்குவதையும் காணமுடிகிறது.

முதலமைச்சர் தமது அரசியல் பயணத்தை அடுத்த மாகாண சபையிலும் தொடர வேண்டுமென பெருமளவான பொதுமக்கள் வேண்டுகின்றனர்.

கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ் அரசியல் அமைப்புகளும் இத னை விரும்புகின்றன.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளின் பிரமுவர்கள்கூட இதனையே விரும்புகின்றனர். முதலமைச்சர் தமது அரசியல் பயணத்தைத் தொடரவேண்டுமானால், 2013ல் ஏறிவந்த படகைவிட்டு இறங்கி புதிய படகில் ஏறவேண்டிய சூழ்நிலை உருவாகிவருவது தெரிகிறது. இலங்கைத் தமிழரின் அரசியல் பாதை எப்போதும் சூறாவளியில் சுழலும் படகுப் பயணம் போன்றது.

இதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டும் எவ்வாறு வதிவிலக்காக முடியும்? *

---

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி இராமகிருஷ்ணா



யாழ். இளவாலையை பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டியையும், லண்டன் ஹாரோவையும் வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி இராமகிருஷ்ணா அவர்கள் (முன்னாள் பணிப்பாளர், கல்வி அமைச்சு கொழும்பு, முன்னாள் விரிவுரையாளர் ஆசிரிய பயிற்சி கல்லூரி கோப்பாய் & பலாலி) லண்டனில் 20.8.2018 திங்கட் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்ற ராமகிருஷ்ணா (முன்னாள் சிரேஷ்ட நிறைவேற்று நிர்வாக அதிகாரி, பிரவுன் அண்ட் கோ கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் புவிராமின் ஆருயிர் தாயாரும், உசனை சேர்ந்த சிந்துஜாவின் ஆசை மாமியும்,

இளவாலையை சேர்ந்த காலம்சென்ற சுப்ரமணியம் ஞானேஸ்வரி தம்பதிகளின் பாசம் மிக்க மகளும் சுன்னாகத்தைச் சேர்ந்த காலம்சென்ற கதிர்மணியம் – அன்னபூரணி தம்பதிகளின் நேசம் மிக்க மருமகளும்,

காலம்சென்ற ராஜேஸ்வரி, காலம்சென்ற மகேஸ்வரி, ஜெகதீசன்(கனடா) ஆகியோரின் அருமை சகோதரியும், காலம்சென்ற செந்தில்வேல்ராஜா, காலம் சென்ற கதிர்காமத்தம்பி, திருமலர், காலம்சென்ற கிருஷ்ணதாய், காலம் சென்ற விஜயலஷ்மி, சிவகாந்தி, காலம்சென்ற ஜெயலஷ்மி, காலம்சென்ற துரையப்பா, ஆனந்தலஷ்மி ஆகியோரின் பிரியமான மைத்துனியும்

சிவராஜா மஹாலஷ்மி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவர்.

ஈமகிரியைகள் 26/08/2018 ஞாயிறு Hendon Crematorium Holders hill road Mill hill London. NW7 9BNல் நடைபெற்றது.

**தொலைபேசி தொடர்புகளுக்கு :**

**Buviram (London)-07545878413**

**Sinthu Siva (London) -07946664858**

**ஜெகதீசன் (கனடா)-0014663351264**


LycaFly
Call 0207 132 32 32
lines open 24x7
FLY TO
COLOMBO
from
£372
return
46kg
FLIGHT OFFERS
Chennai fr £349 40kg
Mumbai fr £330 40kg
Dubai fr £263 23kg
Trichy fr £342 40kg
Delhi fr £325 40kg
Bangkok fr £360 46kg
Kochi fr £339 46kg
Goa fr £372 40kg
Singapore fr £369 46kg
Fares are from and available to subjectivity.
Fly Now Pay Later
FAST, FLEXIBLE, FINANCE FOR TRAVEL
Easy instalments from 3 – 10 months to pay your travel cost.
Enjoy £20 Discount on Your First Installment. Hurry! Limited Availability.
£20
FREE LYCAMOBILE CREDIT
WHEN YOU BOOK WITH US
Terms & Conditions apply. Applicable only for selected bookings
IATA
Wembley
14 Ealing Road, Wembley
London HA0 4TL · 0207 132 0055
East Ham
180 High Street North
East Ham E6 2JA · 0207 132 0056
Canary Wharf
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100
Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.



Lycaremit
Send money home for less
£5 FREE
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*
உலகின் எந்த நாட்டிற்கும்
மிகக் குறைந்த கட்டணத்தில்
மிகக் கூடிய பணமாற்று வீதத்தில்
அதி விரைவாக பணம் அனுப்ப...
Visit www.lycaremit.com
or
one of our branches
Our branches
East Ham (Lycafly)
180 High Street North,
London, E6 2JA,
Wembley
14 Ealing Road,
Wembley HA0 4TL
Visit
lycaremit.com
For more info call
0207 132 0015
Or FREE from your Lycamobile
305
*Free £5 Lycamobile credit is available for customers who send £300 per single transaction or more with Lycaremit during the calendar month. When you register for Lycaremit, you will need to provide us with your Lycamobile number. You will receive the £5 Credit on your Lycamobile number within 3 weeks from the date of your transaction. Offer available until 31/08/2018 and available only once per month per customer. Lycaremit is a trading name of Lycamoney Financial Services Limited, and is authorised and regulated by the Financial Conduct Authority (registration number: 900153). Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number: 08662355.
LMFS
Lycamoney Financial Services Ltd